# ශ්‍රී ලංකා සමාජ ආරක්ෂණ මණ්ඩලය
# இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை
# SRI LANKA SOCIAL SECURITY BOARD

ග්‍රාමීය සංවර්ධන, සමාජ ආරක්ෂණ සහ ප්‍රජා සවිබලගැන්වීම් අමාත්‍යාංශය
கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சு
Ministry of Rural Development, Social Security and Community Empowerment

## වාර්ෂික වාර්තාව සහ මූල්‍ය ප්‍රකාශන
## வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக் கூற்று
## ANNUAL REPORT AND FINANCIAL STATEMENTS

# 2024

''සමාජ ආරක්ෂණ පියස'', අංක : 18, රාජගිරිය පාර, රාජගිරිය.
දුරකථන : 0112 886585 / 0112 886586, ක්ෂණික ඇමතුම් : 0112 886088
වෙබ් අඩවිය : www.ssb.gov.lk ඊ - මේල් : info@ssb.gov.lk

# உள்ளடக்கம்

1. ஆண்டு அறிக்கை தொடர்பான அறிமுகம்……………………………………………………1

2. எமது கருப்பொருள்…………………………………………………………………..….2

3. எமது தொலைநோக்கு செயற்பணி மற்றும் விழுமியங்கள்……………………………… 2

3.1. தொலைநோக்கு…………………………………………………………………......2

3.2. செயற்பணி…………………………………………………………………….....2

3.3. எமது விழுமியங்கள்…………………………………………………………….…2

4. வாழ்த்துச்செய்தி செய்தி…………………………………………………………………..........3

5. இலங்கைப் பாதுகாப்புச் சபையின் பணிப்பாளர் சபை-2024…………………………………..4

6. தணிக்கைக் குழு………………………………………………………………………….…..5

7. பொதுமுகாமையாளரின் விரிவுரை…………………………………………………….……6

8. முகாமைத்துக் குழு-2024……………………………………………………………..…7

8.1. சிரேஷ்ட முகாமையாளர்கள்………………………………………………… ……….….7

8.2.இரண்டாம் நிலை முகாமையாளர்கள்…………………… ………………………….…...8

9. இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை- நிர்வாக அமைப்பு……………………………………9

10. மதிப்பு உருவாக்கல் முறை…………………………………………………….………...10

11. இலங்கை சமூகப்பாதுகாப்பு சபை என்பது யாது?.........................................................................12

11.1.சட்டவாக்க நோக்க்கங்கள்………………………………………………...………12

11.2.கடமைப்பொறுப்புகள்……………………………………………………………….12

11.3.எமது சேவைகள்……………………….…………………………………………..…13

11.3.1 பிரதான ஓய்வூதியத்திட்டங்கள்…………… ………………………..……...............13

11.3.2 விசேட ஓய்வூதியத்திட்டங்கள்……………………………………… ….…..…13

11.4. இத் திட்டத்தின் நலன்கள்……………………………………………………………...13

11.5.சுரகுமா ஓய்வூதியத்திட்டம்……………………………………………………………14

11.5.1. “சுரகும” திட்டத்தின் நலன்கள்………………………………………………14

11.6. “அரசாவ”முன்திட்டமிடல் திட்டம்………………………………………………….....16

11.6.1.“அரசாவ” முன்திட்டமிடல் திட்டத்தின் நலன்கள்……………………………..16

12. நிலையான வளர்ச்சிகளின் இலக்குகள்………………………………………………17

13. முகாமைத்துவகலந்துரையாடல்கள் மற்றும் பகுப்பாய்வு……………………….……19

13.1. சிறப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் முகாமைத்துவ பகுப்பாய்வு-2024…………….19

13.2. 2024 ஆம் ஆண்டிற்காக அதிகபட்ச முன்னேற்றத்தை வழங்கிய ஒருங்கிணைப்பு அதிகாரிகள்…………………………………………………………………23

13.3. 2024 ஆம் ஆண்டிக்கான முதல் தவணை வசுலின் மொத்த அடிப்படையில் அதிகபட்ச முன்னேற்றத்தை வழங்கிய ஒருங்கிணைப்பு அதிகாரிகள………………..…24

13.4. அங்கிகரீக்கப்பட்ட பணியாளர்கள் மற்றும் வெற்றிடங்கள்…………………………...25

13.5. அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்கள் அதிகரித்தல் மற்றும் பணி வெற்றிடங்களை நிரப்புதல்……………………………………………………………...……….25

13.6. 2024 ஆம் ஆண்டிற்கான இடைவிலகல மற்றும் ஓய்வூப்பெறுதல்…………...……26

13.7. பயிற்சி மற்றும் அபிவிருத்திகள்…………………………………………………..27

14. மாவட்ட / பிரிவு/ சபையின் அலகுகளின் பணிகள் ……………………………..……………………………………………………...…28

14.1..நிர்வாக பிரிவு…………………………………………………..………………….28

14.1.1 நிர்வாகப் பிரிவின் பிரதான ஊழியர்கள்…………………………………………………………………..28

14.1.2. கட்டுப்பாட்டு பிரிவின் உண்மையான ஊழியர்கள்…………………….30

14.1.3. பௌதிக வளங்கள் ……………………………………………………..30

14.1.4. தொடர்பாடல் வசதிகள்……………………………………………… 30

14.1.5. போக்குவரத்துவசதிகள்………………………………….……………31

14.1.5.1. தற்போதுள்ள வாகனங்களின் விபரங்கள்(2024.12.31 தினத்திலிருந்து)……………………………………….………………31

14.1.6. நிர்வாகப்பிரிவின் கட்டுப்பாடுகள ……………...……………………….……32

14.2. சமூகப் பாதுகாப்புப் பிரிவு

14.2.1. பிரதான செயற்பாடுகள்………………………………………………………33

14.2.2. கொடுப்பனவின் நலன்கள………………………………………………...33

14.2.3. சேவை அலகுகள் மற்றும் மாவட்ட அலுவலகங்கள்…………………....………33

14.2.4.பிரேரணைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல் மற்றும் தொடர்புபடும் அலுவலர்கள் ……………………………………………………………………………………...…...……33

14.2.5. சமூகப்பாதுகாப்பு பிரிவின் பிரதான அலுவலகத்தின் பதவியணி-2024.12.31 தினத்திலிருந்து ……………………………………………………………………………………..…...34

14.2.6.சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத்திட்டம்……………………………………………..……34

14.2.7. புதிய அங்கத்தவர்களை ஆட்சேர்ப்புச் செய்வதன் வருடாந்த முன்னேற்றம்……..…...35

14.2.8. 2024 ஆம் ஆண்டிற்கான கொடுப்பனவு நலன்கள ……………………………..….36

14.2.9. 2024 ஆம் வருடத்தில் பங்களிப்பாளர்களிடம் இருந்து சேகரிக்கப்பட்ட தொகை…...36

14.2.10. 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பயிற்சிகள் மற்றும் நடமாடும் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம்…………………………………………………………………...36

14.2.11. சமூகப் பாதுகாப்பு பிரிவின் வரையறைகள்……………………………………..…36

14.3. நிதிப் பிரிவு………………………………………………………………………..37

14.3.1. கடமைப் பொறுப்பு……………………………………………………………..….37

14.3.2. 31.12.2024 ஆம் ஆண்டின் நிலவரப்படி நிதிப்பிரிவின் பணியாளர்களின் எண்ணிக்கை38

14.3.3. நிறுவனத்திற்கு சொந்தமான சொத்துக்கள் ……………………………………....38

14.3.4. 2024 ஆம் ஆண்டிற்குரிய திறைச்சேரியிலிருந்து பெறப்பட்டவை……………………..38

14.3.5. பிற அடைவுகள்…………………………………………………………………...39

14.4 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு……………………………………………………...39

14.4.1.கடமைப் பொறுப்பு……………………………….............……….39

14.4.2.விடயப் பரப்பு……………………………...............………………40

14.4.3.உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் பிரதான பணியாளர்கள்...............40

14.4.4.கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள……………………………..............40

14.4.5.2024 ஆம் ஆண்டின் சமர்ப்பிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வு அறிக்கைகள்..........................................................................................40

14.4.6. மாவட்ட அலுவலக ஆய்வு…………………………..……..................…41

14.4.7.பிரதேச செயலகங்களின் ஆய்வு…………………………………..……….41

14.4.8.விசேட ஆய்வு அறிக்கை.......................................................................41

14.5.தகவல் தொழில்நுட்ப அலகு........................................................................................41
14.5.1.பிரதான செயற்பாடுகள்.......................................................................................41
14.5.2. 2024 ஆம் ஆண்டில் தகவல் தொழிநுட்ப பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்..................................................................................................................41
14.5.3.தகவல் தொழிநுட்ப பிரிவின் பதவியணி.....................................................................42
14.6. மேம்பாட்டுப் பிரிவு .................................................................................................42
14.6.1.பிரதான பணிகள.........................................................................................42
14.6.2.2024 ஆண்டில் மேம்பாடு மற்றும் ஊடக பிரிவுகளால் மேற்கொண்ட பணிகள்..........................................................................................................................43
14.6.3. மேம்பாட்டு பிரிவின் பதவியணி...............................................................................43

15. கடந்த 10 ஆண்டுகளின் நிதி முன்னேற்றத்தில் விசேட சந்தர்ப்பங்கள்..................44
16. நிதிப் பகுப்பாய்வு மற்றும் தொழில்பாட்டு செயலாற்றுகை...................................47
17. துணை குழுக்கள்...........................................................................................................48
- கணக்காய்வு குழு அறிக்கை.........................................................................................48
- முதலீட்டு குழு அறிக்கை.................................................................................................50
18. கணக்காய்வாளர் அதிபதி அறிக்கை.............................................................................52
-2024 கணக்காய்வு அறிக்கை தொடர்பில் முகாமைத்துவத்தின் கருத்துகள்..........61
- இறுதி கணக்குகளின் கூற்றுகள்........................................................................72
நன்றி.................................................................................................................................92

## 1 ஆண்டு அறிக்கை தொடர்பான அறிமுகம்

### அறிக்கையின் உள்ளடக்கம்

2024 ஆம் ஆண்டின் உள்ளடக்கம் 2024 ஜனவரி 01 தொடக்கம் 2024 டிசெம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப் பகுதியில் தலைமை அலுவலகம், 25 மாவட்ட அலுவலகங்கள் மற்றும பிரதேச செயலகங்கள் மட்டத்தில் நடைமுறைப்படுத்தும் தொழில்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதேபோன்று இவ்வறிக்கையில் நிதிசார் முன்னேற்றம், பல ஆண்டுகளின் நிதிசார் ஆய்வும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அதேபோன்று இறுதி நிதிசார் அறிக்கைகள் தொடர்பாக கணக்காய்வாளர் அதிபதியின் அபிப்பிராயம் மற்றும் அறிக்கைகள், அது தொடர்பான முகாமைத்துவத்தின் அபிப்பிராயமும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### அறிக்கையின் நோக்கங்கள்

இந்த அறிக்கை இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் 29 ஆவது வருடாந்த அறிக்கையாவதுடன், இவ்வறிக்கையானது, நோக்கங்கள், நிறுவனத்தின் 2024 ஆம் ஆண்டின் பயனாளிகள் மற்றும் மற்றைய தரப்புகளிடம் வழங்கியுள்ள சேவை தொடர்பான விரிவான விபரங்களை வழங்குகின்றது.

அதேபோன்று அதன் மூலம் மூலோபாயங்கள். நிருவாகம் மற்றும் நிதி முகாமைத்துவம் தொடர்பான விபரங்களும் சமர்ப்பிக்கப்படுவதுடன், அதன் நிதிசார் செயலாற்றுகை மற்றும் சபையின் திருப்புமுனைகள் தொடர்பான சாராம்ச விபரமும் சமர்ப்பிக்கப்படுகின்றன

அறிக்கை அளவு ரீதியானதும் தரத்துடன் கூடியதுமான தரவுகளைக் கொண்டுள்ளதுடன், ஒப்பிடுதல் மற்றும் கூடுதலான ஆய்வுகளின் பொருட்டு வசதிகளை வழங்குவதற்காக இயன்ற எல்லா இடங்களிலும் அளவு ரீதியான தகவல்களை வழங்குதல் எமது நோக்கமாகும்.

### மூலேபயத் திசை

ஆண்டு முழுவதும் செயல்த்திறனில் கவனம் செலுத்துவதோடு மட்டுமல்லாமல் பங்குதாரர்களின் மேம்பாட்டிற்கான வாரியத்தின தற்போதைய மற்றும் எதிர்கால பணிகள் பற்றிய நுண்ணறிவை ஆண்டு இந்த ஆண்டு அறிக்கை வழங்குகின்றது.

## 2. எமது கருப்பொருள்

**அரச தொழில் இல்லாத உங்களுக்கு ஓர் அரச ஓய்வூதியம்**

நாள்தோறும் அதிகரித்து வரும் முதியோர் சனத்தொகையுடன், பொதுவாக நாடும் சமூகமும் எதிர்நோக்கும் சவால்களைச் சந்திக்கும் வகையில் எமது சபையின் ஓய்வூதிய திட்டங்களுடன் இணைந்துகொள்வதன் மூலம் எதிர்காலத்தை நிலைப்படுத்திக் கொள்வதறக்கு உதவியாக அமைகின்றது. நாட்டின் அபிவிருத்தியில் பல்வேறு வகையில் பங்களிப்பு வழங்கும் தொழில்முனைவோர், சுயதொழில்களில் ஈடுபடுபவர்கள் மற்றும் அரசு ஓய்வூதியம் பெறாத மக்களின் எதிர்கால பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும், தனக்கு பின்னர் தனது குடும்பத்தின் பாதுகாப்பு, அதேபோன்று தங்கள் குழந்தைகளை பாரம்பரிய அரசு வேலைகளுக்கு அனுப்பாமல் தங்களுக்கு விருப்பமான வேலையை தெரிவு செய்தாலும், அவர்களின் எதிர்கால பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் எமது சபையின் சமூக பாதுகாப்பு திட்டங்களில் பங்களிப்புச் செய்வதன் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளலாம். இலங்கையில் அரசாங்க தொழில்களில் ஈடுபடுவதன் மூலம் மட்டும் எதிர்காலம் பாதுகாக்கப்படுகிறது என்ற கருத்தைப் போக்கி தமது விருப்பம்படி வேலைகளில் ஈடுபட்டு ஓய்வூதிய வாழ்க்கையில் பாதுகாப்பை ஏற்படுத்திக்கொள்வதற்கு இந்த திட்டங்கள் உபயோகப்படுகின்றன.

## 3. எமது தொலைநோக்கு, செயற்பணி மற்றும் விழுமியங்கள்

### 3.1 தொலைநோக்கு

"சமூக பாதுகாப்பு மூலம் பாதுகாக்கப்பட்ட அபிமானத்துன் கூடிய ஓரு தேசம்"

### 3.2 செயற்பணி

"அபிமானத்துடன்கூடிய தேசத்தினைக் கட்டியெழுப்பும் முகமாக சமூக பாதுகாப்புக்கொள்கையை உருவாக்குதல், நடைமுறைப்படுத்தல் மற்றும் ஒழுங்குபடுத்துவதன்மூலம் நல்லாட்சிக் கொள்கையை பின்பற்றி இலங்கைவாழ் மக்களின் பொருளாதார, சமூக, கலாசார, பாதுகாப்புக்கென அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களுடன் மூலோபாயத் தொடர்புகளை கட்டியெழுப்பி நிலைபேறான அபிவிருத்தியை நோக்கிச் செல்லுதல்......."

### 3.3 எங்கள் விழுமியங்கள்

1. **நிதி பாதுகாப்பு :**ஓய்வுப்பெறும் வாழ்க்கையில் நிதி பாதுகாப்பை உறுதி செய்தல்
2. **சமூக பாதுகாப்பு வலையமைப்பு :** பல்வேறு சமூக மற்றும் பொருளாதார சவால்களுக்கு எதிராக பாதுகாப்பு கவசமாக இருத்தல்
3. **நிலைத்தன்மை :** நிலையான இருப்புக்கான தற்போதைய மற்றும் எதிர்கால சந்ததியினரின் சமூக பாதுகாப்பை உறுதி செய்தல்.
4. **தேர்வு மற்றும் புத்தாக்கம் :** தனிநபர் தேர்வு மற்றும் நிதி சாத்திய தன்மைக்கு அமைவாக புத்தாக்க தேர்வுகளுடன் கூடிய சேவை வழங்குதல்.
5. **வலுவூட்டல் :** நிதிசார் திட்டமிடல் மூலம் தனிநபர்களை வலுவூட்டல்

4. வாழ்த்துச்செய்தி செய்தி



சமூகப் பாதுகாப்பு வாரியத்தின் முக்கிய நோக்கம் 1993 ஆம் ஆண்டு இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1996 ஆம் ஆண்டு 17 ஆம் ஆண்டு சமூகப்பாதுகாப்புச் சபை சட்டத்தின்படி அரசதுறைசாரா துறையில் உள்ளவர்களுக்கு அதாவது சுயத்தொழிலாளர்களுக்கு ஓய்வூதியத்திட்டத்தினை அறிமுகப்படுத்தி செயல்ப்படுத்துவதாகும்.மேற்கூறிய குழுவினரால் 30 வருடங்கள் பலத்திட்டங்கள் செயற்ப்படுத்தப்பட்டாலும் இலங்கை சமூகமும் பொருளாதாரமும் இதனால் முழுமையாக பயனடையவில்லை என்பது இவ்விடத்தில் ஒரு அவதானிப்பு ஆகும். பல்வேறு அரசாங்கங்களின் கீழ் சமூகப் பாதுகாப்புச்சபையானது கூடுதலான அல்லது குறைவானதாகவோ ஆதரவினை பெற்றிருப்பினும் இவ் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டங்கள் அனைத்தும் ஏழை மாணவர்களின் நலன்களிலேயே அக்கறை செலுத்தப்படுகின்றது என்பது என் கருத்தாகும்.

தற்போதைய அரசாங்கக் கொள்கையானது “ ஒரு வளமான நாடு ஒரு அழகான வாழ்க்கை கட்டுமானம் சுற்றுலா குடியேற்றம் மற்றும் போக்குவரத்து போன்ற பல துறைகளில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு சமூகப் பாதுகாப்பு மற்றும் ஓய்வூதியத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும்” என்று கூறுகிறது.இந்த முக்கியமான பணியினை நிறைவேற்றும் பொறுப்பானது சமூகப்பாதுகாப்புச் சபைக்கு வழங்கப்பட்டுள்ளது.

எனவே வாரியத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் சட்டத்தால் வழங்கப்பட்ட நோக்கங்களை விரிவான தெளிவினை தருவதன் மூலம் பல்வேறு துறைகளில் ஈடுப்பட்டுள்ள சுயத்தொழில் செய்பவர்களுக்கு சமூகப்பாதுகாப்புப வழங்குவதில் பாடுபட வேண்டும்.மேலும் எங்கள் வாரியத்தின் செயல்திறன் மற்றும் செயல்திறனுக்கான தகவல் தொழிநுட்பத்தினை பயன்படுத்துவது வரும் காலங்களில் அவசரமாக செயல்ப்படுத்தப்படும்.

மேலும் சலுகப்பாதுகாப்பு சபையின் நலன்களுக்கு தங்களை அர்ப்பணித்துக் கொண்ட அனைத்து ஊழியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றேன்



எம்.கே.பி. திஸாநாயக்க
தலைவர்

## 5. இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் பணிப்பாளர் சபை - 2024



**பொறி. திரு.சாந்த திக்வெல்**
**தலைவர்**
இலங்கை சமூக பாதுகாப்பு சபை
(2022.12.21 ஆம் திகதி தொடக்கம்
2024.09.24 ஆம் திகதி வரை)



**திரு .எம் .கெ.பி..திஸானாயக**
**தலைவர்**
இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை
(2024.11.04 ஆம் திகதி வரை)



**பொறி.. திரு.அருண குமாரவடு**
**பணிப்பாளர் சபை உறுப்பினர்**
(2023.05.16 ஆம் திகதி தொடக்கம்
2025.01.30 ஆம் திகதி வரை)



**திருமதி. எம்.எ.பொகொட கெதர**
பணிப்பாளர் சபை
பிரதிநிதியாளர்
(2023.09.08 ஆம் திகதி
தொடக்கம் 2025.01.03 ஆம
திகதி வரை)



**திரு.கே.கே.டீ.குமாரசிறி கன்னங்கர**
**பணிப்பாளர் சபை உறுப்பினர்**
(2023.04.18 திகதி தொடக்கம் 2025.01.30
ஆம் திகதி வரை )



**திரு.கே.எச். வீ.ஜயதிலக்க**
**பணிப்பாளர் சபை உறுப்பினர்**

(2023.04.18 தொடக்கம் 2024.06.27 ஆம் திகதி
வரை )



**திரு.கே.கே.கஜபால**
**பணிப்பாளர் சபை உறுப்பினர்**
(2023.12.08 தொடக்கம் 2024.11.04 பணிப்பாளர் சபை
உறுப்பினர் பதவியில் பணியாற்றியுள்ளார்)



**திரு.கே.கே.கபுருபண்டார**
**பணிப்பாளர் சபை உறுப்பினர்**
(2023.12.08 தொடக்கம் 2024.10.31 பணிப்பாளர் சபை
உறுப்பினர் பதவியில் பணியாற்றியுள்ளார்)

## 6. கணக்காய்வு குழு-2024

1. திருமதி. நிமாலி பொகொடகெதர: (குழு தலைவர் திறைசேரி பிரதிநிதியாளர்)

2. திரு.கே.கே.டீ.குமாரசிறி கன்னங்கர:-குழு பணிப்பாளர் (2024.03.21, 2024.07.17 இருந்து 2024.09.12 ஆம் திகதி வரை கணக்காய்வு குழுவில் பணியாற்றியுள்ளார்.)

3. திரு.கே.எச். வீ.ஜயதிலக்க :- :-குழு பணிப்பாளர்
(2024.03.21 ஆம் திகதி வரை கணக்காய்வு குழுவில் பணியாற்றியுள்ளார்.)

4. திரு.கே.கே.கஜபால:-குழுபணிப்பாளர்
2024.07.17 இருந்து 2024.09.12 ஆம் திகதி வரை கணக்காய்வு குழுவில் பணியாற்றியுள்ளார்.)

### கணக்காய்வு குழு மேற்பார்வையாளர்கள்

திருமதி.டீ.எம்.ஜி.பி.மல்காந்தி :- மேற்பார்வையாளர் (பிரதான உள்ளக கணக்காய்வாளர் அமைச்சு)

திருமதி..எம்.டீ.கே.மலகல/திரு.கே.கருணாரத்ண:- மேற்பார்வையாளர் (தேசிய கணக்காய்வு அலுவலகம்)

## 7.பொதுமுகாமையாளரின் விரிவுரை



அரச ஊழியர்களுக்கான அரசாங்க ஓய்வூதியத்திட்டம்,அரை அரசாங்க மற்றும் தனியார் துறை ஊழியர்களுக்கான சேமநலத்திட்டங்கள் மற்றும் விவசாயம் மற்றும் மீன்ப்பிடித் தொழில்களுக்கான விவசாயிகள் மற்றும் மீனவர்களுக்கான ஓய்வூதியத்திட்டம் என்பவை செயற்பாட்டில் காணப்பட்ட போதிலும் ஆயிரக்கணக்கான சுயத்தொழிலாளர்கள் ஓய்வூதியத்திட்டம் மற்றும் சமூகப் பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் பயனடையாததால் ஏற்ப்பட்ட இடைவெளியினை நிரப்புவதற்காக 1996 ஆம் ஆண்டு இலங்கை சமூகப்பாதுகாப்புச் சபையானது நிறுவப்பட்டது.

உடல் ரீதியான இயலாமை, முதுமை மற்றும் இறப்பு காரணமாக சுயதொழில் செய்பவர்களின் வருவாய் குறைப்பு அல்லது இயலாமை காரணமாக ஏற்படக்கூடிய பொருளாதார மற்றும் சமூக பேரழிவுகளை தவிர்ப்பதற்காக இலங்கை சமூகப்பாதுகாப்புச்சபை ஓய்வூதியத்திட்டம் மற்றும் சமூகப் பாதுகாப்புத்திட்டங்கள் சிறந்த நிவாரண நடவடிக்கையாக செயல்ப்படுத்தப்படுகின்றது.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் 28 ஆண்டுகால பயணத்தில் கடந்த சில ஆண்டுகளில் அடைந்த வளர்ச்சி 2024 ஆம் ஆண்டிலும் தொடர முடிந்தது என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.
2024 ஆம் ஆண்டில் சமூகப்பாதுகாப்பு ஓய்வூதியத்திட்டங்களில் 58,980 புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டதுடன் ஓய்வூதிய நிதியில் ரூபா.770.29 மில்லியன் சேர்க்கப்பட்டது மேலும் ரூபா.461.7 மில்லியன் சலுகைகளாக சமூகமயமாக்கப்பட்டது.

2020 ஆம் ஆண்டில் 25,778 ஆக காணப்பட்ட ஆட்சேர்ப்புக்களின் எண்ணிக்கையானது கடந்த 3 ஆண்டுகளில் முறையே 57,803 56,764 மற்றும் 66,448 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.மேலும் 2020 ஆம் ஆண்டில் 476.56 இருந்த ஓய்வூதிய நிதியானது கடந்த 3 ஆண்டுகளில் முறையே ரூ. 524.69 மில்லியன் ரூ.685.91 மில்லியன் மற்றும் ரூ.932.09 மில்லியனாக அதிகரிக்கப்பட்டுள்ளது.மேலும் 2020 ஆம் ஆண்டில் ரூ.1.86 மில்லியனாக இருந்த நிதியின் முதலீட்டுத் தொகையானது 2020 ஆம் ஆண்டின் இறுதியில் ரூ.3.35 மில்லியனாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்னின் ஊடாக சமூகப்பாதுகாப்புத் திட்டங்களை மேம்படுத்துவதற்கான திட்டங்களை நடத்துவதோடு மட்டுமல்லாது 2023 ஆம் ஆண்டில் சுயத் தொழில் குழுக்களிற்கான தொழிற்பயிற்சி நிறுவனங்கள் மற்றும் பள்ளி மாணவர்களிடையே சுயத்தொழிலை மேம்படுத்துவதற்கான பயிற்சித்திட்டங்கள் மற்றும் சமூகப்பாதுகாப்புத் திட்டங்கள் குறித்தான விழிப்புணர்வுத்திட்டங்களானது நாடு முழுவதிலும் சுமார் 4000 திட்டங்கள் நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கைப் பட்டயக்கணக்காளர்கள் நிறுவனம் மற்றும் இலங்கை பொது நிதிக்கணக்காளர்கள் சங்கம் ஆகியவற்றால் 2023 ஆம் ஆண்டுக்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஆண்டு அறிக்கைகாக ஏற்பாடு செய்யப்பட்ட "சிறந்த வருடாந்திர அறிக்கைகள் மற்றும் கணக்கு விருதுகள்-2023" போட்டியில் எங்கள் சபையானது இரண்டாம் இடத்திற்கான வெள்ளி விருதினை தம் வசமாக்கியது
மாவட்ட செயலாளர்கள் பிரதேச செயலாளர்கள் அஞ்சல் துறை மற்றும் கூட்டுறவு மேம்பாட்டுத்துறை ஆகியவை வாரியத்தின் சமூகப்பாதுகாப்பு திட்டத்தை செயற்ப்படுத்துவதில் பெரும் பலமாக இருந்து வருகின்றது.இருப்பினும் எங்கள் நிதி உறுப்பினர்களிடம் இருந்து திரும்பப் பெறுதல்களை சேகரித்தலை ஒழுங்குப்படுத்துவதற்கும் திறமையின்மையை குறைப்பதற்கும் புதிய தொழிநுட்பத்துடன் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல் ஸ்ரீ லங்கா சமூகப்பாதுகாப்பு திட்ட சட்டத்தில் தேவையான திருத்தங்களை செய்தல் மற்றும் புதிய கவர்ச்சிகரமான திட்டங்களை அறிமுகப்படுதல்கள் என்பவை எதிர்கால சவால்களாகும் அதற்கான திட்டமானது 2024 இல் செயல்ப்படுத்த தொடங்கியுள்ளது.

2024 ஆம் ஆண்டின் உயர் செயற்றிறனை அடைய உறுதுணையாக செயலாற்றிய இத் துறைக்கு பொறுப்பான அமைச்சர்கள் கிராமப்புற அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் மக்கள் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் செயலாளர்கள் இத் துறைக்கு பொறுப்பான கூடுதலட செயலாளர்கள் இலங்கை சமூக பாதுகாப்பு வாரியத்தின் தலைவர் மற்றும் இயக்குநர்கள் குழு மற்றும் இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் அனைத்து ஊழியர்களுக்கும் தலைவர் உட்பட அனைவருக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

பொதுமுகாமையாளர்
ஸ்ரீ லங்கா சமூகப் பாதுகாப்பு சபை
2025.06.30

## 8.முகாமைத்துவ குழு (2024.12.31 )

### 8.1சிரேஷ்ட முகாமைத்துவம்



**திரு.கே.ஏ.எஸ்.ஜீ.களுஆராச்சி**
முகாமையாளர்
தொலைபேசி :-+94112886581
தொலைநகல்:- +94112886581
ஈமெயில் :-gm@ssb.gov.lk



**திருமதி.கல்ஹாரி த சில்வா**
பிரதிமுகாமையாளர்(சமூகப் பாதுகாப்பு)
தொலைபேசி :-+94112886582
தொலைநகல்:- +94112886582
ஈமெயில் :-dgm.socialsecutiry@ssb.gov.lk



**திரு.கே.பி.ஜீ.எம்.என்.காரியவசம**
பிரதிமுகாமையாளர்(நிதி)
தொலைபேசி :-+94112886583
தொலைநகல்:- +94112886583
ஈமெயில் :-dgm.finance@ssb.gov.lk



**திரு.கபில நியோஜன**
உதவிமுகாமையாளர்(ஆட்சேர்ப்பு மற்றும் மாவட்ட நிர்வாகம்)
தொலைபேசி :-+94115745357
தொலைநகல்:- +94112886582
ஈமெயில் :-agm.socialsecurity@ssb.gov.lk



**திருமதி.சாமலி பிரின்ஸி ஹெட்டிஆராச்சி**
பிரதிமுகாமையாளர்(ஓய்வூதியம்/ காப்புறுதி)
தொலைபேசி :-+94112889220
தொலைநகல்:- +94112886582
ஈமெயில் :-agm.pension.ins@ssb.gov.lk



**திருமதி.தயானி புஸ்பலதா**
பிரதிமுகாமையாளர்(நிர்வாகம்)
தொலைபேசி :-+94112886585-86



**திரு.அஜித் குமார**
உள்ளக கணக்காய்வாளர்
தொலைபேசி :-+94112865820
தொலைநகல்:- +94112865820
ஈமெயில் :-int.audit@ssb.gov.lk

## 8.2 மூன்றாம் நிலை முகாமைத்துவம்



**திருமதி.எம்.எம்.மானலே ஜயசேகர**
முகாமையாளர்(சான்றுறுதிச் சேவை)
தொலைபேசி :-+94112886585-86
ஈமெயில்:-mgr.policy@ssb.gov.lk



**திருமதி.எம்.ஜீ.பி.சிரானி**
கணக்கு உத்தியோகத்தர்(நிதி)
தொலைபேசி :-+94112886585-86
ஈமெயில் :-mgr.finance@ssb.gov.lk



**திரு.ஏ.எஸ்.லக்மால்**
சமூகப் பாதுகாப்பு உத்தியோகத்தர்(மேம்பாடு)
தொலைபேசி :-+94112886585-86
ஈமெயில் :-mgr.promotion@ssb.gov.lk



**திருமதி.எம்.எஸ்.யு.கருணாரத்ன**
சமூகப் பாதுகாப்பு
உத்தியோகத்தர்(ஓய்வூதியம்)
தொலைபேசி :-+94112886585-86
ஈமெயில் :-mgr.pension@ssb.gov.lk



**திருமதி.எச்.ஜீ.எம்.லக்மாலி ஆரியதாச**
சமூகப் பாதுகாப்பு உத்தியோகத்தர்(தகவல் தொழிநுட்பம்)
தொலைபேசி :-+94112886585-86
ஈமெயில் :-mgr.it@ssb.gov.lk



**திருமதி.பி.ஜீ.எஸ்.குமாரி கருணாரத்ன**
சமூகப் பாதுகாப்பு
உத்தியோகத்தர்(கூட்டங்கள்)
தொலைபேசி :-+94112886585-86
ஈமெயில் :-mgr.collection@ssb.gov.lk



**திரு.ஜீ.பிரதீபன்**
சிரேஷ்ட ஒருங்கிணைப்பு
உத்தியோகத்தர்
(வடக்கு கிழக்கு மாகாணங்கள்



**திரு.ரஞ்சித் திஸாநாயக்க**
சிரேஷ்ட ஒருங்கிணைப்பு
உத்தியோகத்தர்
(மத்திய வடமேல் மற்றும் வடகிழக்கு மாகாணங்கள்)



**திருமதி .எஸ்.எச்.எம்.சிரியலதா**
சிரேஷ்ட ஒருங்கிணைப்பு
உத்தியோகத்தர்
(சப்ரகமுவ மாகாணங்கம் மற்றும் விசேட கருத்திட்டம-2)



**திருமதி.கே.ஜீ.ஏ.சந்திரா மாலினி**
சிரேஷ்ட ஒருங்கிணைப்பு
உத்தியோகத்தர்
(தென் மற்றும் ஊவா மாகாணம்)



**திரு.டீ.எம்.எஸ்.கே.கே.தஸநாயக**
சிரேஷ்ட ஒருங்கிணைப்பு
உத்தியோகத்தர்
(மேல் மாகாணம் மற்றும் விசேட கருத்திட்டம்-3)

## 9.இலங்கை சமூகப்பாதுகாப்புசபையின் நிர்வாக அமைப்பு



## 10.மதிப்பு உருவாக்கல் முறை

**மதிப்பு செயல்படுத்துவர் (உள்ளீடு)**

**முதலீட்டு மூலதனம்**

- உறுப்பினர்களின் முதலீடு – ரூபா. மில்லியனில் 3,422.25

**உறுப்பினர்களின் மூலதனம்**

- மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை -1,023,351

**சேவையாளர்களின் மூலதனம்**

- மொத்த ஊழியர்கள் -150
- 25% க்கும் மேற்பட்ட ஊழியர்கள் குழுவில் 10 ஆண்டுகளுக்கு மேலான அனுபவத்தை கொண்டுள்ளனர்.
- திறமையான பயிற்சி பெற்ற மற்றும் தகுதிவாய்ந்த ஊழியர்கள்

**பங்காளர்களின் மூலதனம்**

- கிராமப்புற மேம்பாடு சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக அதிகாரமளித்தல் அமைச்சகம்
- நிதி அமைச்சகம்
- தேசிய தணிக்கை அலுவலகம்
- பொது நிர்வாகம் மற்றும் மேலாண்மை அமைச்சகம்
- மாவட்ட செயலாளர்கள் பிரதேச செயலாளர்கள்
- சமூக சேவை அதிகாரிகள் கிராம உத்தியோகத்தர்கள்
- மக்கள் வங்கி இலங்கை வங்கி தேசிய சேமிப்பு வங்கி
- அஞ்சல் துறை
- கூட்டுறவு கிராமப்புற வங்கி வலையமைப்பு

**சமூக மற்றும் பிரஜைகளின் மூலதனம்**

- உழைக்கும் மக்கள்

**மதிப்பு உருவாக்க (செயல்முறைகள்)**

**தொலைநோக்கு நோக்கம் மற்றும் பொறுப்புகள்**

**இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள்**

**உத்திகள் மற்றும் செயல்பாடுகள்**

**அடிப்படை செயற்பாடுகள்**

- அரசு ஓய்வூதியம் பெற தகுதியற்றவர்களின் வாழ்க்கையை பாதுகாக்க சுரகுமா போன்ற ஓய்வூதியத்திட்டங்களை முன்வைத்தல்
- திடீர் இறப்பு மற்றும் இயலாமைக்கான நிவாரணம் வழங்குதல்
- ஓய்வூதியம் மற்றும் சமூகப்பாதுகாப்பு சலுகைகள் திட்டத்தை செயல்ப்படுத்தல்

**இரண்டாம் நிலை செயற்பாடுகள்**

- நிதி
- தகவல் தொழிநுட்பம்
- மனித வளங்கள்
- உள்ளக தணிக்கை

1996 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சமூகப்பாதுகாப்பு வாரியச் சட்டம் மற்றும் 1999 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க சமூகப்பாதுகாப்பு வாரிய (திருத்தம்) சட்டம் ஆகியவற்றால் நிறுவப்பட்டது.

உருவாக்கப்பட்ட மதிப்பு (வெளியீடு)

முதலீட்டாளர்கள்

- முதலீடு செய்யப்பட்ட தொகை- ரூ.314.64 மில்லியன்
- முதலீட்டின் மீதான வருமானம் - ரூ.33.60 மில்லியன்

உறுப்பினர்கள்

- 2024 ஆம ஆண்டின் ஆட்சேர்ப்பின் எண்ணிக்கை – 55980
- 2024 ஆம் ஆண்டின் சேகரிக்கப்பட்ட முதல் தவணையின் மதிப்பு- ரூ.167.42 மில்லியன்

சேவையாளர்கள்

- தனிப்பட்ட செலவுகள் - ரூ.126.03 மில்லியன்

பிரஜைகள்

- ஓய்வூதியக்கொடுப்பனவு –ரூ.426.41 மில்லியன்
- இறப்பிற்கான கொடுப்பனவு -ரூ. 0.533 மில்லியன்
- ஊனமுற்றோர் கொடுப்பனவு- ரூ.0.63 மில்லியன்
- கூடுதல் சலுகைகள்- ரூ.8.923 மில்லியன்
- பங்களிப்புகள்- ரூ.25.20 மில்லியன்

# 11.இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை" என்பது யாது?

## 11.1சட்டவாக்க நோக்கங்கள்

1999 ஆம் ஆண்டு 33 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்ட 1996 ஆம் ஆண்டு 17 ஆம் இலக்க சமூகப் பாதுகாப்புச் சபை சட்டம் மற்றும் 2006 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 25 ஆம் திகதி 1464/ 05 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதி 04 இன் படி ஓய்வூதிய உரித்து கிடைக்கப்பெறாத அல்லது ஓய்வூதியத்துடன் கூடிய பதவி வகிக்காத சேவையில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் சமூக பாதுகாப்பு மற்றும் ஓய்வூதிய நலன்கள் திட்டம் நடைமுறைப்படுத்தல் பிரதான நோக்கமாகும்.

அதன் படி,

- சுயதொழில் செய்பவர்களுக்கு அவர்களின் வயதான காலத்தில் அல்லது அவர்கள் இயலாமைக்கு ஆளாகும் போது அவர்களுக்கு சமூகப் பாதுகாப்பை வழங்குதல்.
- சுயதொழில் செய்பவர்கள் இறந்தால், அவர்களைச் சார்ந்தவர்களுக்கு நிவாரணம் வழங்குதல்
- சுயதொழில் செய்பவர்களை அந்தந்த தொழில்களில் ஈடுபட ஊக்குவித்தல் மற்றும் அவர்களின் ஆற்றல்கள் மற்றும் திறன்களை மேம்படுத்துதல்.
- சுயதொழில் செய்யும் இளைஞர்களை ஊக்குவித்து அவர்களின் திறன்களை மேம்படுத்தல்.
- அணித்திரட்டல் மற்றும் வளமுகாமைத்துவத்தின் நன்மைகள் பற்றி சுயதொழில் செய்பவர்களுக்கு தெளிவூட்டல்.
- சுயதொழில் செய்பவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்.

## 11.2 கடமைப்பொறுப்புகள்

அரச ஓய்வூதியம் உரித்தற்ற நபர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புப் நலன்களை வழங்குதல் இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் கடமைப் பொறுப்பாகும்.

1996 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபைச் சட்டத்தின் பிரகாரம், 2006 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 25 ஆம் திகதிய 1464/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலினூடாக பிரகடனஞ் செய்யப்பட்ட 06 திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன.

பொருளாதார ரீதியில் விளைத்திறனான பிரேரணைத் திட்டங்களைச் செயற்படுத்துதல், அங்கத்தவர்களுக்கு உயர் மற்றும் பாதுகாப்பான ஓய்வூதியக் காப்பீட்டினை வழங்குதல் என்பன நோக்கமாகக் கொண்டு தற்போது "சுரக்கும" திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

"சுரக்கும" திட்டத்திற்கு 18 தொடக்கம் 59 வயது வரை, அரச ஓய்வூதியம் உரித்தற்ற நபர்கள் பங்களிப்புச் செய்ய முடியும் என்பதுடன், தவணைக் கட்டணத்தினைச் செலுத்தும் ஆற்றலுக்கமைவாக அங்கத்தவர், தேவையானளவு ஓய்வூதியத்தினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

2012 ஒக்டோபர் 11 ஆம் திகதி நினைவுகூறப்பட்ட "பெண் குழந்தையின் சர்வதேச தினம் முன்னிட்டு" அதற்கு இணையாக "ஆரஸ்ஸாவ" முன் திட்ட சமூகப் பாதுகாப்புப் நலன் பிரேரணைத் திட்டம் அறிமுகஞ் செய்யப்பட்டது. அத் திட்டத்தில் 18 வயதிற்குக் குறைந்த பிள்ளைகள், தமது பெற்றோர்/பாதுகாவலர் பொறுப்பின் கீழ் அங்கத்துவம் பெறுவதற்கு முடியுமென்பதுடன், 18 வயது பூர்த்தியானதன் பின்னர் அவர்களை "சுரக்கும" ஓய்வூதியத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டு கணக்கில் காணப்படும் மீதியின் பிரகாரம் ஓய்வூதிய உரித்து வழங்கப்படும்.

## 11.3 எமது சேவைகள்

அரசாங்கத்தின் ஓய்வூதியத்திற்கு தகுதியற்ற பல்வேறு இலக்கு குழுக்களுக்கு ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்துவதும் செயல்படுத்துவதும் முக்கியமான சேவையாகும். இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையினால் சில ஓய்வூதியத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

### 11.3.1. பிரதான ஓய்வூதியத் திட்டங்கள்

- **"சுரகும**" ஓய்வூதியத் திட்டம் மற்றும் சமூகப் பாதுகாப்பு திட்டம்.
- **"ஆரஸ்ஸாவ**" முன் திட்டமிடல் ஓய்வூதிய திட்டம்.

### 11.3.2. விசேட ஓய்வூதிய திட்டங்கள்

விசேட இலக்கு குழுக்களின் பொருட்டு அவர்களின் தேவைக்மைவாக அறிமுகப்படுத்தியுள்ள சமூகப் பாதுகாப்பு ஓய்வூதிய திட்டங்கள்

- "**கலாகரு**" ஓய்வூதிய திட்டம்
- **"நாவிகயா**" சமூகப் பாதுகாப்பு திட்டம்.
- **"மனிதர்கள்**" சமூகப் பாதுகாப்பு திட்டம்.
- "**புதுபுத் மாபிய ஹரசர**" ஓய்வூதிய மற்றும் சமூகப் பாதுகாப்பு திட்டம்

## 11.4 இத் திட்டத்தின் நலன்கள்

- 60 வயதிலிருந்து உயிர்வாழும் காலம் வரை அங்கத்தவருக்கு மாதாந்த ஓய்வூதியம் வழங்குதல்.
- அங்கத்தவர் ஓய்வூதியராக மரணிக்கும் வேளையில் அங்கத்தவரின் 80 வயது வரை வாழ்க்கைத் துணைக்கு ஓய்வூதியக் கொடுப்பனவினை வழங்குதல்.
- நிரந்தர பகுதியளவிலான அங்கவீனத்தின்போது வயதின் பிரகாரம் சீர்செய்ய-ப்பட்ட ரூபா. 25,000/- வரை பணிக்கொடைக் கொடுப்பனவு மற்றும் குறிப்பிட்ட தவணைக் கொடுப்பனவின் பிரகாரம் 60 வயதிலிருந்து ஓய்வூதியம் வழங்குதல்.
- நிரந்தர முழுமையான அங்கவீனத்தின்போது வயதின் பிரகாரம் சீர்செய்யப்பட்ட ரூபா. 50,000/- வரை பணிக்கொடை மற்றும் தேறிய பங்களிப்பு நிதி அல்லது அங்கவீனம் ஏற்பட்ட தினத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்படும் மாதாந்த ஓய்வூதியம் வழங்குதல்.
- ஓய்வூதியம் கிடைப்பதற்கு முன்னர் அங்கத்தவர் மரணிப்பின், அவர்களை சார்ந்தோர்களுக்கு ஒரு தடைவை வழங்கப்படும் பணிக்கொடையினை வழங்குதல்.

திட்டத்தில் அங்கத்துவத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு சபையின் தலைமை அலுவலகம், மாவட்ட அலுவலகங்கள், பிரதேச செயலகங்கள், கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் வேறு அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர்களினூடாக மேற்கொள்ளலாம்.

தவணைப் பணக் கொடுப்பனவினை, இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, அஞ்சல் அலுவலகங்கள் மற்றும் அதிகாரம் ஒப்படைக்கப்படும் கிராம உத்தியோகத்தர்களினூடாகவும் மற்றும் இச்சபையின் அலுவலகங்களினூடாகவும் செலுத்த முடியும்.

## 11.5 "சுரகும" ஓய்வூதியத் திட்டம்



**18 வயதுக்கு மேற்பட்ட மற்றும் 59 வயதுக்கு மேற்படாத அரசாங்கத்தின் ஓய்வூதியத்துடன் கூடிய தொழிலில் ஈடுபடாத நபர்களின் பொருட்டு நடைமுறைப்படும் திட்டமாகும். இதன் கீழ், அங்கத்தவராக விரும்புபவருக்கு அவரது தேவை மற்றும் பங்களிப்புகளை செலுத்தும் திறனுக்கு ஏற்ப எந்தவொரு தொகைக்கும் ஓய்வூதியம் தயாரிக்கும் திறன் உள்ளது.**

### 11.5.1. "சுரகும" திட்டத்தின் நலன்கள்

- **ஓய்வூதியம்**

  உறுதி முதிர்ச்சியடைந்த உறுப்பினருக்கு (60 வயதுக்கு மேல்) வாழ்நாள் முழுவதும் உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியம் மாதந்தோறும் வழங்கப்படும். அனைத்து தவணைப் பணத் தொகையும் உரிய வகையில் முழுமையாக செலுத்தப்பட்டால், ஒரு உறுப்பினருக்கு 100% ஓய்வூதியம் கிடைக்கும்.

  கணக்கு முதிர்வு நேரத்தில் நிகர கணக்கு இருப்பு ஓய்வூதியத்துடன் ஒப்பிடுகையில் 75% முதல் 100% வரை இருந்தால், குறித்த தவணைத் தொகைக்கு அமைவாக சீர்செய்யப்பட்ட ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்ளும் ஆற்றல் ஓய்வூதியதாரருக்கு உண்டு.

- **வாழ்க்கைத் துணைக்கு ஓய்வூதியம்**

  உறுதியின் முதிர்ச்சிக்குப் பிறகு மாதாந்திர ஓய்வூதியத்தைப் பெறத் தொடங்கிய ஓய்வூதியதாரர் 80 வயதை அடைவதற்கு முன்பு இறந்துவிட்டால் மற்றும் அவரது வாழக்கைத் துணை அந்த நேரத்தில் உயிருடன் இருந்தால், ஓய்வூதியம் பெறுபவர் 80 வயது வரை பெற வேண்டியிருந்த ஓய்வூதியத்தை, ஓய்வூதியம் பெறுபவரின் 80 ஆவது ஆண்டு அல்லது குறித்த வாழ்க்கைத் துணை இறக்கும் திகதி ஆகிய இரண்டில் முன்னதாக வரும் தேதி வரை பெறுவதற்கு வாழக்கைத் துணைக்கு உரிமை உண்டு.

- **நிரந்தர பகுதியளவிலான இயலாமை**

  I. திடீர் விபத்து அல்லது நோயின் விளைவாக எவரேனுமொரு உறுப்பினர்,

  - ஒரு கண் பார்வை இழப்பு
  - ஒரு கை இழப்பு அல்லது ஒரு கை நிரந்தரமாக இயலாமை நிலைக்கு உள்ளாதல் அல்லது
  - ஒரு கால் இழப்பு அல்லது ஒரு கால் நிரந்தரமாக இயலாமை நிலைக்கு உள்ளாதல்,

  குறித்த உறுப்பினர் நிரந்தரமாக பகுதி இயலாமைக்கு உட்பட்டவராக கருதப்படுவார்.

II நலன்

ஓய்வூதியம் பெறுவதற்கு முன்னர் அங்கத்தவர், நிரந்தர பகுதியளவிலான இயலாமை நிலைக்கு உட்படுவாராயின், ஒரே முறையில் செலுத்தப்படுகின்ற ரூபா. 6,000.00 தொடக்கம் 25,000.00 வரை பகுதியளவிலான இயலாமைக்கான பணிக்கொடை மற்றும் உரிய தவணைத் தொகை தொடர்ச்சியாக செலுத்துவதாயின், ஓய்வூதியம் பெறுகின்ற வயதிலிருந்து வாழ் நாள் முழுவதும் செலுத்தப்படுகின்ற மாதாந்திர ஓய்வூதியம் பெற்றுக்கொள்ளலாம். பணிக்கொடை பெற்றுக்கொண்டு இத் திட்டத்திலிருந்து விலகுவதாயின் பணிக்கொடையுடன் அங்கத்தவரின் பெயரில் வைப்புச் செய்யப்பட்டுள்ள நிகர அங்கத்தவர் தொகையும் மீள் செலுத்தப்படும்.

➢ **நிரந்தர முழு இயலாமை**

I. திடீர் விபத்து அல்லது நோயின் விளைவாக எவரேனுமொரு அங்கத்தவர்,

- இரு கைகளின் இழப்பு அல்லது இரு கைகள் நிரந்தர இயலாமைக்கு உட்படல்.
- இரு கால்களின் இழப்பு அல்லது இரு கால்கள் நிரந்தர இயலாமைக்கு உட்படல்.
- இரண்டு கண்களிலும் பார்வை இழப்பு.
- ஒரு கை இழப்பு அல்லது நிரந்தர இயலாமைக்கு உட்படுதல் மற்றும் ஒரு கால் இழப்பு அல்லது நிரந்தர இயலாமைக்கு உட்படுதல்.
- ஒரு கை அல்லது கால் இழப்பு மற்றும் ஒரு கண்ணில் பார்வை இழப்பு அல்லது ஒரு கால் அல்லது கை நிரந்தர இயலாமைக்கு உட்படல் மற்றும் ஒரு கண்ணில் பார்வை இழப்பு அல்லது
- கழுத்துக்குக் கீழே முழு முடக்கம் ஏற்பட்டு, சிரமங்களுக்கு உட்படும் சந்தர்ப்பத்தில், நன்கொடையாளர் நிரந்தரமாகவும் முற்றிலும் நிரந்தர இயலாமைக்கு உட்பட்டவராக கருதப்படுதல் வேண்டும்.

II. நலன்

ஓய்வூதியம் பெறுவதற்கு முன்னர் அங்கத்தவர், நிரந்தர பூரண இயலாமைக்கு உட்பட்டால் தமது விருப்பம்படி ஒரே முறையில் செலுத்தப்படுகின்ற ரூபா. 12,000.00 தொடக்கம் 50,000.00 வரை பூரண இயலாமைக்கான பணிக்கொடை அல்லது இயலாமை ஏற்பட்ட திகதியிலிருந்து வாழ் நாள் முழுவதும் செலுத்தப்படுகின்ற மாதாந்திர ஓய்வூதியம் பெற்றுக்கொள்ளலாம். பணிக்கொடை பெற்றுக்கொண்டு இத் திட்டத்திலிருந்து விலகுவதாயின் பணிக்கொடையுடன் அங்கத்தவரின் பெயரில் வைப்புச் செய்யப்பட்டுள்ள நிகர அங்கத்தவர் தொகையும் மீள் செலுத்தப்படும்.

➢ **மரண பணிக்கொடை**

ஓய்வூதியம் பெறுவதற்கு முன்னர் மரணமடைகின்ற அங்கத்தவர் ஒருவர் பொருட்டு ரூபா. 25000/- வரையிலான மரண பணிக்கொடை மற்றும் அங்கத்வதர் பெயரில் வைப்புச் செய்துள்ள நிகர அங்கத்தவர் தொகை உரிமையாளர்களிடம் செலுத்தப்படும்.

- **நிகர அங்கத்வதர் தொகை மீளசெலுத்தல்**

I. உறுதி முதிர்ச்சியடைகின்ற சந்தர்ப்பத்தில்,

a. செலுத்தப்பட வேண்டிய மொத்த தவணைத் தொகையில் 25% இற்கும் 75% இற்கும் இடையிலான தொகை செலுத்தப்பட்டிருப்பின், செலுத்தப்பட்ட தொகையும் அதற்கான வட்டியும் (நிகர உறுப்பினர் தொகை) அங்கத்தவரிடம் மீளசெலுத்தப்படும்.

b. செலுத்தப்பட வேண்டிய மொத்த தவணைத் தொகையில் 75% இற்கும் 100% இற்கும் இடையிலான தொகை செலுத்தப்பட்டிருப்பின், அதற்கமைவாக சீர்செய்யப்பட்ட ஓய்வூதியம் செலுத்தப்படும்.

c. செலுத்தப்பட வேண்டிய மொத்த தவணைத் தொகையில் 25% இற்கும் குறைவாக செலுத்தப்பட்டிருப்பின், செலுத்திய தொகை சபைக்கு உரியதாகும்

### 11.6 “ஆரஸ்ஸாவ” முன் திட்டமிடல் திட்டம்



பிறந்தது முதல் 17 வயது வரையிலான குழந்தைகளுக்கு முன் ஓய்வூதியத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் கீழ், குழந்தைகளை, பெற்றோர்/பாதுகாவலரின் பாதுகாப்பின் கீழ் அங்கத்தவராக்க முடியும். மேலும் கணக்கு 18 வயதில் காலாவதியாகிவிடும். குறித்த முதிர்வு கணக்கின் சேமிப்பைக்கொண்டு “சுரகும” திட்டத்தில் ஒரே முறையில் பணம் செலுத்தி, பங்களிப்புச் செய்யும் அடிப்படையில் உள்வாங்கப்படும்.

### 10.6.1. “ஆரஸ்ஸாவ ” முன் திட்டமிடல் முறையின் நலன்கள்

கல்விசார் தடைதாண்டல் நலன்கள்

I. 5 ஆம் ஆண்டு புலமைப் பரீட்சையில் குறைந்தபட்ச மாவட்ட செயல்திறன் மதிப்பெண் மட்டத்தினைப் பூர்த்தி செய்து பரீட்சைகளை சித்தியடையும்போது, உறுதி செய்த மாதாந்த ஓய்வூதிய பெறுமதியில் 50% ஆன பணத் தொகையினை அளித்தல்.

உதாரணம் - ரூபா 100,000 ஆன ஓய்வூதியம் எனில் ரூபா 50,000 ம் உரித்துடையதாகும்.

II. கல்வி பொது தராதரச் சான்றிதழ் (சாதாரண தரம்) பரீட்சையில் 05 பாடங்களுக்கு விசேட சித்திகளுடன் எல்லா பாடங்களிலும் சித்தியடையும்போது , உறுதி செய்த மாதாந்த ஓய்வூதியத் தொகைக்கு சம மான தொகையினை அளித்தல்.

உதாரணம் - ரூபா 100,000 ஆன ஓய்வூதியம் எனில் ரூபா 100,000 ம் உரித்துடையதாகும்.

III கல்வி பொது தரா தரச் சான்றிதழ் (உயர் தரம்) பரீட்சை சித்தியடைந்து தேசிய பல்கலைக்கழகமொன்றில் கற்பதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளவிடத்து உறுதி செய்த ஓய்வூதிய தொகை போன்று இரண்டு மடங்கினை அளித்தல்.

உதாரணம் - ரூபா 100,000 ஆன ஓய்வூதியம் எனில் ரூபா 200,000 உரித்துடையதாகும்.

**ஏனைய நலன்கள்**

பிள்ளையின் வயது ...ஆன பின்னர் கணக்கில் நிலவும் சேமிப்பு தொகை பிள்ளையின் பெயரில் “சுரகும” ஓய்வூதிய திட்டத்திற்கு மாற்றப்படுவதுடன், அன்றைய திகதி தொடக்கம் பிள்ளை “சுரகும” ஓய்வூதிய திட்டத்தில் பின்வரும் நலன்களின் பொருட்டு உரித்துகளைப் பெறலாம்.

- 60 வயது தொடக்கம் வாழ்நாள் முழுவதும் மாதாந்த ஓய்வூதியம்
- வாழ்க்கை துணையிடம் ஓய்வூதியம்
- மரண பணிக்கொடை
- நிரந்தர பகுதியளவிலான இயலாமை நலன்கள்
- நிரந்தர பூரண இயலாமை நலன்கள்

**ஏனைய நிபந்தனைகள்**

I. கல்விசார் நலன்களை பெற்றுக்கொள்வதற்காக தவணையாக செலுத்தும்போது, பரீட்சை நடாத்தப்படுகன்ற திகதியில் ஓராண்டுக்கு முன்னர் உறுப்பின்ர் உரிமை பெற்றிருக்க வேண்டுமென்பதுடன், ஒரே முறையில் கொடுப்பனவுகளை மேற்கொள்கையில் பரீட்சை நடாத்தப்படுகின்ற திகதிக்கு முன்னர் அங்கத்தவர் உரிமை பெற்றிருத்தல் வேண்டும்.

II. கல்வி தடைதாண்டல் நலன்களை (மேலதிக நிதிசார் நலன்கள்) பொருட்டு உரித்துகளை பெறுவதற்கு ரூபா.10,000 இற்கு அல்லது அதற்கு மேற்பட்ட ஓய்வூதியத்திற்கு பங்களிப்பு பெற்றிருத்தல் வேண்டும்.

## 12. நிலையான வளர்ச்சி இலக்குகள்

இலங்கை சமூகப்பாதுகாப்புச் சபை ஒரு பொறுப்புள்ள நியதிச்சட்ட அரை அரச நிறுவனம் என்ற வகையில் நிலையான அபிவிருத்தி இலக்குகள் இலக்கம் 1.3 மற்றும் 8.3ஐ சபையின் குறுங்கால, நடுத்தர கால மற்றும் நீண்ட கால உபாயங்களில் உள்ளடக்குவதன் மூலம் இந்த இலக்குகளை அடைய பங்களிப்பு செய்கிறது.







அனைத்து வகையான வறுமை நிலைமையையும் ஒழித்தல் → 1.3 → கீழ் மட்டத்தில் உள்ளவர்கள் அனைத்து நபர்களுக்கும் தேசிய ரீதியாக பொறுத்தமான சமூக பாதுகாப்பு நடவடிக்கைகளை செயல்ப்படுத்தல் மற்றும் 2030 ஆம் ஆண்டளவில் வறுமையால் பாதிக்கப்பட்டவர் மற்றும் பாதிக்கப்படகூடிய குழுக்களை போதுமான அளவு உள்வாங்கள்

நல்ல பணி மற்றும் பொருளாதாா வளர்ச்சி → 8.3 → உற்பத்திச் செயற்பாடுகள் கண்ணியமான தொழில் வாய்ப்புக்கள் முயற்சியாண்மை மற்றும் படைப்பாற்றல் என்பவற்றிற்கு உதவும் அபிவிருத்தி சார்ந்த கொள்கைகளை வளர்த்தல்.நிதிச்சேவைகளுக்கான அணுகல்களை வழங்குவதன் மூலம் சிறு மற்றும் நடுத்தர தொழிற்முயற்சிகளின் தாபன வளர்ச்சியை ஊக்குவித்தல்

இதன்படி பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் 1.3 மற்றும் 8.3 இலக்குகளை அடைவதற்காக இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1.அஸ்வெசும பயனாளிகளை ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தில் சேர்ப்பதன் மூலம் அவர்களுக்கு சமூகப் பாதுகாப்பு அளித்தல்.

2.ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுக்காக புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதன் மூலம் அரசாங்க ஓய்வூதியம் பெறாத நபர்கள் / அவர்களில் தங்கியிருப்போருக்கு சமூகப் பாதுகாப்பு அளித்தல்.

3.ஓய்வூதியம் நிதியத்தின் அங்கத்தவர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு அனுகூலங்களை கொடுப்பனவு செய்வதன் ஊடாக ஓய்வூதிய மற்றும் சமூகப் பாதுகாப்பு நன்மைகளை வழங்குதல்.

4.சுயதொழிலிலுள்ள ஆட்களுக்காக விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதன் மூலம் சுயதொழிலிலுள்ள ஆட்களை ஊக்குவித்தல் மற்றும் நிதி வள முகாமைத்துவத்தின் நன்மைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்

5.சுயதொழிலிலுள்ள ஆட்கள் மற்றும் அவர்களில் தங்கிவாழ்வோருக்கு நிலுவைத் தொகையை வசூலிப்பதன் மூலம் சமூகப் பாதுகாப்பை வழங்குதல்

6.வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிலையங்கள் மற்றும் இளைஞர் குழுக்களில் சுயதொழில் / தொழில் முயற்சியாண்மை திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதன் மூலம் இளைஞர்களை சுயதொழில் செய்வதற்கும் அவர்களின் திறன்களையும் நுட்பங்களையும் விருத்தி செய்வதற்கும் ஊக்கமளித்தல்.

7.சமூக பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை மேம்படுத்த பொது ஊடக விளம்பர திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் அரசாங்க ஓய்வூதியம் பெறாத மக்களுக்கு சமூக பாதுகாப்பு திட்டங்கள் மற்றும் அவற்றின் நன்மைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் மற்றும் சுய தொழில்வாய்ப்பு / தொழில்முனைவுக்கு அவர்களை ஊக்குவிக்க வேண்டும்

8.சமூகப்பாதுகாப்பு பற்றிய அறிவினை மேம்படுத்துவதன் மூலம் சுயதொழிலிலுள்ள ஆட்கள் மற்றும் ஏனையோரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்.

9.காலத்தின் தேவைக்கேற்ப 1996 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சமூகப் பாதுகாப்புச் சட்டத்தைத் திருத்துவதன் மூலம் சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகளை பரந்த அளவில் விரிவுபடுத்துதல்.

10.காலத்தின் தேவைக்கேற்ப புதிய ஓய்வூதியத் திட்டங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் அனைத்து மக்களுக்கும் சமூகப் பாதுகாப்பை அளித்தல்.

11.சமூகப்பாதுகாப்பு பற்றிய அறிவினை மேம்படுத்துவதன் மூலம் சுயதொழிலிலுள்ள ஆட்கள் மற்றும் ஏனையோரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்.

## 13. முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு

### 13.1.2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் சிறப்பு நிகழ்வுகள்

**1. முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி வாரத்துடன் இணைந்து நடாத்தப்படும் ஆலோசனை மற்றும் வெளிநாட்டு உதவியின் அடிப்படையில் ஓய்வூதிய உறுதிகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்**

**(18.07.2024 - பாபா/ஜய கொட்டடட்டுவ மகா வித்தியாலயம்)**

மகளிர்,சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் ஆலோசனைகளுக்கு அமைய நடைமுறைப்படுத்தப்படும் "2024 தேசிய மட்ட நிகழ்வுகள் மற்றும் விசேட நிகழ்ச்சித்திட்டங்களின் தொடர்" கீழ் முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி வாரத்துடன் இணைந்து இலங்கை சமூக பாதுகாப்பு சபை 2024 ஜூலை 18 வியாழக்கிழமை அன்று பாபா/ஜய கொட்டடட்டுவ மகா வித்தியாலயத்தில் கொரிய தேசிய நன்கொடையாளர்களின் பங்களிப்பின் கீழ் பாடசாலை மாணவர் சமூகம் மற்றும் பெற்றோர்களுக்கு சமூக பாதுகாப்பு ஓய்வூதிய பத்திரங்களை வழங்குவதற்கான ஒரு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதி பொது முகாமையாளர் (சமூக பாதுகாப்பு) திருமதி கல்ஹாரி டி சில்வா பிரதி அதிபர் (கல்வி அபிவிருத்தி) திருமதி ஷிரோமி ஸ்ரீ பத்மகுமார உள்ளிட்ட பணிப்பாளர் சபை அதிகாரிகள்,ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.





**2. சமூகப் பாதுகாப்பிற்காக அர்ப்பணிப்புடன் செயற்ப்பட்ட வடக்கு,கிழக்கு மாகாண அரச அதிகாரிகள்**
**(15.08.2024-நோர்த்வே ஹோட்டல் வளாகம்)**

அரசாங்க ஓய்வூதியத்திற்கு உரிய ஊழியர்களை இலக்காகக் கொண்டு வடக்கு,கிழக்கு மாகணங்களில் சமூக பாதுகாப்பு ஓய்வூதியம் மற்றும் நலத்திட்டத்தை விரிவுப்படுத்துவதற்கு அதிக பங்களிப்பை வழங்கிய அரசாங்க அதிகாரிகளை அங்கீகரிப்பதற்காக ‘’சமூக பாதுகாப்பு விருது விழா-2024’’ இல் சமூக பாதுகாப்பு விருது விழா-2024 நடைபெற்றது.இது 15.08.2024 அன்று மதிப்பிற்குரிய திரு.டிக்வெல்ல அவர்களின் தலைமையில் வவுனியா நோர்த்வே ஹோட்டல் விழா மண்டபத்தில் நடைபெற்றது.

வடக்கு,கிழக்கு மாகண மக்களுக்கு சமூக பாதுகாப்பு உரிமைகளை வழங்குவதில் அர்ப்பணிப்புடன் செயற்ப்பட்டமைக்காக மாவட்ட செயலாளர்கள்,பிரதேச செயலாளர்கள், சமூக பாதுகாப்பு சபையின் உத்தியோகத்தர்கள்,கிராம உத்தியோகத்தர்கள்,சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,சமூக சேவை உத்தியோகத்தர்கள்.நிர்வாக் கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் அனைவரும் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் இலங்கைப் பாதுகாப்புச் சபையின் பொது முகாமையாளர் திரு.கே.ஏ.எஸ்.பிரசன்ன களுஆராச்சி மற்றும் இலங்கைப் பாதுகாப்புச் சபையின் பிரதி முகாமையாளர் திருமதி.கல்ஹாரி த சில்வா மற்றும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தைச் சேர்ந்த பல அரச அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.







### 03.3rd International Conference of Social Work (ICOSW) 2024 திட்டத்திற்கான வள நபர் சமூக பாதுகாப்பு வாரியத்தின் பங்கை முன்வைக்கும்

''அனைவருக்கும் சமூகப் பாதுகாப்பை அடைவதற்கு பல்வேறு கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை ஆராய்தல்'' என்ற நோக்குத்துடன் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 3வது சமூகப்பணி மாநாடு (ICOSW) 2024

எமது சபையின் பொதுமுகாமையாளர் திரு.கே.ஏ.எஸ்.பிரசன்ன களுஆரச்சி அவர்கள் சமூக பாதுகாப்பு என்ற தலைப்பில் விசேட விரிவுரை நிகழ்த்தினார்





**04.சுயதொழில் ஈடுபடுவதற்கு இளைஞர்கள் யுவதிகளை ஊக்குவித்தலும் அவர்களுக்கு சமூகப் பாதுகாப்பு பராமரிப்பை அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம்.**
**(2024.09.26 மற்றும் 27-பாதுக்க,பஹத்கம,ஹொனாந்தர மற்றும் ராஜகிரிய இலங்கை வாழ்க்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபை பயிற்சி நிலையங்கள்)**

சுயதொழிலில் ஈடுபடுவதற்கு இளைஞர்களை ஊக்குவித்தல் மற்றும் முயற்சியாண்மை திறன்களை விருத்தி செய்தல் மற்றும் சமூக பாதுகாப்பு திட்டங்களை அறிமுகப்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட ஒரு தொகை நிகழ்ச்சித்திட்டங்கள் இலங்கைத் தொழிற் பயிற்சி அதிகாரசபையின் பயிற்சி நிலையங்களில் நடத்தப்பட்டன. இந்த நிகழ்ச்சித் தொடரில், 04 நிகழ்ச்சிகள் 2024 செப்டெம்பர் 26 மற்றும் 27 ஆம் திகதிகளில் பாதுக்க, பதகம, ஹொன்னந்தர மற்றும் ராஜகிரிய ஆகிய இடங்களில் உள்ள இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் பயிற்சி நிலையங்களில் நடைபெற்றன.

படைவீரர் உதான லெவேரா மற்றும் சமூக பாதுகாப்பு அதிகாரி (பதவி உயர்வு) திரு.எஸ்.லக்மாலின் வழிகாட்டலில் நடத்தப்பட்டது






### 05.Best Annual Report and Accounts Awards for Public Sector – 2023 (2024.12.02 BMICH நிறுவனம் வளாகம்)

இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் மற்றும் பொது நிதிக் கணக்காளர்கள் சங்கம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த பொதுத் துறைக்கான **Best Annual Report and Accounts Awards for Public Sector – 2023** இல் போட்டியிட்ட இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை இலங்கையின் அனைத்து அரச கூட்டுத்தாபனங்கள் சபைகள் மற்றும் அதிகாரசபைகள் சம்பந்தமாக இந்த பிரிவில் இரண்டாவது (02வது) இடத்திற்கான வெள்ளி விருது பாதுகாப்பு சபைக்கு வழங்கப்பட்டது.






### 06. புதிய சமூக பாதுகாப்பு திட்டங்களையும் எதிர்கால திட்டங்களையும் தயாரித்தல். (2024.12.04 CIPM நிறுவனம் வளாகம)

எமது சபையின் தவிசாளர் திரு.எம்.கே.பி.திசாநாயக்க அவர்களின் தலைமையில் சமூக பாதுகாப்பு சபையின் எதிர்கால திட்டம் தொடர்பான திட்ட அறிக்கையை தயாரிப்பதற்காக சபையின் அனைத்து பிரிவுகளின் அதிகாரிகளையும் உள்ளடக்கிய அதிகாரிகளின் பங்குபற்றலுடன் 2024.12.04 ஆம் திகதி நாரஹேன்பிட்டையில் உள்ள CIPM நிறுவன வளாகத்தில் ஒரு செயலமர்வு நடைபெற்றது.









### 13.2. மொத்த ஆட்சேர்ப்பின் அடிப்படையில் அதிகபட்ச முன்னேற்றத்தை வழங்கிய ஒருங்கிணைப்பு அதிகாரிகள்- 2024



திரு.டீ.சங்கர்
ஒருங்கிணைப்பு அதிகாரி- யாழ்ப்பாணம்
உறுப்பினர்களின் எண்ணிக்கை – 7,315
நிதி மதிப்பு- ரூ.54,819,385.00



திரு.எஸ்.டி.சுதாகரன்
ஒருங்கிணைப்பு அதிகாரி- அம்பாறை
உறுப்பினர்களின் எண்ணிக்கை – 3,886
நிதி மதிப்பு- ரூ.4,898,655.00



திரு.எச்.எம். அமீன்
ஒருங்கிணைப்பு அதிகாரி- மட்டக்களப்பு
உறுப்பினர்களின் எண்ணிக்கை – 3,859
நிதி மதிப்பு- ரூ.5,132,164.00



திரு.திலின அசங்க
ஒருங்கிணைப்பு அதிகாரி- பதுளை
உறுப்பினர்களின் எண்ணிக்கை – 3,805
நிதி மதிப்பு- ரூ.5,842,060.00



திரு.கே.சன்ஜீவன்
ஒருங்கிணைப்பு அதிகாரி- முல்லைத்தீவு
உறுப்பினர்களின் எண்ணிக்கை – 2,558
நிதி மதிப்பு- ரூ.3,473,867.00



திருமதி. சசிகலா மதுசானி
ஒருங்கிணைப்பு அதிகாரி- கேகாலை
உறுப்பினர்களின் எண்ணிக்கை – 2,463
நிதி மதிப்பு- ரூ.1,578,975.00



திருமதி. எச்.கே. துலக்சி ருவாஷா ஜன்தரசேன
ஒருங்கிணைப்பு அதிகாரி- பதுளை
உறுப்பினர்களின் எண்ணிக்கை – 2,377
நிதி மதிப்பு- ரூ.4,987,632.00



திரு.எச்.எம்.பி.பண்டார
ஒருங்கிணைப்பு அதிகாரி- குருணாகலை
உறுப்பினர்களின் எண்ணிக்கை – 2,297
நிதி மதிப்பு- ரூ.5,382,394.00



திரு.பீ.ஜீ. அமில கமகே
ஒருங்கிணைப்பு அதிகாரி- மாத்தறை
உறுப்பினர்களின் எண்ணிக்கை – 2,158
நிதி மதிப்பு- ரூ.2,673,988.00



ரஷிக சன்ஜிலா
ஒருங்கிணைப்பு அதிகாரி- கண்டி
உறுப்பினர்களின் எண்ணிக்கை – 2,100
நிதி மதிப்பு- ரூ.3,526,272.00

### 13.3. 2024 ஆம் ஆண்டிக்கான முதல் தவணை வசூலின் மொத்த அடிப்படையில் அதிகபட்ச முன்னேற்றத்தை வழங்கிய ஒருங்கிணைப்பு அதிகாரிகள்



**திரு.டீ.சங்கர்**
ஒருங்கிணைப்பு அதிகாரி- யாழ்ப்பாணம்
நிதி மதிப்பு- ரூ.54,819,385.00
உறுப்பினர்களின் எண்ணிக்கை – 7,315



**திரு.திலின அசங்க**
ஒருங்கிணைப்பு அதிகாரி- பதுளை
நிதி மதிப்பு- ரூ.5,842,060.00
உறுப்பினர்களின் எண்ணிக்கை – 3,805



**திரு.எச்.எம்.பி.பண்டார**
ஒருங்கிணைப்பு அதிகாரி- குருணாகலை
நிதி மதிப்பு- ரூ.5,382,394.00
உறுப்பினர்களின் எண்ணிக்கை – 2,297



**திரு.எச்.எம். அமீன்**
ஒருங்கிணைப்பு அதிகாரி- மட்டக்களப்பு
நிதி மதிப்பு- ரூ.5,132,164.00
உறுப்பினர்களின் எண்ணிக்கை – 3,859



**செல்வி.பீ. சங்கிா**
ஒருங்கிணைப்பு அதிகாரி- திருகோணமலை
நிதி மதிப்பு- ரூ.4,999,575,00
உறுப்பினர்களின் எண்ணிக்கை – 1,990



**திருமதி. எச்.கே. துலக்சி ருவாஷா ஜன்தரசேன**
ஒருங்கிணைப்பு அதிகாரி- பதுளை
நிதி மதிப்பு- ரூ.4,987,632.00
உறுப்பினர்களின் எண்ணிக்கை – 2,377



திரு.எஸ்.டி.சுதாகரன்
ஒருங்கிணைப்பு அதிகாரி- அம்பாறை
நிதி மதிப்பு- ரூ.4,898,655.00
உறுப்பினர்களின் எண்ணிக்கை – 3,886



திருமதி_நிலன்தி ஏகநாயக
ஒருங்கிணைப்பு அதிகாரி- கம்பஹா
நிதி மதிப்பு- ரூ.4,686,222,00
உறுப்பினர்களின் எண்ணிக்கை – 664



திரு.வை.எம். இனிநோ
ஒருங்கிணைப்பு அதிகாரி- மட்டக்களப்பு
நிதி மதிப்பு- ரூ.3,544,510.00
உறுப்பினர்களின் எண்ணிக்கை – 1.771

### 13.4.அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்கள் மற்றும் வெற்றிடங்கள்

31.12.2024 நிலவரப்படி 150 பணியில் உள்ளனர் மற்றும் 48 வெற்றிடங்கள் நிலவுகின்றன.

### 13.5.அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்களை அதிகரித்தல் மற்றும் பணி வெற்றிடங்களை நிரப்புதல்

31.12.2024 நிலவரப்படி 48 வெற்றிடங்கள் உள்ளன மேலும் இந்த பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்ய வரி அமைச்சகத்திற்கு 15.07.2024 தேதியிட்ட கடிதம் எண் 2/1/147 – 50 மூலம் கோரிக்கைகள் செய்யப்பட்டுள்ளன. அதன்படி. வெற்றிடமாக உள்ள பணியிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக பொதுச் சேவை ஆட்சேர்ப்புக் குழுவுக்கு பரிந்துரை செய்யும் படிவத்தின்படி 18.11.2024 தேதியிட்ட 2/1/147 - 54 என்ற கடித எண் மூலம் ஆட்சேர்ப்பு செய்ய அனுமதி கோரப்பட்டுள்ளது. அதன்படிஇ அரச சேவையில் ஆட்சேர்ப்புச் செயன்முறையை மீளாய்வு செய்வதற்காக வரிசை அமைச்சிடமிருந்து 2024.12.04 ஆம் திகதிய MRDSS&CE/ADM/12/SSB/29 என்ற இலக்கமுடைய கடிதம் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளது. 09 வெற்றிடங்களுக்கு புதிதாக ஆட்சேர்ப்பு செய்வதற்கான அனுமதியின் அடிப்படையில் 2024 ஆம் ஆண்டில் புதிய அலுவலர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளனர்.

அதேபோன்று அபிவிருத்தி உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கான வேண்டுகோள் 2024.09.12 ஆம் திகதி இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு 2/1/147 – 52 ஆம் இலக்க அமைச்சின் வரிசை செயலாளரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

**பதவியணி பகுப்பாய்வு - 2024 ஆம் ஆண்டு (2024.12.31 ஆம் திகதியன்று)**

| தொடர் இல | புதவிப் பெயர்கள் | அங்கீகரிக்கப்பட்ட | தற்போதுள்ள | வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|
| 1. | பொதுமுகாமையாளர் | 1 | 1 | 0 |
| 2. | பிரதி பொதுமுகாமையாளர் (நிதி) | 1 | 1 | 0 |
| 3. | பிரதி பொதுமுகாமையாளர்(சமூகப் பாதுகாப்பு | 1 | 1 | 0 |
| 4. | உதவிப் பொதுமுகாமையாளர்( நிதி) | 1 | 0 | 1 |
| 5. | உதவிப்பொதுமுகாமையாளர் (ஆட்சேர்ப்பு மற்றும் மாவட்ட நிர்வாகம் | 1 | 1 | 0 |
| 6. | உதவிப் பொதுமுகாமையாளர் (நிர்வாகம்) | 1 | 0 | 1 |
| 7. | உதவிப் பொதுமுகாமையாளர் (ஓய்வூதியம்/காப்புறுதி) | 1 | 1 | 0 |
| 8. | உள்ளக கணக்காய்வாளர் | 1 | 1 | 0 |
| 9. | முகாமையாளர் (நிர்வாகம்) | 1 | 0 | 1 |
| 10. | முகாமையாளர் (சான்றிதழ் சேவைகள்) | 1 | 1 | 0 |
| 11. | சமூகப் பாதுகாப்பு அதிகாரி(காப்பீடு) | | | |
| 12. | கணக்கீட்டு உத்தியோகத்தர்(நிதி) | 1 | 1 | 0 |
| 13. | சமூகப் பாதுகாப்பு உத்தியோகத்தர் (மேம்பாடு) | 1 | 1 | 0 |
| 14. | சமூகப் பாதுகாப்பு உத்தியோகத்தர்( ஓய்வூதியம்) | 1 | 1 | 0 |
| 15. | சமூகப் பாதுகாப்பு உத்தியோகத்தர் (தகவல் தொழிநுட்பம்) | 1 | 1 | 0 |
| 16. | கணக்கு உத்தியோகத்தர்(சேகரிப்பு) | 1 | 0 | 0 |
| 17. | சிரேஷ்ட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் | 6 | 5 | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| 18. | கணக்காய்வு உத்தியோகத்தர் | 2 | 1 | 1 |
| 19. | ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள் | 49 | 31 | 18 |
| 20. | புலனாய்வு உத்தியோகத்தர்கள் | 2 | 2 | 0 |
| 21. | தரவுக் கட்டுப்பாட்டாளர் | 1 | 0 | 1 |
| 22. | கணனி வலையமைப்பு உதவியாளர் | 1 | 1 | 0 |
| 23. | கணனி நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்(மென்பொருள்) | 1 | 1 | 0 |
| 24. | கணனி நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் (வன்பொருள்) | 1 | 1 | 0 |
| 25. | புத்தகப் பதிவாளர் | 2 | 1 | 1 |
| 26. | முகாமைத்துவ உதவியாளர் | 74 | 54 | 20 |
| 27. | சாரதி | 9 | 6 | 3 |
| 28. | அலுவலகப் பணியாளர் | 34 | 33 | 1 |
| மொத்தம் | | 198 | 150 | 48 |

**இடத்திற்கு அமைவாக பதவியணி**

இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் 150 ஊழியர்களில் 77பேர் தலைமை அலுவலத்திற்கு இணைந்து பணியாற்றுவதுடன், 73 ஊழியர்கள் சமூக பாதுகாப்புச் சபையின் மாவட்ட அலுவலகங்களில் பணியாற்றுகின்றனர்.

தலைமை அலுவலகம் - 77

மாவட்ட அலுவலகம் - 73

மொத்தம் -150

**13.6.2024 ஆம் ஆண்டின் இடைவிலகுதல் மற்றும் ஓய்வு பெறுதல்**

| தொடர் இலக்கம் | பதவி | பெயர் | விலகுதல் மற்றும் ஓய்வு பெறுதல் திகதி | விபரம் |
|---|---|---|---|---|
| 1 | முகாமையாளர்(காப்புறுதி) | திரு.டிபி.எஸ்.எம்.குணதிலக | 2024.01.01 | சேவையை விட்டு இடைவிலகல் |
| 2 | ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள் | திரு.கே.நிதர்சன் | 2024.01.26 | சேவையை விட்டு இடைவிலகல் |
| 3 | ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள் | திருமதி.டிபி.கே.எம்.ஜீ.வீரசிங்க | 2024.03.01 | இராஜினமா |
| 4 | அலுவலகப் பணியாளர் | திரு.பி.எச்.டி.ரணசிங்க | 2024.06.10 | சேவையை விட்டு இடைவிலகல் |
| 5 | முகாமையாளர் (நிர்வாகம்) | திருமதி.எம்.கே.தயானி புஸ்பலதா | 2024.07.01 | பதவியுயர்வு |
| 6 | ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள் | திரு.எச்.ஆர்.எம்.அஸ்லம் | 2024.07.08 | இராஜினமா |

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | உதவிப் பொதுமுகாமையாளர்( நிதி) | திருமதி.டிபி.எஸ்.பிரியதர்சனி | 2024.08.12 | இராஜினமா |
| 8 | ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள் | திரு.சூர்யகாந் | 2024.08.26 | இராஜினமா |
| 9 | சாரதி | திரு.கே.எம்.புத்ததாச | 2024.10.03 | இராஜினமா |

## 13.7. பயிற்சி மற்றும் அபிவிருத்தி

| தொடர் இல | | கற்கை நெறியின் பெயர் | நடாத்தப்பட்ட திகதி | தொடர்புடைய அதிகாரிகள் | வளப்பகிர்வாளர்கள் | செலவிடப்பட்ட தொகை(ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| 01. | 1வது காலாண்டு | 2023 ஆண்டு நிதிக்கூற்றுகளை தயாரிப்பதற்கான ஒரு நாள் பயிற்சித்திட்டம் | 2024.01.11 | பட்டயக்கணக்காளர் திரு.சஞ்சய பண்டார | CIPM நிறுவனம் பிராங் நிறுவனம் என்பவற்றால் ஏற்பாடு செய்யப்பட்டது. | **13,500.00** |
| 02. | 2வது காலாண்டு | மனப்பான்மை மற்றும் மன சமநிலை பற்றிய பயிற்சி வகுப்பு | 2024.07.09 | திரு.இரோன் ஜயசேகர இலங்கை சமூக அபிவிருத்தி நிறுவனம்- பயிற்சி அதிகாரி | இலங்கை சமூகப் பாதுகாப்பு சபை-தலைமை அலுவலகம் | விரிவுரை கட்டணம் =2700.00 குறியீட்டு செலவுகள் =12,365.00 **=15,065.00** |
| 03. | 3வது காலாண்டு | கணணி மென்பொருள் பற்றிய அடிப்படை அறிவினை விருத்திச் செய்தல் | 2024.08.07 | திருமதி.புஸ்பித காஞ்சனா தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை ஆலோசகர்(தகவல் தொழிநுட்பம்) | இலங்கை சமூகப் பாதுகாப்பு சபை-தலைமை அலுவலகம் | விரிவுரை கட்டணம் = 2100.00 குறியீட்டு செலவுகள் =10,440.00 **12,540.00** |
| 04. | 4வது காலாண்டு | out of the way நிகழ்ச்சித்திட்டம் | 2024.09.06 | திரு.உதயா தேவமுல்ல | கடற்படை மற்றும் அயன் மாலிமாவ கிலப் ஹவுஸ் என்பவற்றால் ஏற்பாடு செய்யப்பட்டது | குறியீட்டு செலவுகள =54800.00 போக்குவரத்துச் செலவுகள் =30000.00 விரிவுரை கட்டணம் 40000.00 **124,800.00** |
| **செலவிடப்பட்ட மொத்த தொகை** | | | | | | **165,905.00** |

**2024 ஆம் ஆண்டு வெளிநாட்டு கற்கைநெறித் திட்டங்களில் அலுவலக அதிகாரிகளின் பங்களிப்பு விபரம்**

| தொடர் இல | பங்களிப்பு செய்த நாடுகள் | கற்கை நெறியின் பெயர்கள் | நடாத்தப்பட்ட திகதி | தொடர்புடைய அதிகாரிகள் | வளப்பகிர்வாளர்கள் | இலங்கை சமூக பாதுகாப்புச்சபையினால் கொடுப்பனவு வழங்குவதற்காக செலவிடப்பட்ட தொகை(ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| 01. | சீனா | அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் சமூகப்பாதுகாப்பும் வறுமை ஒழிப்பும் | 2024.05.23 ஆம் திகதயில் இருந்து 2024.06.05 வரை | சிரேஷ்ட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் (சமூக பாதுகாப்பு) - திருமதி.கல்ஹாரி த சில்வா | சீன மக்கள் குடியரசு தூதரகத்தின் பொருளாதாரம் மற்றும் வர்த்தக அலுவலகம் | ➢ சாதாரண கொடுப்பனவு =110.595.00 ரூபா<br>➢ விரைவான கொடுப்பனவு =28,015.50ரூபா<br><br>மொத்தம்=138.610.50ரூபா |
| 02. | கொரியா | 2024 KOICA ஒத்துழைப்பு பயிற்சித்திட்டம் | 2024.07.07 ஆம் திகதியில் இருந்து 2024.07.20 வரை | பொதுமுகாமையாளர்- திரு.கே.ஏ.எஸ்.ஜீ.களு ஆராச்சி | **KOICA** நிறுவனம் | ➢ சாதாரண கொடுப்பனவு =106,862.00ரூபா<br>➢ விரைவான கொடுப்பனவு =29,058.75ரூபா<br>➢ வெளிநாட்டுக் கடமைகள் =10,000.00 ரூபா கடவுச்சீட்டுக்கான தொகுப்பு<br>**மொத்தம்=145,920.75 ரூபா** |
| | | செலவிடப்பட்ட மொத்த தொகை | | | | **284,531.25 ரூபா** |

## 14.மாவட்ட/ பிரிவு/ சபையின் அலகுகளின் பணிகள்

### 14.1. நிர்வாக பிரிவு

#### 14.1.1. நிர்வாகப் பிரிவின் பிரதான ஊழியர்கள்

சபையின் தூரநோக்கு மற்றும் குறிக்கோளை நிறைவேற்றும் பொருட்டு கூட்டிணைந்த நிர்வாகத்தையும் நிர்வாக கட்டமைப்பையும் பலமாகவும் பயனுறுதியாகவும் பேணுவது நிர்வாகப் பிரிவின் பொறுப்பாகும்.. நிறுவகத்தின் பௌதீக மற்றும் மனித வள அபிவிருத்தி திட்டமிடல் தவிசாளர் உள்ளிட்ட பணிப்பாளர் சபையினால் வழங்கப்படும் கட்டளைகளை நடைமுறைப்படுத்தல் அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிருபங்களுக்கு அமைய செயற்படுதல் மற்றும் ஏனைய சேவைத் துறைகளின் நடவடிக்கைகளை மிகவும் வினைத்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குதல் என்பன நிர்வாகப் பிரிவினால் பின்வரும் அடிப்படை கடமைகளை நிறைவேற்றி வருகின்றது.

1. அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு திட்டம் பிரகாரம் பதவியணியை ஆட்சேர்ப்பு செய்தல் பயிற்றுவித்தல், வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகளை நடாத்துதல், சம்பள ஏற்றம் வழங்குதல், சம்பள மாற்றீடு அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு முறைக்கு அமைவாக பணியாள் தொகுதியினருக்கு பதவியுயர்வு வழங்குதல்
2. நிறுவனத்தின் சகல பதவியனியினரின் சுயவிபரக்கோப்புகளை உரிய முறையில் பராமரித்தல் மற்றும் தேவைவைசகல பதவியனியினரின் சுயவிபரககோப்புகளை உரிய முறையில் பராமரித்தல் மற்றும தேவையேற்படும் சந்தர்ப்பங்களில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல்.
3. நிறுவனத்தின் போக்குவரத்து நடவடிக்கைகள், வாகனப் பராமரிப்பு நடவடிக்கைகள், பாதுகாப்பு சேவைகள் மற்றும் துப்புரவு சேவைகள் தொடர்பான ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுதல்.
4. வருடாந்த அறிக்கைகள் / ஒருங்கிணைந்த திட்டம் / செயற்பாட்டுத் திட்டம் மற்றும் ஏனைய மாதாந்த, காலாண்டு அறிக்கைகளைத் தயாரித்து பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டு அவற்றை அமைச்சுக்கு சமர்ப்பித்தல்.
5. நாடளாவிய ரீதியில் பிரதேச செயலக மட்டத்தில் விரிவாக்கப்பட்ட இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்திக்கொள்ளுதல் அத்தியாவசியமான பணியாகும். அதன் பொருட்டு 58000 பயிலுனர் பட்டதாரிகளை இணைத்துக்கொள்ளும் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தின் கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 249 பட்டதாரிகள் எமது நிறுவனத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதுடன் அவர்களின் கடிதக்கோவைகள் சார்நத பணிகளை மேற்கொள்ளுதல்.
6. ஆண்டு இறுதி செயலாற்றுகை அறிக்கையைத் தயாரித்து அமைச்சுக்கு சமர்ப்பித்தல்.
7. தொழில் நுட்ப ஆலோசனைக் குழுவிற்குத் தேவையான ஆவணங்களைத் தயாரித்து சமர்ப்பித்தல் மற்றும் கூட்டங்களை நடாததும் பணிகளை ஒழுங்கமைத்தல்.
8. மாதாந்திர பணிப்பாளர் சபை கூட்டங்களை நடத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகளை செய்தல், மற்றும் பணிப்பாளர் சபைப் வழங்கும் ஆணைகளைச் செயல்படுத்துவதற்குத் தேவையான பணிகளை மேற்கொள்ளல்.
9. தலைமை அலுவலகங்கள் மற்றும் 25 மாவட்ட அலுவலகங்களில் உள்ள பணியாளர்களின் தினசரி வருகைப் பதிவேடுகளைப் பராமரித்தல் மற்றும் அனைத்து ஊழியர்களுக்கும் 06 மாதங்களுக்கு ஒரு முறை விடுமுறை அறிக்கைகளை வழங்குதல் மற்றும் மாதாந்த விபர அறிக்கைகளை தாக்கல் செய்தல்.
10. பணியாட்டொகுதியினரின் அக்ரஹார காப்புறுதி நிதியத்தின் அங்கத்தவர்களாக பொறுப்பேற்றுள்ளவர்களின் காப்புறுதி கட்டுப்பண அறிக்கைகளைத் தயாரித்து மாதாந்த காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு அனுப்புதல் மற்றும் காப்புறுதித் தேவைகளுக்கான உடனடி நிதியைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்தல்.
11. நிறுவனத்திற்கு தினசரி கிடைக்கப்பெறும் அனைத்து ஆவணங்களையும் சரிபார்த்து அனுப்ப வேண்டிய கடிதங்கள் மற்றும் பொதிகளை தவிசாளர், பொது முகாமையாளர் மற்றும் சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களுக்கும் மாவட்ட அலுவலகங்கள் மற்றும் பிற அரசு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் தாமதமின்றி அனுப்பி வைத்தல்.
12. பணியாட்டொகுதியினரின் இடமாற்றச் சபைக் கூட்டங்களை நடாத்துதல் மற்றும் அதற்கேற்ப இடமாற்றங்களுக்குத் தேவையான கடிதங்களை வழங்குதல் மற்றும் நிறுவனத்தின் கடமைகளின் தேவையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட டமாற்றங்களை கருத்திற்க் கொண்டு நடவடிக்கை எடுத்தல்.
13. மாதாந்திர காலாண்டு மற்றும் அறிக்கைகள் உள்ளக கணக்காய்வு வினாக்கள் மற்றும் அரசு கணக்காய்வு வினாக்களுக்கு பதில் அளித்தல் மற்றும் கணக்காய்வு கூட்டங்களில் பங்கேற்றல்.

14. தொழில்நுட்பக்குழுக் கூட்டங்களில் கலந்துகொள்ளுதல் தேவையான தொழில்நுட்பக் குழு ஆவணங்களைத் தயாரித்தல் மற்றும் கூட்டங்களை நடத்துவதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல்.
15. அத்தியாவசியமான நிறுவனஞ்சார் நடவடிக்கைளின் பொருட்டு தேவையான அமைச்சரவை பத்திரங்களைத் தயாரித்தல் மற்றும் தேவையான அனுமதி பெற்றுக்கொள்ளுதல்.
16. பணியாளர்களுக்கான பயிற்சி பட்டறைகளை நடத்துதல்

### 14.1.2. கட்டுப்பாட்டு பிரிவின் உண்மையான ஊழியர்கள்

| பதவி | உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை |
|---|---|
| பொதுமுகாமையாளர் | 1 |
| உதவி பொதுமுகாமையாளர்(நிர்வாகம்) | 1 |
| சமூகப் பாதுகாப்பு உத்தியோகத்தர்(நிர்வாகம்) | 0 |
| முகாமைத்துவ உதவியாளர் | 8 |
| தலைவரின் செயலாளர்( முகாமைத்துவ உதவியாளர்) | 1 |
| அலுவலகப் பணியாளர் | 2 |
| (தலைவர் அவர்களுக்கு இணைப்புச் செய்யப்பட்ட) அலுவலகப் பணியாளர் | 1 |
| அஞ்சல் செயற்பாடுகள் (அலுவலகப் பணியாளர்) | 1 |
| சாரதிகள் | 6 |

### 14.1.3. பௌதிக வளங்கள்

| | | |
|---|---|---|
| பிரதான அலுவலகம் | - | 2013 மார்ச் மாதம் 06 ஆம் திகதி, இல.18, இராஜகிரிய வீதி, இராஜகிரிய என்ற இடத்தில் அமையப் பெற்ற 04 மாடியினைக் கொண்ட சபைக்கு உரித்தான கட்டிடத்தில் அமைக்கப்பட்டுள்ளது. |
| மாவட்ட அலுவலகங்கள் | - | நாடுபூராவுமுள்ள சகல மாவட்டங்களின் மாவட்ட செயலக அலுவலகங்களில் சமூகப் பாதுகாப்பு மாவட்ட அலுவலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. |

### 14.1.4. தொடர்பாடல் வசதிகள்

நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள தொலைபேசி முறைமையை மேம்படுத்தி, ஒவ்வொரு பிரிவும் உள்ளடங்கும் வகையில் புதிய கட்டிடத்தில் தாபிக்கப்பட்டுள்ளதுடன், அது தொடர்பில் 03 பொது தொலைபேசி இணைப்புக்களை தொலைநகல் வசதிகளுடன் தாபிக்கப்பட்டுளது. அதற்கு மேலாக பின்வருமாறு நேரடித் தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

- தவிசாளர் - நேரடி தொலைபேசி மற்றும் ஒரு பெக்ஸ் இணைப்பு
- பொது முகாமையாளர் - நேரடி தொலைபேசி மற்றும் ஒரு பெக்ஸ் இணைப்பு
- பிரதி பொதுமுகாமையாளர் 02 - நேரடி தொலைபேசி மற்றும் இரண்டு பெக்ஸ் இணைப்புகள்
- உதவி பொதுமுகாமையாளர் 03 - மூன்று தொலைபேசிகள்
- உள்ளக கணக்காய்வாளர் - ஒரு தொலைபேசி
- சேகரிப்பு பிரிவால் அஞ்சல் அலுவலகத்துடன் தொடர்பு கொள்வதற்கு - மூன்று தொலைபேசி மற்றும் மூன்று டயலொக் சிம்கள்
- உடனடி அழைப்பு - ஒரு தொலைபேசி இணைப்பு

மேற்குறிப்பிட்ட தொலைபேசி இணைப்புக்களுக்கு மேலதிகமாக 25 மாவட்ட அலுவலகங்களுக்கும் தொலைபேசி தொடர்பு வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. தலைமை அலுவலகத்தில் கணனி வலையமைப்பு முறைமை தாபிக்கப்பட்டுள்ளதுடன், VPN முறைமை ஊடாக மாவட்டச் செயலகங்களை வலையமைப்புச் செய்யப்பட்டு சேவை நடவடிக்கைகளை மிகவும் விளைத்திறனாக்குவற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

### 14.1.5. போக்குவரத்து வசதிகள்

2021.12.31 ஆம் திகதியில் 02 கெப் வாகனங்கள், 02 கார்கள், 02 வேன்கள், 01 முச்சக்கர வண்டி மற்றும் 14 மோட்டார் சைக்கிள்கள் என்ற வகையில் 20 வாகனங்கள் சபைக்கு உரியதாக இருந்தன.

1997 மற்றும் 1998 ஆம் ஆண்டுகளில் இரண்டு கேப்களும்இ 2008 ஆம் ஆண்டில் நிசான் ஜூக் 2013 ஆம் ஆண்டில் பஜாஜ் முச்சக்கர வாகனமும் 2014 ஆம் ஆண்டில் டொயோட்டா ஹைஆஸ் வேனும் வாங்கப்பட்டன. இதேபோல் 2011 ஆம் ஆண்டில் 09 பஜாஜ் மோட்டார் சைக்கிள்களும் 2014 ஆம் ஆண்டில் 05 பிற மோட்டார் சைக்கிள்களும் வாங்கப்பட்டன. 31.12.2024 அன்றைய நிலவரப்படி வாரியத்தில் 02 வண்டிகள் 02 கார்கள் 01 வேன் 01 முச்சக்கர வண்டிகள் மற்றும் 14 மோட்டார் சைக்கிள்கள் உட்பட 20 வாகனங்கள் உள்ளன.

#### 14.1.5.1. தற்போதுள்ள வாகனங்களின் விபரங்கள் (2024.12.31 தினத்திலிருந்து)

| வாகன இல | வகைகள் | முதலவாதக பதிவு செய்யப்பட்ட திகதி | மிகவும் நன்று | நன்று | பழுது பார்க்கப் பட்டு பயன்பப டுத்தும் நிலையில் உள்ளது | பயன்ப் பாட்டிற் குதவாத நிலை | அகற்றல் |
|---|---|---|---|---|---|---|---|
| 250-6095 | கெப் வாகனம் | 1997.10.24 | | | √ | | |
| 252-5463 | டபள் கெப் வாகனம் | 1998.08.14 | | | √ | | |
| KH-4506 | கார் | 2008.09.30 | | √ | | | |
| KX- 0914 | நிசான் ஜீக் கார் | 2013.10.17 | | √ | | | |
| NB - 8428 | டொயொடா ஐ.எஸ்.வேன் | 2014.08.18 | √ | | | | |
| KB - 3112 | Toyota Corolla மோட்டார் வாகனம் | | √ | | | | |
| WP AAG -9346 | பஜாஜ் வகை முச்சக்கர வாகனம் | 2013.04.18 | | √ | | | |
| WP WK-3810 | பஜாஜ் வகை மோட்டார் சைக்கிள் | 2011.04.06 | | √ | | | |
| WP WK-3806 | பஜாஜ் வகை மோட்டார் சைக்கிள் | 2011.04.06 | | √ | | | |
| WP WK-3789 | பஜாஜ் வகை மோட்டார் சைக்கிள் | 2011.04.06 | | √ | | | |
| WP WK-3880 | பஜாஜ் வகை மோட்டார் சைக்கிள் | 2011.04.06 | | √ | | | |
| WP WK-3815 | பஜாஜ் வகை மோட்டார் சைக்கிள் | 2011.04.06 | | | √ | | |
| WP WK-3795 | பஜாஜ் வகை மோட்டார் சைக்கிள் | 2011.04.06 | | √ | | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| WP WK-3801 | பஜாஜ் வகை மோட்டார் சைக்கிள் | 2011.04.06 | | √ | | | |
| WP WK-3882 | பஜாஜ் வகை மோட்டார் சைக்கிள் | 2011.04.06 | | √ | | | |
| WP WK-3787 | பஜாஜ் வகை மோட்டார் சைக்கிள் | 2011.04.06 | | √ | | | |
| WP BAR-3240 | பஜாஜ் வகை மோட்டார் சைக்கிள் | 2014.01.27 | | √ | | | |
| WP BAR-3263 | பஜாஜ் வகை மோட்டார் சைக்கிள் | 2014.01.27 | | √ | | | |
| WP BAR-3250 | பஜாஜ் வகை மோட்டார் சைக்கிள் | 2014.01.27 | | √ | | | |
| WP BAU-0765 | ஸ்கூட்டி வகை மோட்டார் சைக்கிள் | 2014.03.19 | | √ | | | |
| WP BAU-0769 | ஸ்கூட்டி வகை மோட்டார் சைக்கிள் | 2014.03.19 | | √ | | | |
| WP KJ 6856 | ஜூப் வாகனம் | 2011.06.13 | √ | | | | |
| WP CAK 5812 | Toyota-Axio மோட்டர் வாகனம் | | √ | | | | |

### 14.1.6. நிர்வாகப் பிரிவின் எல்லைகள்

1. தற்போது 48 வெற்றிடங்கள் காணப்படுவதுடன் இப்பணியிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்யுமாறு அமைச்சுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.இவ்வெற்றிமாக உள்ள பதவிகளுக்கு உரியப் படிவத்தின் மூலம் ஆட்சேர்ப்பு செய்வதற்காக பொதுச்சேவை ஆட்சேர்ப்பு குழுவிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது.அதன்படி அரச சேவையில் ஆட்சேர்ப்பு செயன்முறையை மீளாய்வு செய்வதற்காக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட உத்தியோத்தர்கள் குழுவுக்கு 2024 ஆம் திகதி MRDSS&CE/ADM/12/SSB/29 என்ற இலக்கமுடைய கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

2. மாவட்ட அலுவலகங்களுக்கு சேவை நடவடிக்கைகளை பன்முகப்படுத்து-வதற்காக பௌதிக மற்றும் மனித வளத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்தல்.

3. தலைமை அலுவலகக் கட்டிடத்தில் தற்போது பதவியணியினறுக்கு கூட்டங்களை நடாத்துவதற்கு வசதிகளின்மையினால், கேட்போர் கூடமொன்றினை நிர்மாணிப்பதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

4. இச்சபையின் பணிகளின் பொருட்டு மாவட்ட அலுவலகங்களை தாபிக்கப்பட்டுள்ளதுடன், தொழில்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்கையில், உத்தியோகத்தர்களின் கடமைப்பொருட்டான போக்குவரத்து தேவைகளை பூர்த்தி செய்வதற்கு போதியளவிலான வாகனங்கள் இல்லாத படியால் அதற்கான வசதிகளை ஏற்படுத்தல் .

5. சபையின் ஊழியர்களின் நலன் மற்றும் நாட்டின் பொருளாதார நிலைமை காரணமாக, சலுகை ரீதியிலான வட்டிக் கடன் பெறுவதற்கான ஆற்றல் குறைவடைந்தமையால் ஊழியர்களின் அதிருப்தி மற்றும் அவ்வாறு ஊழியர்களுக்கு கடன் வழங்குவதற்கு போதுமான பண இருப்பு சபையிடம் இல்லாமை.

## 14.2. சமூகப் பாதுகாப்புப் பிரிவு

### 14.2.1. பிரதான செயற்பாடுகள்

1. சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக, குறித்த திட்டத்தைச் செயல்படுத்தும் அலுவலர்களையும், இலக்கு சமூகத்தையும் அறிவுறுத்தல்.
2. திட்டத்தைப் பற்றி அறிவித்த பின்னர், அங்கத்துவம் வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
3. உறுப்பினர்களுக்குத் தேவையான பாஸ் அட்டைகள், தவணைத் தொகை செலுத்தல் மற்றும் சான்றிதழ்களை வழங்குதல்.
4. தலைமை அலுவலகத்தின் சமூக பாதுகாப்பு பிரிவு மற்றும் 25 மாவட்ட அலுவலகங்களை நிருவகித்து சேவை நடவடிக்கைகளை வினைத்திறனாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல்
5. நிறுவனங்கள், அலுவலர்கள் மற்றும் பல்வகை அமைப்புகளை ஒருங்கிணைத்து ஓய்வூதிய திட்டம் நடைமுறைப்படுத்துவதற்கு செயலாற்றுதல்.

### 14.2.2. கொடுப்பனவின் நலள்கன்

1. அங்கத்தவர் 60 வயது பூர்த்தியான திகதியிலிருந்து உயிர்வாழும் காலம் வரை தொடர்ச்சியாக மாதாந்தம் ஓய்வூதியம் வழங்குதல்.
2. ஓய்வூதியதாரர் 80 வயதினை அடைவதற்கு முன் இறக்க நேரின் ஓய்வூதியதாரரது 80 வயது வரையிலான கொடுப்பனவினை அவரது மனைவி அல்லது பரிந்துரைக்கப்பட்ட நபருக்கு ஓய்வூதியமானது வழங்கப்படும்
3. அங்கத்தவர் 60 வயதினைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர் நிகழும் அங்கத்தவரின் மரணம் தொடர்பில், சார்ந்துள்ளவர்களுக்கு நலன் வழங்குதல், பகுதியளவிலான இயலாமை, முழுமையான இயலாமை நலன்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
4. “**ஆரஸ்ஸாவ**” முன்திட்டமிட்ட ஓய்வூதியப் திட்டத்தின்கீழ் மேலதிக நலன்களை வழங்குதல்.

### 14.2.3.சேவை அலகுகள் மற்றும் மாவட்ட அலுவலகங்கள்

சான்றிதழ் சேவைகள்இ ஓய்வூதியம் மற்றும் காப்புறுதி அடிப்படையில்இ பிரதான அலுவலகத்தில் 03 சேவை பிரிவுகளாலும், அனைத்து மாவட்டங்களிலும் தாபிக்கப்பட்டுள்ள 25 அலுவலகங்கள் ஊடாகவும் சேவை நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படுகிறது. 25 மாவட்ட அலுவலகங்களை 6 வலயங்களாகப் பிரிக்கப்பட்டு 06 சிரேஷ்ட ஒருங்கிணைப்பு அலுவலர்களின் மேற்பார்வையின் கீழ் கையாளப்படுகின்றன.

### 14.2.4.பிரேரணைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல் மற்றும் தொடர்புபடும் அலுவலர்கள்

மாவட்ட அலுவலகங்களுக்கு ஒருங்கிணைப்பு அலுவலர்கள் மற்றும் உதவி பதவியணி நியமிக்கப்பட்டுள்ளதுடன், அவர்கள் மாவட்ட நடவடிக்கைகளை தொழில்படுத்தல் , ஒருங்கிணைப்பு மற்றும் நேரடி ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். பெண்கள்இ சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு மூலம் பிரதேச செயலக மட்டத்தில் இணைக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் பிரதேச செயலக மட்டத்தில் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படுகிறது. மேலும் பல்வேறு அமைச்சுக்கள் திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களுடன் இணைந்து திட்டத்தை செயல்படுத்துவதற்கு, குறித்த அலுவலர்களின் தலையீட்டைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

### 14.2.5. சமூகப்பாதுகாப்பு பிரிவின் பிரதான அலுவலகத்தின் பதவியணி-2024.12.31 தினத்திலிருந்து

**தலைமை அலுவலகத்தின் பிரதான பதவியாளர்கள்**

| பதவி | பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|
| பிரதி பொதுமுகாமையாளர்(சமூகப் பாதுகாப்பு) | 01 |
| உதவி பொதுமுகாமையாளர(ஆட்சேர்ப்பு மற்றும் மாவட்ட நிர்வாகம்) | 01 |
| உதவி பொதுமுகாமையாளர(ஓய்வூதியம்/காப்புறுதி | 01 |
| முகாமையாளர்/ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் | |
| முகாமையாளர் (சான்றுறுதிச் சேவை) | 01 |
| முகாமையாளர் (காப்புறுதி) | 00 |
| சமூக பாதுகாப்பு அதிகாரி(ஓய்வூதியம்) | 01 |
| ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள் | 02 |
| முகாமைத்துவ உதவியாளர்கள் | 14 |
| அலுவலகப் பணியாளர்கள் | 03 |
| **மொத்தம்** | **24** |

**மாவட்ட அலுவலகங்களின் பதவிகள்**

| பதவிகள் | பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|
| சிரேஷ்ட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள் | 05 |
| ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள் | 30 |
| முகாமைத்துவ உதவியாளர்கள் | 20 |
| அலுவலக பணியாளர்கள் | 23 |
| மொத்தம் | **78** |

## 14.2.6.சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத்திட்டம்

2024 ஆம் ஆண்டில் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத்திட்டத்திற்கு மாவட்ட மட்டத்தில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட புதிய அங்கத்தவர்கள் தொடர்பிலான முன்னேற்றம்

| தொடர் இல | மாவட்டம் | 2024 ஆம் ஆண்டில் சேர்த்துக் கொள்ளப்பட்ட உறுப்பினர்கள் | தொடர் இல | மாவட்டம் | 2024 ஆம் ஆண்டில் சேர்த்துக் கொள்ளப்பட்ட உறுப்பினர்கள் |
|---|---|---|---|---|---|
| 01 | யாழ்ப்பாணம் | 7,315 | 14 | காலி | 1,202 |
| 02 | மட்டக்களப்பு | 5,630 | 15 | களுத்துறை | 1,311 |
| 03 | பதுளை | 5,182 | 16 | மொனராகலை | 1,152 |
| 04 | கண்டி | 4,595 | 17 | இரத்தினபுரி | 1,053 |
| 05 | குருணாகல் | 4,111 | 18 | புத்தளம் | 709 |
| 06 | அம்பாறை | 3,886 | 19 | அம்பாந்தோட்டை | 627 |
| 07 | மாத்தறை | 2,776 | 20 | கம்பஹா | 664 |
| 08 | கேகாலை | 2,624 | 21 | கொழும்பு | 524 |
| 09 | நுவரெலியா | 2,800 | 22 | மாத்தளை | 497 |
| 10 | முல்லைத்தீவு | 2,563 | 23 | வவுனியா | 442 |
| 11 | கிளிநொச்சி | 2,187 | 24 | அனுராதபுரம் | 233 |
| 12 | திருகோணமலை | 1,990 | 25 | பொலன்னறுவை | 219 |
| 13 | மன்னார் | 1,589 | 26 | நேரடி | 99 |
| **மொத்தம்** | | **47,248** | | **மொத்தம்** | **8,732** |
| **முழு கூட்டுத்தொகை 55,980** | | | | | |

2024ஆம் ஆண்டிற்குரிய ஆட்சேர்ப்புகள்(அங்கத்தவர்கள்)




### 14.2.7. புதிய அங்கத்தவர்களை ஆட்சேர்ப்புச் செய்வதன் வருடாந்த முன்னேற்றம்

| தொடர் இல | வருடம் | புதிய ஆட்சேர்ப்புகளின் எண்ணிக்கை | முதல் தவணைப் பணம்(ரூ.) | வருடாந்த தவணைச் சேகரிப்பு(ரூ.) |
|---|---|---|---|---|
| 01 | 2014 | 15,995 | 7.66 | 148.99 |
| 02 | 2015 | 21,599 | 13.79 | 146.38 |
| 03 | 2016 | 72,351 | 40.81 | 148.87 |
| 04 | 2017 | 63,141 | 36.84 | 170.96 |
| 05 | 2018 | 83,362 | 52.18 | 190.46 |
| 06 | 2019 | 38,543 | 37.26 | 198.04 |
| 07 | 2020 | 25,778 | 45.07 | 180.26 |
| 08 | 2021 | 57,803 | 126.33 | 177.57 |
| 09 | 2022 | 56,764 | 114.60 | 223.68 |
| 10 | 2023 | 66,448 | 145.25 | 246.99 |
| 11 | 2024 | 55,964 | 163.29 | 261.77 |



### 14.2.8. 2024 ஆம் ஆண்டிற்கான கொடுப்பனவு நலன்கள்

| விபரம் | எண்ணிக்கை | செலவு(ரு.) |
|---|---|---|
| ஓய்வூதிய கொடுப்பனவு | 36,210 | 429,317,410.79 |
| மரணப் பணிக்கொடை கொடுப்பனவு | 39 | 1,936,326.05 |
| அங்கவீனப் பணிக்கொடைக் கொடுப்பனவு | 24 | 619,492.00 |
| மேலதிக நன்மைகள் 5 ஆந் தரப்புலமைப்பரீட்சில் க.பொ.த(.சா/த),க.பொ.த. (உ/த) | 741 | 8,667,300.09 |
| **மொத்தம்** | **37,014** | **436,497,041.00** |

| தேறிய பங்களிப்பு நிதி மீள வழங்குதல் | எண்ணிக்கை | நிதி(ருபா.) |
|---|---|---|
| | 567 | 25,203,731.00 |

### 14.2.9. 2024 ஆம் வருடத்தில் பங்களிப்பாளர்களிடம் இருந்து சேகரிக்கப்பட்ட தொகை

| ஆட்சேர்ப்பு ஆரம்பக்கட்டணம் வசூலித்தல் | பெறுவனவு(ருபா.) |
|---|---|
| ஆடசேர்ப்பு தவணைக்கட்டணம் | 167,419,023.36 |

### 14.2.10. 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பயிற்சிகள் மற்றும் நடமாடும் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம்

| | எண்ணிக்கை |
|---|---|
| ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் | 3,314 |

## 14.2.11.சமூகப் பாதுகாப்பு பிரிவின் வரையறைகள்

1. பயிற்சியினைப் பெற்றுக் கொண்ட களத்துறை வெளிக்களப் பதவியணியினர் சேவையிலிருந்து விலகுதல் பரவலாகக் காணப்படுவதன் காரணமாக ஊழியர் வந்து செல்லும் போக்குவீதம் உயர்ந்துள்ளதுடன் புதிய உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் மற்றும் அவர்களைப் பயிற்சியளித்து சேவையில் ஈடுபடுத்துவதற்கு நேரிடுதல்.
2. கணினி முறைமை உரியவாறு செயற்படாமையின் காரணமாக வினைத்திறனுடன் கூடிய சேவைப்பெற்றுக்கொள்வதன்மீது பாதகமான தாக்கங்களை ஏற்படுத்துதல்
3. சமூக பாதுகாப்பு திட்டங்களை மேம்படுத்தல் மற்றும் விளம்பர செலவினங்களின் பொருட்டு ஒதுக்கீடுகள் போதுமற்றதாவதால் ஆண்டின் முன்னேற்றம் எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தல்
4. நாட்டில் காணப்படும் பிரச்சினைகளுடன் கூடிய பொருளாதார நிலைமைகள் காரணமாக ஓய்வூதிய திட்டங்கள் போன்ற முதலீடுகளுக்கான முயற்சி முறையாக குறைவடைதல்
5. பிரதேச செயலகங்களுக்கு இணைக்கப்பட்டுள்ள அபிவிருத்தி அலுவலர்களின் பிரயாணச் செலவினங்கள், எழுதுகருவி பொருட்கள், அலுவலக உபகரணங்கள் போன்ற கோரிக்கைகளை நிறைவேற்றுதல் ஆகக் குறைந்த மட்டத்தில் மட்டும் மேற்கொள்ளுதல்.

## 14.3. நிதிப் பிரிவு

### 14.3.1 கடமைப் பொறுப்பு

- வருடாந்த வரவுச் செலவுத்திட்டத்தினை தயாரித்தல்.
- வருடாந்த கொள்முதல் திட்டத்தினைத் தயாரித்தல்.
- மாதாந்த கொள்முதல் திட்ட அறிக்கைகளைத் தயாரித்தல் (வருடாந்த கொள்முதல் தொடர்பான வரவுச் செலவுத்திட்டம்)
- 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், வருடாந்த நிதிசார் கூற்றுக்களைத் தயாரித்தல் குறித்த அறிக்கைகளை கணக்காய்வாளர் அதிபதிக்கு முன்வைத்தல்.
- பொதுத் திறைசேரிக்கு, நேர்வரிசை அமைச்சுக்கு, முகாமைத்துவச் செயற்பாடுகள் தொடர்பில் தேவையான நிதி அறிக்கைகளை அவ்வப்போது தயாரித்தல்.
- நிதிப் பிரிவுக்கு ஏற்புடையதான சகல கணக்குகளையும் புதுப்பித்தல.
- சகல கொடுக்கல் வாங்கல்களுக்கம் ஏற்புடையதான வங்கிக் கணக்குகளை முறைசார் வகையில் பராமரித்தல் மற்றும் வங்கி கணக்கிணக்கக்கூற்றுக்களினைத் தயாரித்தல்.
- மாதாந்த ஓய்வூதியம், பிற சகல கொடுப்பனவுகளையும் முன்னெடுத்தல் மற்றும் கணக்கீடு செய்தல்.
- பங்களிப்பாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளும் நிதியினை விளைத்திறனாக முதலீடு செய்தல்.
- வருடாந்த பொருட் கணக்கெடுப்பு ஆய்வினை முன்னெடுப்பதனூடாக நிறுவனத்தின் நிலையான சொத்துக்கள் தொடர்பிலான அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் முன்வைத்தல்.
- பதவியணியினர் தொடர்பில் மாதாந்த சம்பளம் தயாரித்தல் மற்றும் அறிக்கைகளை தயாரித்தல்.
- முகாமைத்துவத்திற்குத் தேவையான தீர்மானங்களை எடுத்தல் தொடர்பில் முறைசார் மற்றும் சரியான தகவல்களை வழங்குதல்.
- ஓய்வூதியப் பிரேரணைகள் திட்டத்திற்கான அங்கத்துவப் பண வைப்புக்களினைக் கையேற்றல் மற்றும் வங்கியிலிடுதல்.
- சபைக்கு தேவையான எல்லா பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு தேவையான பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்
- வங்கி மற்றும் அஞ்சல் அலுவலகங்கள் மூலம் கிடைக்கப்பெற்ற அங்கத்துவ பணத் தொகை மீது பங்களிப்பு கணக்குகளை இற் பைபடுத்தல்
- வருடாந்தம் வழங்குநர்களை பதிவு செய்வதற்கான பணிகளை மேற்கொள்ளுதல்.
- ஆட்சேர்ப்பு மற்றும் பங்களிப்பு தொகை சேகரிப்பதன் மீது ஊக்குவிப்பு கொடுப்பனவு கணக்கிடல் மற்றும் அதற்கான கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுதல்.
- நிறுவனத்தின் மீண்டுவரும் செலவினங்களுக்கு தேவையான எல்லா கொடுப்பனவு நடவடிக்கைகளையும் முகாமைத்துவம் செய்தல்.
- நிறுவனத்தின் பொருட்களின் இருப்புகளை பராமரித்தல்

- நிறுவனத்தின் செயலற்றுள்ள பங்காளர்களின் கணக்குகளை செயலூக்கப்படுத்துவதற்கு தேவையான கருத்திட்டங்களை நடைமு பைபடுத்தல்.
- நிறுவனத்தொகுதியிருக்கு வழங்கப்பட்ட கடன் தொகை தொடர்பான கணக்குகளை பராமரித்தல்
- கலாகரு ஓய்வூதிய திட்டம் தொடர்பாக ஏற்புடைய கணக்குகளை பராமரித்தல் மற்றும் கலைஞர்களுக்கு ஏற்புடையதான நிலையான வைப்புக் கணக்குகளை திறக்கப்படுதல்.

### 14.3.2 31.12.2024 ஆம் ஆண்டின் நிலவரப்படி நிதிப்பிரிவின் பணியாளர்களின் எண்ணிக்கை

| பதவி | அதிகாரிகளின் எண்ணிக்கை |
|---|---|
| பொது முகாமையாளர்(நிதி) | 01 |
| உதவி முகாமையாளர்(நிதி) | 0 |
| கணக்கு உத்தியோகத்தர்(நிதி) | 01 |
| கணக்கு உத்தியோகத்தர்(காப்பீடு) | 01 |
| புத்தக பொறுப்பாளர் | 01 |
| முகாமை உதவியாளர்கள் | 11 |
| அலுவலக உதவியாளர்கள் | 02 |
| **மொத்தம்** | **17** |

### 14.3.3. நிறுவனத்திற்கு சொந்தமான சொத்துக்கள்

| இலக்கம் | விபரங்கள் | 2024.12.31 தினத்திற்குரிய சொத்துக்கள் |
|---|---|---|
| 01 | கட்டிடங்கள் | 74,371,978.00 |
| 02 | நிலம் | 97,050,000.00 |
| 03 | மோட்டார் வாகனங்கள் | 28,391,562.00 |
| 04 | அலுவலக உபகரணங்கள் | 7,560,004.00 |
| 05 | கணிணிகள் | 8,653,088.00 |
| 06 | தொடர்பு உபகரணங்கள் | - |
| 07 | கணிணி மென்பொருள்கள் | - |
| 08 | ஏனையவை | - |
| 09 | இயந்திரங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 437,929.00 |
| | **மொத்தம்** | **216,464,561.00** |

### 14.3.4.2024 ஆம் ஆண்டிற்குரிய திறைச்சேரியிலிருந்து பெறப்பட்டவை

**தொடர்ச்சி**

| திறைச்சேரியிலிருந்து பெறப்பட்டவை (2024)(ரூபா) | செலவுகள்(ரூ) |
|---|---|
| 153,201,811.00 | **156,156,788.00** |

**மூலதனம்**

| திறைச்சேரியிலிருந்து பெறப்பட்டவை (2024)(ரூபா) | செலவுகள்(ரூ) |
|---|---|
| 5,000,000.00 | **4,990,000.00** |

### 14.3.5.பிற அடைவுகள்

காசோலை எழுதுதல் கணக்கு தயாரித்தல் மற்றும் சம்பள செயலாக்க செயற்பாடுகள் அனைத்தும் கணிணிமயமாக்கப்பட்டுள்ளன.
ஆண்டுதோறும் ஓய்வூதியதிய பங்காளர்களுக்கு சுமார் ரூ.407 மில்லியன் வழங்கப்படுகின்றது மேலும் இலங்கை முழுவதும் அமைந்துள்ள 2000 கூட்டுறவு கிராமமப்புற வங்கிகள் மூலம் ஓய்வூதியம் வழங்கப்படுகின்றது.
தற்போது பங்களிப்பாளர்களின் பங்களிப்புள் மக்கள் வங்கி இலங்கை வங்கி தேசிய சேமிப்பு வங்கி பிராந்திய மேம்பாட்டு வங்கி மற்றும் நாடு முழுவதும் அமைந்துள்ள தபால் நிலையங்கள் மூலம் சேகரிக்கப்படுகின்றன. வெளிநாட்டு ஊழியர்களுக்காக மக்கள் வங்கியில் ஒரு வதிவிட வெளிநாட்டு நாணயக் கணக்கு (RFC) திறக்கப்பட்டுள்ளன. மேலும் பங்களிப்பாளர்களின் பங்களிப்புகள் இதன் மூலம் சேகரிக்கப்டுகின்றன.

## 14.4.உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

### 14.4.1.கடமைப் பொறுப்பு

- அங்கீகரிக்கப்பட்ட பதவியணி, பதவியணி ஆட்சேர்ப்பு மற்றும் சுயவிபரக் கோவைகளைப் பரீட்சித்தல்
- பதவியணியின் உள்வருகை, வெளிச் செல்லுகை மற்றும் விடுமுறைகளைப் பரீட்சித்தல்.
- பதவியணி பயிற்றுவிப்பு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை பரீட்சித்தல்.
- வாகன ஓட்டம் மற்றும் பராமரிப்புச் செயற்பாடுகளைப் பரீட்சித்தல்.
- பராமரிப்புச் செயற்பாடுகள், துப்பரவேற்பாட்டு செயற்பாடுகள் பாதுகாப்புச் சேவை நடவடிக்கைகளை பரீட்சித்தல்.
- திறைசேரி ஒதுக்கீடுகள் கிடைக்கப் பெறுதல் மற்றும் பங்களிப்புத் தவணைப் பணம் கிடைக்கப் பெறுதலை பரீட்சித்தல்.
- பெறுகைச் செயற்பாடுகளை பரீட்சித்தல்.
- சகல மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவுகளைப் பரீட்சித்தல்.
- வங்கிக் கணக்குகள் மற்றும் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றினைத் தயாரிப்பதனைப் பரீட்சித்தல்.
- முதலீட்டுச் செயற்பாடுகளைப் பரீட்சித்தல்.
- கணக்கு அறிக்கைகள் மற்றும் நிதிசார் கூற்றினைத் தயாரித்தல், பரீட்சித்தல்.
- அங்கத்தவர்களைச் ஆட்சேர்த்தல், ஆட்சேர்ப்பு விண்ணப்பப் படிவங்களை கணனிமயப்படுத்தல், உறுதிகளை வழங்குதல் மற்றும் பரீட்சித்தல்.
- தவணைகளை அறவிடுதல், அனுப்புதல் மற்றும் கணக்குகளைப் பரீட்சித்தல்.
- நலன்கள் வழங்கும் செயற்பாடுகளைப் பரீட்சித்தல்.
- அங்கத்துவத்திலிருந்து அகற்றுவதற்கான கொடுப்பனவுகளைப் பரீட்சித்தல்.
- மேம்பாட்டுச் செயற்பாடுகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களைப் பரீட்சித்தல்
- திட்டங்களை தயாரித்தல் மற்றும் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் முன்னேற்றம் பரீட்சித்தல்.
- உடனடி பரீட்சித்தல்.
- மாவட்ட அலுவலகங்கள் உள்ளிட்ட களப் பரிசோதனை.
- விசேட ஒப்படைகள்.
- தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் கணக்காய்வு ஐப்பாடுகள் மற்றும் அறிக்கைகள் என்பவற்றுக்கு பதில் வழங்குவதை ஒருங்கிணைத்தல்.
- பொது தொழில்முயற்சிகள் தொடர்பான செயற்குழு கட்டளைகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பான முன்னேற்றம் சமர்ப்பிக்கையில் ஒருங்கிணைப்புச் செய்தல்

### 14.4.2.விடயப் பரப்பு

- உள்ளக நிர்வாகக் கட்டமைப்பு, அதிகார வரையறைகளை இனங்காணுதல், நிர்வாகச் செயற்பாடுகளில் வினைத்திறன் மற்றும் பதவியணியின் முன்னேற்றம் தொடர்பான தரத்தினை மதிப்பீடு செய்தல்.
- கொடுக்கல் வாங்கல்களை அமுல்படுத்துதல், நிதி முகாமை, வர என்பவற்றை சட்டங்ககள் மற்றும் ஒழுங்கு விதிகளில் காட்டப்பட்டவாறு பரிசோதித்தல்.
- செயற்பாட்டு நடவடிக்கை மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளின் வினைத்திறன் மற்றும் சாதனையினை மதிப்பீடு செய்தல்.
- சொத்துக்களின் முகாமை மற்றும் பாதுகாப்பினை மதிப்பீடு செய்தல்
- வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தின் பிரகாரம் புதிய கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துவதன் முன்னேற்றம் தொடர்பாக மதிப்பீடு செய்தல்
- மாவட்ட செயலகங்களில் செயலாற்றுகை மற்றும் நிதி, நிருவாக நடவடிக்கைகளில் முன்னேற்ற நடவடிக்கைகளை கண்காணித்தல்

### 14.4.3.உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் பிரதான பணியாளர்கள்

| பதவிகள் | உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | 2024.12.31 அன்று சேவையில் பணியமர்த்தப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| உள்ளக கணக்காய்வாளர் | 01 | 01 |
| கணக்காய்வு உத்தயோத்தர் | 02 | 01 |
| புலனாய்வு உத்தியோகத்தர் | 02 | 02 |
| மொத்தம் | **05** | **04** |

### 14.4.4.கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள்

2024 ஆம் ஆண்டின் கணக்காய்வு குழு நடைபெற்ற திகதிகள்

முதலாவது கூட்டம் - 2024 மார்ச் மாதம் 21 ஆம் திகதி
இரண்டாவது கூட்டம் - 2024 ஜீலை மாதம் 17 ஆம் திகதி
மூன்றாவது கூட்டம் - 2024 செப்டெம்பர் மாதம் 12 ஆம் திகதி
நான்காவது கூட்டம் - 2024 டிசம்பர் மாதம் இடம்பெற்றது இருப்பினும் புதிய இயக்குனர்கள் குழு இல்லாமையால் இக் கூட்டமானது முழுவுப்பெறவில்லை

### 14.4.5.2024 ஆம் ஆண்டின் சமர்ப்பிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வு அறிக்கைகள்

| இல | உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் விடயங்கள் | சமர்க்கப்பட்ட திகதி |
|---|---|---|
| 1 | உள்ளக கட்டுப்பாட்டினை மதிப்பீடு செய்தல்-பங்களிப்புத் தொகையை மீள செலுத்துதல். | 2024.01.30 |
| 2 | வருடாந்திர திட்டங்களை தயாரித்தல் | 2024.02.06 |
| 3 | ஓய்வூதியத்திட்டத்திற்கான பங்களிப்பாளர்களை ஆட்சேர்ப்பு செய்தல் | 2024.06.14 |
| 4 | விண்ணப்பங்களை கணினி மயமாக்குதல்,தலைமை அலுவலகத்திற்கு அனுப்புதல் மற்றும் சந்தா ஆட்சேர்ப்பு முன்னேற்றத்தை சமர்ப்பித்தல் | 2024.06.28 |
| 5 | மசகு எண்ணெய் எரிப்பொருட் பாவணை அறிக்கை சமர்ப்பித்தல் | 2024.09.30 |
| 6 | கணினி செயல்முறைகள் மற்றும் அடையாளம் காணப்படாத அறிக்கைகளை சமர்ப்பித்தல் | 2024.09.30 |
| 7 | பங்களிப்புத் தொகையை மீளச் செலுத்துதல் | 2024.10.10 |
| 8 | உள்ளக ஆளுகை மதிப்பீடு ஓய்வூதியம் தயாரித்தல் மற்றும் கொடுப்பனவு செயல்முறை- | 2024.10.15 |
| 9 | நிலையான சொத்துக் கட்டுப்பாடு | 2024.11.08 |
| 10 | வாகனப் பரிபாலனம் மற்றும் பழுதுபார்த்தல் நடவடிக்கை | 2024.11.26 |
| 11 | பற்றுச் சீட்டுப்புத்தகங்கள் பராமரித்தல் | 2024.11.28 |
| 12 | முதலீடு | 2024.12.02 |
| 13 | மேலதிக கல்வி நன்மைகளை வழங்குதல் | 2024.12.03 |
| 14 | உள்ளக கட்டுப்பாட்டு மதிப்பீடு ஊக்குவிப்புத் தொகை வழங்குதல் | 2024.12.17 |
| 15 | சில்லரைப் பணக் கொடுப்பனவு(மாவட்ட அலுவலகங்கள்) | 2024.12.24 |

## 14.4.6.மாவட்ட அலுவலக ஆய்வு

| மாவட்ட அலுவலக ஆய்வு | அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட திகதி |
|---|---|
| மாவட்ட அலுவலக ஆய்வு-கண்டி | 2024.04.22 |
| மாவட்ட அலுவலக ஆய்வு- காலி | 2024.06.14 |
| மாவட்ட அலுவலக ஆய்வு- பொலன்னறுவை | 2024.06.28 |
| மாவட்ட அலுவலக ஆய்வு -மட்டக்களப்பு | 2024.07.26 |

## 14.4.7.பிரதேச செயலகங்களின் ஆய்வு

பிரதேச செயலகங்களின் ஆய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட திகதி

1. பிரதேச செயலகங்களின் ஆய்வு-கேகாலை 2024.05.28

## 14.4.8.விசேட ஆய்வு அறிக்கை

2024 ஆம் ஆண்டு மே மாதத்தில் இரத்தினபுரி மாவட்ட அலுவலகத்தில் இரண்டு தபாற்ச் செலவுப்பட்டியல்களை மீள செலுத்தல். 2024.17.12

### 14.5.தகவல் தொழில்நுட்ப அலகு

### 14.5.1.பிரதான செயற்பாடுகள்

1. புதிய ஓய்வூதிய தகவல் முகாமைத்துவ மென்பொருள் முறைமை தாபிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.
2. நிறுவனத்தில் புதிய மாற்றங்களினை முன்னெடுத்தல் மற்றும் ஏனைய பணிகள் தொடர்பில் உயர் முகாமைத்துவத்திற்குத் தேவையான அறிக்கைகளை வழங்குதல்.
3. கணினி வலையமைப்பினை இற்றைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லுவதற்குத் தேவையான நடவடிக்கைளை முன்னெடுத்தல்.
4. பிரதான அலுவலகத்தில் தாபிக்கப்பட்டுள்ள கணினி நிகழ்ச்சித் திட்டங்களை செயலிழிப்பு இல்லாமல் முன்னெடுத்துச் செல்லுதல் மற்றும் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல்.
5. தற்போதுள்ள மென்பொருள் திட்டத்தின் தரவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல் மற்றும் எதிர்கால நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

## 14.5.2. 2024 ஆம் ஆண்டில் தகவல் தொழிநுட்ப பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

1. சமூக பாதுகாப்பு சபையின் புதிய ஓய்வூதியத்திட்ட முகாமைத்துவத்தினை கணிணி முறைமைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்
2. இலங்கைப் பாதுகாப்புச்சபையின் புதிய இணையத்தளத்தினை புதிப்பித்தல்.
3. அனைத்து மாவட்ட அலுவலகங்களிலும் இணையத்தள சேவையை விரிவுப்படுத்த 4G தரமுடைய ரவுட்டர்கள் வழங்பப்பட்டமை.
4. Google sheet மூலமாக சமூகப் பாதுகாப்புச்சபைக்கு தினசரி ஆடசேர்ப்பிற்கான அறிக்கைகளை வழங்குதல்

5. ˙Zoom தொழிநுட்பத்தின் மூலமாக கூட்டத்தினை நடாத்துதல் மற்றும் கூட்டுறவுகளுக்கு ஆதரவளிக்க தொழிநுட்ப உதவியினை வழங்குதல்
6. மாவட்ட அலுவலகங்களுக்கு கணிணி மற்றும் உபகரணங்கள் வழங்கதல்,பழுதுப் பார்ப்பு மற்றும் தொழிநுட்ப ஆதரவை வழங்கல்
7. ஓய்வூதியக்கொடுப்பனவு மற்றும் நாளாந்த கடமைகளுக்கான தொழிநுட்ப பங்களிப்பினை வழங்குதல்
8. நிறுவகத்தில் மேற்கொள்ளப்படும் அனைத்து செயலமர்வுகளுக்கும் தொழிநுட்ப உதவிகளை வழங்குதல்
9. புதிய கணிணி உபகரணங்களை கொள்முதல் செய்வதற்கு தேவையான தொழிநுட்ப உதவிகளை வழங்குதல் மற்றும் கொள்முதல் நடவடிக்கைகளுக்கான அறிக்கைகளை தயாரித்தல்
10. அதிவேக இணையத்தள வசதியை கருத்திற்க் கொண்டு ADSL இணைப்பினைத் துண்டித்து Fiber இணைப்பினை செயற்ப்படுத்தல்
11. தற்போதுள்ள தொடர்பு விபரங்களைக் கண்டறிய Bizcare வசதியை பயன்ப்படுத்தல்
12. LGN 2.0 நிர்வாக வசதியை பயன்ப்படத்தல்
13. SSB post திட்டத்தினை நிறுவுவதற்கு Cloud space மற்றும் Host Name(socialsecurity,lk) என்பவற்றினைப் பயன்ப்படுத்தல்

### 14.5.3.தகவல் தொழிநுட்ப பிரிவின் பதவியணி

| புதவி | உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை |
|---|---|
| சமூகப் பாதுகாப்பு உத்தியோகத்தர்(தகவல் தொழிநுட்பம்) | 1 |
| தரவுக்கட்டுப்பாட்டாளர் | 1 |
| கணிணி நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்(மென்பொருள்) | 1 |
| கணிணி நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்(வன்பொருள்) | 1 |
| தொழிநுட்ப உதவியாளர் | 1 |
| மொத்தம் | 5 |

## 14.6. மேம்பாட்டுப் பிரிவு

### 14.6.1. பிரதான பணிகள

1. ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டங்களை ஊக்குவிக்கும் பொருட்டு விளம்பர நிகழ்ச்சிகளைத் திட்டமிடுதல் மற்றும் நடாத்துதல்.
2. புதிய இலக்குக் குழுக்களைக் கண்டறிதல் மற்றும் அந்த இலக்குக் குழுக்களின் தேவைக்கேற்ப ஓய்வூதியத் திட்டங்களை மேம்படுத்துதல் மற்றும் அறிமுகப்படுத்துதல்.
3. ஓய்வூதியத் திட்டங்களின் ஊக்குவிப்பு பொருட்டு வெளியக நிறுவனங்கள்இ அமைப்புகள் மற்றும் அலுவலர்களை ஒருங்கிணைத்தல்.
4. வாடிக்கையாளர் கருத்துக்களை பகுப்பாய்வு செய்தல் மற்றும் அதற்கேற்ப தேவையான முன்னேற்றங்களை அடையாளம் காணுதல்.
5. சமூகத்தில் சமூக பாதுகாப்பு பற்றிய அறிவைப் பரப்புவதற்கான திட்டங்களைத் திட்டமிடுதல் மற்றும் நடாத்தல்.

### 14.6.2. 2024 ஆண்டில் மேம்பாடு மற்றும் ஊடக பிரிவுகளால் மேற்கொண்ட பணிகள்

1. முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி வாரத்தை முன்னிட்டு முன்பள்ளி மாணவர்களின் பெற்றோர்கள்இ பாடசாலை மாணவர்கள் சமூகம் மற்றும் அவர்களது பெற்றோர்களுக்கு சமூகப் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் முன்பள்ளி மாணவர்களுக்கு சமூக பாதுகாப்பு ஓய்வூதிய உறுதிகளை பாப்பா/ஜய கொட்டத்துவ மகா வித்தியாலய கேட்போர் கூடத்தில் வழங்குதல்.
2. ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புத் திட்டத்திற்கு உறுப்பினர்களை ஆட்சேர்ப்பு செய்யும் அதிகாரிகளை அங்கீகரிப்பதற்காக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் "சமூக பாதுகாப்பு விருதுகள் விழா 2024" ஐ ஏற்பாடு செய்தல்.
3. இளைஞர்களை சுயதொழிலில் ஈடுபடுவதற்கு ஊக்குவித்தல்இ அவர்களின் திறன்கள் மற்றும் திறன்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு தொடர் நிகழ்ச்சித்திட்டங்கள்இ இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபைஇ பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்ற இளைஞர் குழுக்களை இலக்காகக் கொண்டு 04 நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல்.
4. பாடசாலை மாணவ சமுதாயத்தின் சமூகப்பாதுகாப்பு மற்றும் அதன் தேவை தொடர்பில் தொடர் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தலும் மேற்பார்வை செய்தலும்.
5. ஓய்வூதியத் திட்டங்கள் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக சமூக ஊடகங்கள்இ வானொலிஇ தொலைக்காட்சி மற்றும் பத்திரிகைகள் மூலம் விளம்பர நிகழ்ச்சிகளை வருட காலப்பகுதியில் அமுலாக்குதல்.

### 14.6.3. மேம்பாட்டு பிரிவின் பதவியணி

| பதவி | உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை |
|---|---|
| சமூகப் பாதுகாப்பு உத்தியோகத்தர்(மேம்பாடு) | 1 |
| முகாமைத்துவ உதவியாளர | 1 |
| **மொத்தம்** | 2 |



# கடந்த பத்து ஆண்டுகளிலான நிதிசார் முன்னேற்றத்தின் விசேட அம்சங்கள்

SSB

**FINANCIAL HIGHLIGHTS OF THE PRECEEDING 12 YEARS**

**COMPARISION OF TOTAL COLLECTIONS (WITH INTEREST) AND PAYMENTS TO MEMBERS - YEAR 2013 TO 2024**

All Amounts shown in Rs. Millions




| | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **Total Payment (Rs.)** | 143.03 | 187.80 | 213.99 | 277.24 | 307.11 | 362.44 | 359.22 | 376.34 | 430.50 | 454.81 | 488.54 | 528.99 |
| **Total Collection (Rs.)** | 393.97 | 360.54 | 317.05 | 318.74 | 407.65 | 467.23 | 495.58 | 459.44 | 514.42 | 674.62 | 920.08 | 760.66 |

## FINANCIAL HIGHLIGHTS OF THE PRECEEDING 12 YEARS
## COMPARISION OF TOTAL COLLECTIONS (WITHOUT INTEREST) AND PAYMENTS TO MEMBERS - YEAR 2013 TO 2024




| | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Total Payment (Rs.) | 143.03 | 187.80 | 213.99 | 277.24 | 307.11 | 362.44 | 359.22 | 376.34 | 430.50 | 454.81 | 488.54 | 528.99 |
| Total Collection (Rs.) | 156.39 | 151.66 | 151.76 | 157.31 | 191.24 | 205.64 | 235.66 | 220.88 | 294.15 | 329.15 | 376.93 | 424.62 |

**FINANCIAL HIGHLIGHTS OF THE PRECEEDING 12 YEARS**
**INTEREST INCOME - YEAR 2013 TO 2024**

All Amounts shown in Rs. Millions




| | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Interest Income (Rs.) | 237.57 | 208.88 | 165.28 | 161.43 | 216.41 | 261.59 | 259.92 | 238.56 | 220.26 | 345.48 | 543.16 | 336.04 |

# நிதிசார் பகுப்பாய்வு மற்றும் தொழில்பாட்டு செயலாற்றுகை



## FINANCIAL HIGHLIGHTS- LAST 10 YEARS (FY2013- FY2023)

| Description | | Years | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 |
| New Enrolments for the year | No's | 8,769 | 15,995 | 21,271 | 71,364 | 63,674 | 83,350 | 38,591 | 25,783 | 32,078 | 57,596 | | |
| Avg. no. of members for pension | No's | 15,821 | 20,157 | 22,629 | 25,263 | 27,080 | 28,742 | 30,598 | 31,769 | 32,976 | 34,280 | | |
| | | | | | | | | | | | | | |
| **Cash Inflow** | | | | | | | | | | | | | |
| Members collections | Rs | 156,393,155.00 | 151,660,082.00 | 151,763,891.00 | 157,312,782.00 | 191,236,129.00 | 205,641,471.00 | 235,661,355.00 | 220,875,820.00 | 294,152,727.00 | 329,145,803.00 | 376,926,910.00 | 424,621,485.00 |
| Interest Income | Rs | 237,574,919.00 | 208,879,725.00 | 165,282,624.00 | 161,431,297.00 | 216,409,371.00 | 261,591,395.00 | 259,919,300.00 | 238,562,470.00 | 220,263,741.00 | 345,475,143.00 | 543,161,844.00 | 336,039,301.00 |
| **Total collection for the years** | **Rs** | **393,968,074.00** | **360,539,807.00** | **317,046,515.00** | **318,744,079.00** | **407,645,500.00** | **467,232,866.00** | **495,580,655.00** | **459,438,290.00** | **514,416,468.00** | **674,620,946.00** | **920,088,754.00** | **760,660,786.00** |
| | | | | | | | | | | | | | |
| **Cash Outflow** | | | | | | | | | | | | | |
| Pension Payment | Rs | 127,502,515.00 | 167,727,733.00 | 186,934,897.00 | 234,792,979.00 | 263,264,719.00 | 313,143,500.00 | 312,727,588.00 | 331,553,955.00 | 356,981,876.00 | 380,424,646.00 | 407,000,980.00 | 426,410,069.00 |
| Refund | Rs | 10,367,065.00 | 15,222,020.00 | 24,444,852.00 | 38,481,516.00 | 38,055,553.00 | 32,513,063.00 | 25,304,571.00 | 27,946,174.00 | 18,370,909.00 | 31,448,787.00 | 22,712,140.00 | 25,203,731.00 |
| Death Benefit | Rs | 2,491,977.00 | 2,079,906.00 | 2,139,519.00 | 2,087,804.00 | 1,747,940.00 | 1,962,534.00 | 2,103,055.00 | 2,135,828.00 | 1,584,866.00 | 1,572,044.00 | 2,404,513.00 | 533,000.00 |
| Disable Benefits | Rs | 620,584.00 | 714,620.00 | 404,275.00 | 545,637.00 | 627,967.00 | 543,279.00 | 657,064.00 | 589,719.00 | 713,451.00 | 527,026.00 | 658,570.00 | 627,972.00 |
| Incentives | Rs | 2,043,704.00 | 2,052,379.00 | - | 1,274,872.00 | 880,610.00 | 9,439,135.00 | 15,649,535.00 | 11,188,589.00 | 49,743,046.00 | 35,306,023.00 | 48,338,909.00 | 67,291,441.00 |
| Benificiary Payments | Rs | - | - | 64,000.00 | 57,500.00 | 2,536,568.00 | 4,842,660.00 | 2,775,394.00 | 2,928,000.00 | 3,106,499.00 | 5,528,349.00 | 7,428,819.00 | 8,926,000.00 |
| **Total Cash Outflow** | **Rs** | **143,025,845.00** | **187,796,658.00** | **213,987,543.00** | **277,240,308.00** | **307,113,357.00** | **362,444,171.00** | **359,217,207.00** | **376,342,265.00** | **430,500,647.00** | **454,806,875.00** | **488,543,931.00** | **528,992,213.00** |
| **Excess / Shortage** | **Rs** | **250,942,229.00** | **172,743,149.00** | **103,058,972.00** | **41,503,771.00** | **100,532,143.00** | **104,788,695.00** | **136,363,448.00** | **83,096,025.00** | **83,915,821.00** | **219,814,071.00** | **431,544,823.00** | **231,668,573.00** |
| **Investment Value** | **Rs** | **1,617,153,979.00** | **1,717,590,837.00** | **1,818,136,272.00** | **1,874,773,791.00** | **1,941,057,650.00** | **1,937,822,662.00** | **1,870,775,003.00** | **1,741,510,030.00** | **1,654,232,844.00** | **2,371,021,770.00** | **3,019,434,247.00** | **3,146,391,023.00** |

# இணை குழுக்கள்



- கணக்காய்வு குழு அறிக்கை
- முதலீட்டு குழு அறிக்கை

## கணக்காய்வுக் குழு அறிக்கை

ராஜ்ய நிறுவனங்கள் திணைக்கள சுற்றறிக்கை எண் 01/2021 - இன் **"Guidelines on Corporate Governance for State Owned Enterprises"** எனும் வழிகாட்டுதலின் பிரிவு 4.2 அடிப்படையில், இலங்கை சமூக பாதுகாப்பு மண்டபத்திற்கு கணக்காய்வுக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

### 1. 2024 ஆம் ஆண்டின் கணக்காய்வுக் குழு

| பெயர் | பதவி |
|---|---|
| ஹிமாலி போகொடகெதர மஹத்மி | பணிப்பாளர் (குழுத் தலைவர்) |
| K.K.D. குமாரசிறி கன்னங்கர மஹத்தாயா | பணிப்பாளர் (குழு உறுப்பினர்) |
| K.H.V. ஜயதிலக மஹத்தாயா / K. கபில கஜபால மஹத்தாயா | பணிப்பாளர் (குழு உறுப்பினர்) |

கணக்காய்வுக் குழு பார்வையாளர்:

- D.M.G.V. மற்காந்தி மஹத்மி - தலைமை உள்நாட்டு கணக்காய்வாளர் (பார்வையாளர்) – அமசு அமைச்சு
- M.D.K. மலகல மஹத்மி / K. கருணாரத்ன மஹத்மா – கணக்காய்வு அதிகாரி (பார்வையாளர்) – தேசிய கணக்காய்வு அலுவலகம்

### 2. கணக்காய்வுக் குழுவின் நோக்கங்கள்:

இலங்கை சமூக பாதுகாப்பு மண்டபத்தின் கணக்காய்வுக் குழுவின் நோக்கங்கள் கீழ்வருமாறு ஆகும்

- இலங்கை சமூக பாதுகாப்பு மண்டபம் செயல்படுத்தும் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்புப் பயன்திட்டங்களை மேலும் செயல்திறனுடன் மற்றும் பயன்திறனுடன் செயல்படுத்துவதற்கான வழிகாட்டுதலும் பரிந்துரைகளும் வழங்குதல்.
- மீளளவு மற்றும் மூலதன செலவுகள் மேற்கொள்வது, கணக்கியல் மற்றும் அறிக்கைகள் சமர்ப்பிப்பது, நிதி ஒழுங்குகள் மற்றும் பிற வழிகாட்டுதல்களுக்கு ஏற்ப செயல்படுவதற்கு வழிகாட்டுதல் வழங்கல்.
- கணக்காய்வுக் குழு பரிந்துரைகள் இயல்பாக்கப்பட்டுள்ளதா என்பதை மீளாய்வு செய்து, அவற்றை இயக்குநர் சபையின் கவனத்திற்கு கொண்டு வந்து மண்டபத்தின் மொத்த செயல்திறனை மேம்படுத்துதல்.

### 3. கணக்காய்வுக் குழுவின் கடமைகள்:

இலங்கை சமூக பாதுகாப்பு மண்டபம் செயல்படுத்தும் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்புத் திட்டங்களில் மேலும் அதிகமான பங்கேற்பாளர்களை ஈர்த்தல், அவர்களை திட்டங்களில் நிலைத்திருத்தல் மற்றும் அவர்களுக்கான நன்மைகளை செயல்திறனுடன் வழங்கும் பணிகள் நியாயமான விதத்தில் முன்னெடுக்கப்படுகிறதா என்பதனை உறுதி செய்யும் நோக்கில், கீழ்காணும் விடயங்களை கணக்காய்வுக் குழு ஆய்வு செய்துள்ளது:

1. ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்புத் திட்டங்களில் உறுப்பினர் சேர்க்கை மற்றும் சான்றிதழ்கள் வழங்கும் செயற்பாடுகள் – பற்றி ஆய்வு செய்து பரிந்துரைகள் வழங்குதல்.
2. தொகுப்புத் தொகை சேகரிப்பு மற்றும் முதலீடுகள் பற்றி ஆய்வு செய்து பரிந்துரைகள் வழங்குதல்.
3. ஓய்வூதிய உள்பட உறுப்பினர் நன்மைகள் செலுத்தும் செயற்பாடுகள் பற்றி ஆய்வு செய்து, செயல்திறனை மேம்படுத்த பரிந்துரைகள் வழங்குதல்.
4. பிரச்சார மற்றும் விளம்பர நிகழ்ச்சிகளின் பயன்திறனை ஆய்வு செய்து பரிந்துரைகள் வழங்குதல்.
5. மீளளவு மற்றும் மூலதனச் செலவுகள், நிதி ஒழுங்குகள், சுற்றறிக்கைகள் மற்றும் பிற வழிகாட்டுதல்களுக்கு ஏற்ப மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதை பரிசீலித்து பரிந்துரைகள் வழங்கலும், நிர்வாக செயல்பாடுகள் தொடர்பாக பரிந்துரைகள் வழங்கலும் செய்வது.

**4. உள்நாட்டு கணக்காய்வு**

உள்நிகழ்வுகளை கண்காணிக்கும் ஆண்டு திட்டத்தை அனுமதித்தல், உள்நிகழ்வு கண்காணிப்பு பிரிவின் காலாண்டு அறிக்கையைச் சரிபார்த்தல் மற்றும் உள்நிகழ்வு கண்காணிப்பு அறிக்கைகளில் உள்ள காண்டுகளை மற்றும் அவற்றுக்கான பிரிவுகள் அளித்த பதில்களை பரிசீலனை செய்தல், அவை வெளிப்படுத்தும் பலவீனங்களை குறைக்க பரிந்துரைகளை வழங்கல்

**5.கணக்காயர் விசாரணைகள் மற்றும் வரைமுறை கணக்காயர் அறிக்கைகள்**

தேசிய கணக்காய்வாளர் திணைக்களத்தால் அனுப்பப்பட்ட கணக்காய்வாளர் விசாரணைகள் மற்றும் சுருக்கமான கணக்காய்வாளர் அறிக்கைகளில் உள்ள காண்டுகள் தொடர்பாக திருத்தும் நடவடிக்கைகள் எடுக்க பரிந்துரைகள் வழங்கும் பணி 2024ஆம் ஆண்டு நடைபெற்ற கணக்காய்வுக் குழு கூட்டங்களில் மேற்கொள்ளப்பட்டது.

**6.கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் - 2024 வருடம்**

- முதல் கூட்டம் - 2024 மார்ச் 21
- இரண்டாவது கூட்டம் - 2024 ஜூலை 17
- மூன்றாவது கூட்டம் - 2024 செப்டெம்பர் 12
- நான்காவது கூட்டம் - 2024 ஆண்டின் இறுதி காலாண்டில் நடத்த திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், 2024 அக்டோபர் மாதத்தில் கணக்காய்வுக் குழு உறுப்பினர்களாக இருந்த குழுத் தலைவர் உறுப்பினர்கள் பதவியிலிருந்து விலகியதால், கூட்டத்தை நடத்த முடியவில்லை.

கணக்காய்வுக் குழுவின் சார்பாக,

ஹிமாலி போகொடகெடர
கணக்காய்வுக் குழு தலைவர்
2025.04

**இலங்கை சமூக பாதுகாப்பு வாரியம்**

**கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் பொதுமக்கள் அதிகாரமூட்டல் அமைச்சு**

**முதலீட்டு குழு அறிக்கை - 2024**

01. **அமைப்பு**

மறுஆய்வு செய்யப்பட்ட ஆண்டில் குழுவின் உறுப்பினர்கள் கீழ்வருமாறு இருந்தனர்:

| | |
|---|---|
| பி.எஸ்.எஸ். திக்வெல்லை | தலைவர் |
| ம்.கே.பி. திசாநாயக்கா | தலைவர் |
| கே.ஏ. எஸ்.பி. களுவாரச்சி | பொது மேலாளர் |
| எச்.ஜி.எஸ்.டி. வித்யாரத்ன | நிர்வாகத் துணை ஆணையர் – நிதி |
| கே.பி.ஜி.எச்.என். காரியவசம் | நிர்வாகத் துணை ஆணையர் – நிதி |
| டபிள்யூ.எஸ்.பி. பரநான்து | உதவி பொதுநிர்வாக அதிகாரி – நிதி |

02. **கூட்டங்கள்**

| பெயர் | கலந்து கொண்ட கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| பி.எஸ்.எஸ். திக்வெல்லை | 19 / 28 |
| ம்.கே.பி. திசாநாயக்கா | 03 / 28 |
| கே.ஏ. எஸ்.பி. களுவாரச்சி | 28 / 28 |
| எச்.ஜி.எஸ்.டி. வித்யாரத்ன | 08 / 28 |
| கே.பி.ஜி.எச்.என். காரியவசம் | 11 / 28 |
| டபிள்யூ.எஸ்.பி. பரநான்து | 17 / 28 |

இன்வெஸ்ட்மெண்ட் கமிட்டி உரியவாறு தொடர்புடைய உள்நாட்டு உறுப்பினர்களால் அமைக்கப்பட்டுள்ளது. அபாய நோக்கத்துடன் கூடிய முதலீடுகள் தொடர்பான கருத்துகள் மற்றும் அபிப்பிராயங்களை அறிந்து கொள்வதற்காக, கமிட்டி ஒவ்வொரு முதலீட்டுக்கும் முன் கூடுகிறது.

முதலீட்டுகளுடன் தொடர்புடைய அமைச்சின் முதன்மையான நோக்கம், நிதி தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் திரவத்தன்மையை நிர்வகிக்கும் போது, முதலீட்டுத் தொகையை பாதுகாப்பதோடு, அங்கீகாரம் பெற்ற முதலீட்டுகளை திறமையாக பயன்படுத்தி அதிகபட்ச முதலீட்டு வருமானத்தை ஏற்படுத்துவதாகும். இந்தச் செயலின் பரிணாமமாக, கீழே விளக்கப்பட்ட முக்கிய இலக்குகள் நடைமுறையில் உணர்த்தப்படுவதை உறுதி செய்ய அமைச்சு பாடுபடுகிறது.

- பாதுகாப்பு

  முதலீட்டு மூலதனத்தின் பாதுகாப்பை உறுதி செய்வதே மன்றத்தின் முதன்மை இலக்காகும். இந்த மூலதனத்தின் பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு, மன்றத்தின் முழுமையான அதிகமான நிதி, அரசாங்க வங்கிகளில் நிலையான வைப்புத் தொகைகளாக முதலீடு செய்யப்படுகிறது.

- திரவத்தன்மை

முக்கிய நிதித் தேவை ஏற்படாமல், எதிர்காலத்தில் எதிர்பார்க்கப்படும் அனைத்து செயல்பாடுகளின் தேவைகள் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் திரவத்தன்மை நிலையை பராமரிக்க முதலீட்டு குழு நடவடிக்கை எடுக்கிறது.

- முதலீட்டு வருமானம்

கணக்கு வரம்புகள் மற்றும் பணப்புழக்க தேவைகளை கணக்கில் கொண்டு, கிடைக்கக்கூடிய அதிகபட்ச வருமானத்தைப் பெறுவதற்காக முதலீட்டு களஞ்சியத்தை திட்டமிட வேண்டும். அதற்கேற்ப, உயர்ந்த வட்டியளவுகள் மற்றும் முதலீட்டுப் பத்திரங்களின் அபாய நிலைகள் கருத்தில் கொண்டு, 2024ஆம் ஆண்டில் 12.50%, 12.70%, 11.75%, 11.60%, 09.50%, 09.25%, 09.00%, 09.35% மற்றும் 08.65% என்ற வட்டியளவுகளில் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| ........................................ | ........................................ |
| கே. பி. ஜி. எச். என். காரியவசம் | கே. ஏஸ். பி. கலுவாரச்சி |
| துணை பணிப்பாளர் - நிதி | பொது மேலாளர் |



## கணக்காய்வாளர் அதிபதி அறிக்கை

# 2024 கணக்காய்வாளர் அதிபதி அறிக்கை தொடர்பில் முகாமைத்துவத்தின் அபிப்பிராயம்

## இறுதி கணக்கீட்டு கூற்றுகள்

இலங்கை சமூக பாதகாப்பு சபை

இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் 2024 **ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் மற்றும் ஏனைய சட்டத்துடனான ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 ஆவது பிரிவு பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதி அறிக்கை.**

---

## 1. நிதிக் கூற்றுகள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் 2024 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகை கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் போதுமான அளவிலான கணக்கீட்டு கொள்கைகளுக்கு ஏற்புடையதான தகவல்கள் உள்ளடக்கிய நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகளைக் கொண்டமைந்த 2024 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் மற்றும் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகிளன் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பில் 154(6) உறுப்புரை பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்த சபையின் நிதிக் கூற்றுகளின் ஊடாக 2024 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ)

(அ) இலங்கை அரச துறை கணக்கீட்டு தரநிலை 1 இல் பந்தி 88 இன்படி, நிதிநிலைமை அறிக்கையின் முகப்பில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய தகவல்களின் கீழ், இருப்புக்கள் குறிப்பிடுதல் வேண்டுமாயினும், அவை ஏனைய சொத்துக்கள் என்பதன் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தன.

(ஆ) இலங்கை அரச துறை கணக்கீட்டு தரநிலை இலக்கம் 07 இல், பந்தி 49 இன் படி, சொத்துக்களின் முழுமையான வகுப்பு, அதாவது சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் என்பவை மீள்கணிப்பீடு செய்யப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், 2024 சனவரி 01 அன்று ரூ.18,647,000 செலவில் இருந்த மோட்டார் வாகனங்களில், ரூபா.17,765,000 செலவில் இருந்த 07 மோட்டார் வாகனங்கள் மட்டுமே மறுபரிசீலனை செய்யப்பட்ட ஆண்டில் ரூ.28,850,000 இற்கு சபையால் மீள்கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

(இ) வங்கி நடைமுறைக் கணக்கில் ரூபா.4,339,821ஆன வங்கி மேலதிக பற்று நிதி நிலைமை கூற்றில் நடைமுறைப் பொறுப்புகளாக காண்பிக்கப்படுதல் வேண்டுமாயினும், நடைமுறை சொத்துக்களின் கீழ் கையிருப்பு மற்றும் வங்கி மீதியில் காண்பிக்கப்பட்டுள்ளதால் பணம் மற்றும் வங்கி மீதி மற்றும் நடைமுறை பொறுப்புகள் அந்தப் பெறுமதியில் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) நிதியறிக்கைகளில் கடந்த ஆண்டுக்கான ரூபா. 14,729,764 பெறுமதியான சீராக்கங்கள் வெளியிடப்படவில்லை. இது தொடர்பான பெறுமதியை சபை தகவல்களில் இருந்து அடையாளம் காண முடியவில்லை.

(உ) ஓய்வூதியத் திட்ட உறுப்பினர்களால் வங்கி கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்ட தவணைப் பணம், உறுப்பினர்களின் அடையாளங்களை உறுதிப்படுத்தி தனிப்பட்ட கணக்குகளில் கணக்கு வைப்பதற்குப் பதிலாக, அடையாளம் காணப்படாத வைப்புகளாக 2004 ஆம் ஆண்டு முதல் 2024 திசெம்பர் 31 வரை மொத்தம் ரூபா. 3,858,800 திரட்டப்பட்டு, கடந்த ஆண்டுகளுக்கான சரிசெய்தல்களின் கீழ் நிதிக்கு வரவு வைக்கப்பட்டுள்ளது. இந்த மீதியில் 2024 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக ரூபா. 624,877 மீதியும் அடங்கும்.

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

1.3 சபையின் 2024 ஆம் ஆண்டில் உள்ளடக்கப்பட வேண்டிய ஏனைய தகவல்கள்

இந்த கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட நிறுவனத்தின் 2024 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட போதும், நிதிக் கூற்றுகள் மற்றும் அது தொடர்பான எனது கணக்காய்வு அறிக்கையில்

உள்ளடக்கப்படாத தகவல்கள், ஏனைய தகவல்கள் என்று பொருட்படும். இந்த ஏனைய தகவல்களின் பொருட்டு முகாமைத்துவம் பொறுப்பு கூறல் வேண்டும
நிதிக் கூற்றுகள் தொடர்பான எனது அபிப்பிராயத்தில் ஏனைய தகவல்கள் வெளிப்படுத்தப்படுவதில்லை என்பதுடன், நான் அது தொடர்பாக எந்தவொரு வகையிலுமான சான்றுப்படுத்தலையோ அபிப்பிராயத்தையோ தெரிவிக்கமாட்டேன்.

நிதிக் கூற்றுகள் தொடர்பான எனது கணக்காய்வின் பொறுப்பு யாதெனில், மேற்படி அடையாளம் காணப்பட்ட ஏனைய தகவல்களை பெற்றுக்கொள்ள முடியுமானவிடத்து, வாசித்தல் மற்றும் அவ்வாறு மேற்கொள்கையில் ஏனைய தகவல்களை நிதிக் கூற்றுகளுடனோ அல்லது கணக்காய்விலோ வேறு வகையில் பெற்றுக்கொண்ட எனது அறிவுக்கமைவாக பொருண்மையாக பொருந்தவில்லையா என்பதை கவனத்தில் கொள்ளுதலாகும்.

இந்த கணக்காய்வு அறிக்கையில் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட ஏனைய தகவல்கள் மீது என்னால் மேற்கொண்ட பணிகளின் அடிப்படையில், அதில் பொருண்மையாக தவறாக காண்பிக்கப்பட்டுள்ளதென நான் முடிவு செய்தால், செவ்வைப்படுத்துவதற்காக நிருவகிக்கும் தரப்புகளிடம் குறித்த விடயங்களை அறிக்கையிடல் வேண்டும். இது தொடர்பில் எனக்கு அறிக்கையிடுவதற்கு எதுவும் இல்லை.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---------------------------------------------

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்-கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபையின் ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.
- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் அடையாளம் காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டு குறைப்பாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிருவகிக்கும் தரப்புகளை தொடர்பு கொள்கின்றேன்.

2. **ஏனைய சட்டத்துடனான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பான அறிக்கை**

---

**2.1** 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க கணக்காய்வு சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கமைவாக, கணக்காய்விற்கு தேவையான எல்லா தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன், எனது பரிசோதனையில் அறிய வருகின்ற வகையில் உரிய நிதி அறிக்கைகள் நிறுவனம் பேணிச் சென்றிருந்தது.

2.1.2 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில 6 (1) (ஈ) (III) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி சபையின் நிதிக் கூற்றுகள் கடந்த ஆண்டுடன் ஒத்துள்ளது.

2.1.3 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 6 (1) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி கடந்த ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள், சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2.2** கடைபிடிக்கப்பட்ட நடைமுறைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சாட்சிகள் மீதும் அளவு ரீதியிலான விடயங்களுக்கு வரையறைக்குட்படுத்தியதால், பின்வரும் வெளிப்படுதல்களை மேற்கொள்வதற்கான எதுவும் எனது கவனத்திற்கு கொண்டு வரவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி தேசிய சபை கட்டுப்பாட்டுச் சபையின் உள்ள எவரேனுமொரு உறுப்பினர் சபையுடன் தொடர்புகொண்டு ஏதேனும் உடன்படிக்கை தொடர்பில் நேரடியாகவோ மறைமுகமாகவோ பொதுவான வணிகப் போக்கிற்கு அப்பாற்பட்டுள்ளது என்பது தொடர்பாக,

2.2.2 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி, ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகாது செயற்படுதல் தொடர்பாக,

| | **சட்டங்கள், விதிகள் ஒழுங்குவிதிகள் என்பவற்றின் தொடர்** | **இணங்காமை** |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதி 177, 2023 திசெம்பர் 29 ஆம் திகதியிடப்பட்ட 05/2023 ஆம் இலக்க வரவு சுற்றறிக்கை மற்றும் திறைசேரி தொழில்பாட்டு பணிப்பாளர் நாயகத்தின் 2024 யூலை 15 ஆம் திகதிய ஆம் இலக்க TO/CFM/01/06/02(i) கடிதம் | 2023 ஆம் ஆண்டின் திசெம்பர் மாதத்திற்கு ஏற்புடையதாக் மாதத்திற்கான சம்பளம் மற்றும் வேதனங்களுக்காக 2023 நவம்பர் மாதத்தில் உண்மையான செலவினம் அடிப்படையாகக் கொண்டு ரூபா.மில்லியன் 8.727 ஐ கோருவதற்குப் பதிலாக பதிலாக, ரூபா. 15.7 மில்லியன் முற்பணம் கோரப்பட்டுள்ளது.<br><br>அதன்படி 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் எஞ்சியிருந்த ரூபா 1.87 மில்லியன் பொது திறைசேரியிடம் வரவு வைக்கப்படுதல் வேண்டுமாயினும், ரூபா 1.38 மில்லியன் மட்டுமே 2024 செப்தெம்பர் 20 ஆம் திகதி திறைசேரி தொழில்பாட்டு திணைக்களத்திடம் வரவு வைக்கப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 2019 திசெம்பர் 17 ஆம் திகதிய பீஎடீ/08/2019 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை | 2020 ஆண்டு முதல் மின்-கொள்முதல் (e-procurement) முறைமைக்கு அமைய வேண்டிய போதிலும், மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட ஆண்டின் இறுதிவரை தேசிய மின்-அரசு கொள்முதல் முறைமையில் (National e-Government Procurement System) சபை பதிவு செய்யப்படவில்லை. |

2.2.3 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி, தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகாத வகையில் செயல்படுதல் தொடர்பாக,

| | தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழு ங்காமை | இணங்கியொழு ங்காமை |
|---|---|---|
| | 1999 ஆம் ஆண்டு 33 ஆம் இலக்க சமூக பாதுகாப்பு சபை (திருத்தம்) சட்டத்தில் 22 ஆவது பிரிவு | சபைக்கு உடனடியாகத் தேவைப்படாத, சபையின் நிதியத்திலுள்ள அனைத்துப் பணத்தையும், அமைச்சர், நிதி அமைச்சரின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கும் சில வகையான பிணையங்களில் சபை முதலீடு செய்ய வேண்டும். இருப்பினும், ரூபா.3,165,578,331 மொத்த மதிப்புள்ள முதலீடுகளுக்கு ஒப்புதல் பெறப்படவில்லை. |

2.2.4 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி, தேசிய சபையின் வளங்கள், காலவரையறைகளினுள்ளும், ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்படவில்லை என்பது தொடர்பாக,

(அ) கொள்முதல் திட்டத்தின்படி, சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்திற்கான புதிய மென்பொருள் அமைப்பு நிறுவப்பட ரூபுர்.12,511,000 நிதி திறைசேரியால் வழங்கப்பட்டது. அதற்கான வழங்குநருடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. 2019 பிப்ருவரி 14 அன்று, முதல் விநியோக தொகுப்பிற்காக 10% கட்டணமாக ரூபா.1,009,250 செலுத்தப்பட்டது. இருப்பினும், மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் திசெம்பர் 31 திகதியில் 8 ஆண்டுகள் கடந்துவிட்டபோதிலும், கணினி அமைப்பை தாபிக்க முடியவில்லை. அதற்காக ரூபா.2,010,525 ஆன முதலீட்டு வட்டி வருமானம் பெற்றுக்கொண்ட போதிலும், ஒதுக்கீடுகளில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்படவில்லை.

(ஆ) 2017 ஆம் ஆண்டில் சபையினால் ஆரம்பிக்கப்பட்ட கலைஞர்களுக்கான ஓய்வூதியத் திட்டத்திற்காக, கலாசார அலுவல்கள் அமைச்சு ரூபா. 94 மில்லியன் நிதியை வழங்கியிருந்தது. இந்த நிதி வங்கிகளில் நிலையான வைப்புகளாக முதலீடு செய்யப்பட்டு, மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி அன்று நிதியிருப்பு ரூ. 186.64 மில்லியன் வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. இதன்படி, கலைஞர்களுக்காகப் பெறப்பட்ட நிதியை உரிய பணிக்காகச் சரியாகப் பயன்படுத்த முகாமைத்துவம் தவறியிருந்தது.

(இ) கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில், மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் உறுப்பினர் ஆட்சேர்ப்பு குறைந்த மட்டத்தில் இருந்தது. 1999 ஆம் ஆண்டு இலக்கம் 33 இன் கீழ் திருத்தப்பட்ட 1996 ஆம் ஆண்டு இலக்கம் 17 இன் சமூக பாதுகாப்பு சபைச் சட்டம் மற்றும் 2006 செப்டம்பர் 25 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி இலக்கம் 1464/05 இல் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதி இலக்கம் 04 இன் படி, சமூக பாதுகாப்பு சபையின் பிரதான சட்டரீதியான நோக்கம் யாதெனில், ஓய்வூதிய உரிமை இல்லாத அல்லது ஓய்வூதியத்துடன் கூடிய பதவியை வகிக்காத அனைத்து அலுவலர்களுக்கும் சமூக பாதுகாப்பு மற்றும் ஓய்வூதியப் பயன் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதாகும். இதற்கமைய, சுயதொழில் புரிபவர்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றத் தவறியதால், பின்வருமாறு செயல்திறன் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தை விட குறைவாகவே இருந்தது.

(i) மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதி நாளின் நிலவரப்படி, ஓய்வூதியத் திட்டத்தில் புதிய பங்களிப்பாளர்களிடமிருந்து பெறப்பட்ட முதல் தவணைத் தொகையின் மொத்த மதிப்பு ரூபா. 163.29 மில்லியனாகும், அதே நேரத்தில் வருடாந்திரத் திரட்டு ரூபா. 261.77 மில்லியனாக இருந்தது. மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் நிதியத்தின் வருமானம் ரூபா. 769.55 மில்லியனாகும். இது உறுப்பினர்களின் பங்களிப்பு மற்றும் முதலீட்டு வட்டி வருமானத்தை உள்ளடக்கியது. பிரதான வருமான ஆதாரமான உறுப்பினர்களின் பங்களிப்பிலிருந்து, மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் 539 உறுப்பினர்கள் ஓய்வூதியம் பெறத் தகுதிபெறும் நாளுக்கு முன்னரும், ஓய்வூதியம் பெறத் தகுதிபெறும் நாளுக்குப் பின்னரும் விலகியதால், ரூபா. 22.12 மில்லியன் திரும்பச் செலுத்தப்பட்டது.

(ii) செயல்திறன் அறிக்கையின்படி, 2024 திசெம்பர் 31 வரை ஓய்வூதியத் திட்டத்தில் 55,964 பங்களிப்பாளர்கள் சேர்க்கப்பட்டிருந்தாலும், 25,510 பங்களிப்பாளர்களுக்கு மட்டுமே சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. அதாவது, 46% பேருக்கு மட்டுமே சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

(iii) ரூபா. 200,000 செலவில் தொழில் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் இளைஞர் குழுக்களைச் சேர்ந்த 400 மாணவர்களுக்கு சுயதொழில் / தொழில்முனைவோர் திறன்களை மேம்படுத்தும் திட்டங்களை நடத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், 298 மாணவர்களுக்கு மட்டுமே அத்திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

(iv) செயலிழந்த உறுப்பினர்களை மீண்டும் செயல்படுத்துதல் திட்டத்தின் மூலம் சுயதொழில் செய்பவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, 5 நடவடிக்கைகளின் கீழ் 2000 உறுப்பினர்களை மீண்டும் செயல்படுத்துவதற்கும் ரூபா. 10 மில்லியன் திரட்டுவதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது. இருப்பினும், 316 உறுப்பினர்கள் மட்டுமே மீண்டும் செயல்படுத்தப்பட்டுள்ளனர், மேலும் திரட்டப்பட்ட தொகை ரூபா. 5.47 மில்லியனாக இருந்தது.

(v) முந்தைய ஆண்டில் மூலதன ஒதுக்கீடாக ரூப. 17.03 மில்லியன் செலவில் புதிய ஓய்வூதியத் தகவல் முகாமைத்துவக் கணினி அமைப்பை நிறுவுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், வழங்குநரைத் தெரிவுசெய்வதும், அதற்கான பணிப்பாளர் சபையின் ஒப்புதலைப் பெறுவதும் மட்டுமே மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) ஊழியர் கடன் நிலுவைகளில் உள்ள இடர் கடன் II இன் கீழ், ரூபா. 88,999 நிலுவைத் தொகை 2000 ஆம் ஆண்டிலிருந்து இருந்து வருகிறது. 16 ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும், இதை வசூலிக்கவோ பதிவழிக்கவோ எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல், தொடர்ந்து நிதி அறிக்கைகளில் காட்டப்பட்டு வருகிறது. மேலும், 2022 ஆம் ஆண்டில் ஒரு அலுவலருக்கு வழங்கப்பட்ட ரூபா. 130,561 கடனுக்கும், ரூபா. 14,623 வட்டிக்கும் 2024 ஆம் ஆண்டில் எந்த தவணை தொகையும் வசூலிக்கப்படவில்லை.

2.3 ஏனைய விடயங்கள்

(அ) அலுவலர்கள் நீண்டகாலமாக இடமாற்றக் கோரிக்கைகளை முன்வைக்காமை, நிர்வாகம் இடமாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்காதது, சபையின் உள்ளக இடமாற்றங்கள் மற்றும் பணிகளை மாற்றக்கூடிய அலுவலர்கள் நீண்டகாலமாக ஒரே பணியில் ஈடுபடுவது போன்ற காரணங்களால், அலுவலர்களை இடமாற்றம் செய்வதன் மூலம் அடைய எதிர்பார்க்கப்படும் அலுவலரின் தொழில்சார் அபிவிருத்தி, ஆற்றல் மேம்பாடு, அனுபவத்தை பெற்றுக்கொள்ளுதல், நிறுவனத்தின் வினைத்திறன், மற்றும் உற்பதர்தி திறனை விருத்தி செய்தல் அடங்கலாக நோக்கங்களை திணைக்களத்தால் நிறைவேற்றுவதற்கு முடியவில்லை:

(ஆ) சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் எண்ணிக்கை 198 ஆகவும், தற்போதைய பதவியணி எண்ணிக்கை 151 ஆகவும் இருந்தது. இதில், 9 பதவிகளில் 47 வெற்றிடங்கள் காணப்பட்டன. 3 பதவிகளுக்காக 9 அலுவலர்களை பதில் கடமைகளுக்கான நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன.

ஜீ.எச்.டீ.தர்மபால
கணக்காய்வாளர் அதிபதி (ப.க)

| தொடர் இலக்கம் | கணக்காய்வாளர் அதிபதி அறிக்கையில் உள்ளடக்கிய அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் |
|---|---|---|
| **1.2** | **முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை** | |
| **1.2** (அ) | இலங்கை அரச துறை கணக்கீட்டு தரநிலை 1 இல் பந்தி 88 இன்படி, நிதிநிலைமை அறிக்கையின் முகப்பில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய தகவல்களின் கீழ், இருப்புக்கள் குறிப்பிடுதல் வேண்டுமாயினும், அவை ஏனைய சொத்துக்கள் என்பதன் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தன. | இணங்கப்படுகிறது. 2025 ஆம் ஆண்டு தொடக்கம் செவ்வையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| **1.2** (ஆ) | இலங்கை அரச துறை கணக்கீட்டு தரநிலை இலக்கம் 07 இல், பந்தி 49 இன் படி, சொத்துக்களின் முழுமையான வகுப்பு, அதாவது காணி, கட்டிடம் மற்றும் உபகரணங்கள் (Property, Plant, and Equipment) என்பவை மீள்கணிப்பீடு செய்யப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், 2024 சனவரி 01 அன்று ரூ.18,647,000 செலவில் ,ருந்த மோட்டார் வாகனங்களில், ரூ.17,765,000 செலவில் இருந்த 07 மோட்டார் வாகனங்கள் மட்டுமே மறுபரிசீலனை செய்யப்பட்ட ஆண்டில் ரூ.28,850,000 இற்கு சபையால் மீள்கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. | இணங்கப்படுகிறது. எஞ்சிய வாகனங்கள் 15 ( மோட்டார் சைக்கிள்) 2025 ஆம் ஆண்டில் மீள்கணிப்பீடு செய்து பெறுமதியை நிதிக் கூற்றுகளில் உள்ளடக்குவதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது |
| **1.2** () | வங்கி நடைமுறைக் கணக்கில் ரூபா.4,339,821ஆன வங்கி மேலதிக பற்று நிதி நிலைமை கூற்றில் நடைமுறைப் பொறுப்புகளாக காண்பிக்கப்படுதல் வேண்டுமாயினும், நடைமுறை சொத்துக்களின் கீழ் கையிருப்பு மற்றும் வங்கி மீதியில் காண்பிக்கப்பட்டுள்ளதால் பணம் மற்றும் வங்கி மீதி மற்றும் நடைமுறை பொறுப்புகள் அந்தப் பெறுமதியில் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | இணங்கப்படுகிறது. 2025 ஆம் ஆண்டில் வங்கி மேலதிகப்பற்று நடைமுறைப் பறொறுப்புகளின் கீழ் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| **1.2** (ஈ) | நிதியறிக்கைகளில் கடந்த ஆண்டுக்கான ரூபா. 14,729,764 பெறுமதியான சீராக்கங்கள் வெளியிடப்படவில்லை. இது தொடர்பான பெறுமதியை சபை தகவல்களில் இருந்து அடையாளம் காண முடியவில்லை. | இணங்கப்படுகிறது. எதிர்காலத்தில் இவ்வாறான கொடுக்கல் வாங்கல்களை வெளியிடுவதைத் தவறவிடாமல், தேவையான வெளிப்படுத்தல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| தொடர் இலக்கம் | கணக்காய்வாளர் அதிபதி அறிக்கையில் உள்ளடக்கிய அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் |
|---|---|---|
| **1.2** (உ) | ஓய்வூதியத் திட்ட உறுப்பினர்களால் வங்கி கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்ட தவணைப் பணம், உறுப்பினர்களின் அடையாளங்களை உறுதிப்படுத்தி தனிப்பட்ட கணக்குகளில் கணக்கு வைப்பதற்குப் பதிலாக, அடையாளம் காணப்படாத வைப்புகளாக 2004 ஆம் ஆண்டு முதல் 2024 திசெம்பர் 31 வரை மொத்தம் ரூபா. 3,858,800 திரட்டப்பட்டு, கடந்த ஆண்டுகளுக்கான சரிசெய்தல்களின் கீழ் நிதிக்கு வரவு வைக்கப்பட்டுள்ளது. இந்த மீதியில் 2024 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக ரூபா. 624,877 மீதியும் அடங்கும். | அடையாளம் காணப்படாத வைப்புகளை பணிப்பாளர் சபையின் அலோசனை மீது திரட்டிய நிதியத்திடம் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 2.2.1 | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைக்கேற்ப, சபையின் ஆளுகைச் சபையின் எந்தவொரு உறுப்பினரும், சபை சம்பந்தப்பட்ட ஏதேனும் உடன்படிக்கை தொடர்பாக, நேரடியாகவோ அல்லது வேறுவிதமாகவோ, பொதுவான வணிக நிலைமைகளுக்கு அப்பாற்பட்டு ஒரு தொடர்பைக் கொண்டுள்ளார் என்பது தொடர்பாக. | பணிப்பளார் சயையின் உறுப்பினர்களிடத்தில் Related party transactions தொடர்பான கடித ஆவணங்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| 2.2.2 | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (இ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைக்கேற்ப, கீழ்க்கண்ட அவதானிப்புகளைத் தவிர, தொடர்புடைய எழுத்துப்பூர்வ சட்டம் அல்லது சபை நிர்வாகக் குழுவால் வெளியிடப்பட்ட வேறு எந்த பொதுவான அல்லது விசேட கட்டளைகளுக்கும் இணங்காத வகையில் செயல்பட்டுள்ளது என்பது தொடர்பாக | |

| 2.2.2 | **சட்டங்கள், விதிகள் ஒழுங்குவிதிகள் என்பவற்றின் தொடர்** | **இணங்காமை** | 2023 மாதத்திற்காக எதிர்பார்க்கப்பட்ட செலவுகள் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட திரட்டப்பட்ட செலவுகளுக்கான நிதியைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இருப்பினும், தேசிய வரவுசெலவுத் திட்ட திணைக்களத்தின் 2024.11.01 திகதியிட்ட கடிதத்தில் (இணைப்பு 2 - I) வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி பின்வருமாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.<br><br>I. 2023 திசெம்பர் மாத செலவுகள் மற்றும் திரட்டப்பட்ட செலவுகளைச் செலுத்துவதற்காக ரூபா.12,529,723 பயன்படுத்தப்பட்டுள்ளது.<br>II. திறைசேரிக்குச் செலுத்தப்பட வேண்டிய பணத்திற்காக ரூபா.1,784,647 ஈடுசெய்யப்பட்டது (இணைப்பு 2 - II).<br>III. திறைசேரிக்கு ரூபா.1,385,630 திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது (இணைப்பு 2 - III). |
|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதி 177, 2023 திசெம்பர் 29 ஆம் திகதியிடப்பட்ட 05/2023 ஆம் இலக்க வரவு சுற்றறிக்கை மற்றும் திறைசேரி தொழில்பாட்டு பணிப்பாளர் நாயகத்தின் 2024 யூலை 15 ஆம் திகதிய ஆம் இலக்க TO/CFM/01/06/02(i) கடிதம் | 2023 ஆம் ஆண்டின் திசெம்பர் மாதத்திற்கு ஏற்புடையதாக் மாதத்திற்கான சம்பளம் மற்றும் வேதனங்களுக்காக 2023 நவம்பர் மாதத்தில் உண்மையான செலவினம் அடிப்படையாகக் கொண்டு ரூபா.மில்லியன் 8.727 ஐ கோருவதற்குப் பதிலாக பதிலாக, ரூபா. 15.7 மில்லியன் முற்பணம் கோரப்பட்டுள்ளது.<br><br>அதன்படி 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் எஞ்சியிருந்த ரூபா 1.87 மில்லியன் பொது திறைசேரியிடம் வரவு வைக்கப்படுதல் வேண்டுமாயினும், ரூபா 1.38 மில்லியன் மட்டுமே 2024 செப்தெம்பர் 20 ஆம் திகதி திறைசேரி தொழில்பாட்டு திணைக்களத்திடம் வரவு வைக்கப்பட்டிருந்தது. | |

| தொடர் இலக்கம் | கணக்காய்வாளர் அதிபதி அறிக்கையில் உள்ளடக்கிய அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | |
|---|---|---|---|
| (ஆ) | 2019 திசெம்பர் 17 ஆம் திகதிய பீஈடீ/08/2019 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை | 2020 ஆண்டு முதல் மின்-கொள்முதல் (e-procurement) முறைமைக்கு அமைய வேண்டிய போதிலும், மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட ஆண்டின் இறுதிவரை தேசிய மின்-அரசு கொள்முதல் முறைமையில் (National e-Government Procurement System) சபை பதிவு செய்யப்படவில்லை. | கடந்த ஆண்டு தேசிய மின்-அரசு கொள்முதல் முறைமையில் (National e-Government Procurement System) பதிவு செய்ய முயற்சித்தபோதும், எங்கள் நிறுவனம் அந்த முறைமையின் தரவுத்தளத்தில் சேர்க்கப்படாததால், அதை இணையவழி மூலம் செய்ய முடியவில்லை. எவ்வாறாயினும், சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் உதவியுடன், Procurement Entity ஆக P000942 என்ற எண்ணின் கீழ் 2025.06.11 அன்று தேசிய மின்-அரசு கொள்முதல் முறைமையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. |
| 2.2.3 | 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி, தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகாத வகையில் செயல்படுதல் தொடர்பாக, | | |
| | தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுங்காமை | இணங்கியொழுங்காமை | |
| | 1999 ஆம் ஆண்டு 33 ஆம் இலக்க சமூக பாதுகாப்பு சபை (திருத்தம்) சட்டத்தில் 22 ஆவது பிரிவு | சபைக்கு உடனடியாகத் தேவைப்படாத, சபையின் நிதியத்திலுள்ள அனைத்துப் பணத்தையும், அமைச்சர், நிதி அமைச்சரின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கும் சில வகையான | நிறுவனத்தின் ஓய்வூதிய நிதியத்தில், நிதி முதலீடு செய்யப்படுவது, நிதி மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் பொது தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை 02/2018 (திகதி 14.11.2018) இன் படி, அரசாங்கத்தால் |

| | | | |
|---|---|---|---|
| | | பிணையங்களில் சபை முதலீடு செய்ய வேண்டும். இருப்பினும், ரூபா.3,165,578,331 மொத்த மதிப்புள்ள முதலீடுகளுக்கு ஒப்புதல் பெறப்படவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும் அதன் நிர்வாகத்தின் கீழ் உள்ள நிறுவனங்களில் ஆகும். இருப்பினும், முதலீடுகள் முதிர்ச்சியடையும் போது, பொறுப்புள்ள அமைச்சரின் மற்றும் நிதி அமைச்சரின் ஒப்புதலைப் பெறுவதற்கு நடைமுறையில் அதிக நேரம் எடுப்பதால், முதலீடுகளைச் செய்யாமல், நிதியை செயலற்ற கணக்குகளில் வைத்திருக்க வேண்டியுள்ளது.<br><br>இந்த காலதாமதம் காரணமாக, நிறுவனத்திற்கு கணிசமான முதலீட்டு வட்டி இழப்பு ஏற்படலாம். எனவே, சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்தாலும், விடய பொறுப்புள்ள அமைச்சரின் மற்றும் நிதி அமைச்சரின் ஒப்புதலைப் பெறுவது நடைமுறைக்கு உகந்ததல்ல.<br><br>எவ்வாறாயினும், எதிர்காலத்தில் முதலீடுகள் தொடர்பாக பொறுப்புள்ள அமைச்சரிடமிருந்தும் மற்றும் நிதி அமைச்சரிடமிருந்தும் ஒரு பொதுவான ஒப்புதலைப் பெற எதிர்பார்க்கப்படுகிறது. |
| 2.2.4 | 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி, தேசிய சபையின் வளங்கள், காலவரையறைகளினுள்ளும், ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்படவில்லை என்பது தொடர்பாக, | | |

| | | |
|---|---|---|
| 2.2.4 (அ) | கொள்முதல் திட்டத்தின்படி, சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்திற்கான புதிய மென்பொருள் அமைப்பு நிறுவப்பட ரூபுர்.12,511,000 நிதி திறைசேரியால் வழங்கப்பட்டது. அதற்கான வழங்குநருடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.<br><br>2019 பிப்ருவரி 14 அன்று, முதல் விநியோக தொகுப்பிற்காக 10% கட்டணமாக ரூபா.1,009,250 செலுத்தப்பட்டது. இருப்பினும், மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் திசெம்பர் 31 திகதியில் 8 ஆண்டுகள் கடந்துவிட்டபோதிலும், கணினி அமைப்பை தாபிக்க முடியவில்லை.<br><br>இந்த திறைசேரி ஒதுக்கீடு நிலையான வைப்புகளில் முதலீடு செய்யப்படுவதுடன், 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் ரூபா.19,187,308 வரை வைப்பு தொகை அதிகரித்திருந்ததுடன், அதற்காக ரூபா.2,010,525 ஆன முதலீட்டு வட்டி வருமானம் பெற்றுக்கொண்ட போதிலும், ஒதுக்கீடுகளில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்படவில்லை. | 2017 ஆம் ஆண்டு கொள்முதல் திட்டத்தின்படி, சமூக பாதுகாப்பு ஓய்வூதிய முகாமைத்துவ தகவல் அமைப்பை உருவாக்குவதற்காக ஒரு மென்பொருள் வழங்குநர் நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதன் உதவியுடன் ஆரம்பக்கட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டன. முதல் கட்ட விநியோகத்திற்காக ரூ. 1,009,250.00 செலுத்தப்பட்டு, அந்த நிறுவனத்துடனான ஒப்பந்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.<br><br>அதன்பிறகு, ஒரு புதிய மென்பொருள் வழங்குநரைத் தேர்ந்தெடுப்பதற்காக, 2023-09-18 அன்று ஒரு புதிய கொள்முதல் செயல்முறை தொடங்கப்பட்டுள்ளது.<br><br>கொள்முதல் நடைமுறையில் தெரிவு செய்வதற்கு முன்மொழியப்பட்ட நிறுவனம் சமர்ப்பித்த கொள்முதல் திட்டத்தின் வடிவமைப்புச் செலவு, பராமரிப்புச் செலவு மற்றும் சேவையகச் செலவு ஆகியவை அதிகமாக இருந்ததாகவும், ஒதுக்கப்பட்ட நிதியையும் தாண்டியிருந்ததாகவும், அத்துடன் ஏனைய கொள்முதல் வழிகாட்டல்கள் மீறப்பட்டிருந்ததாகவும் குறிப்பிடப்பட்டு கொள்முதல் சபைக்கு நியமனம் பெற்ற புதிய தலைவர், பணிப்பாளர் சபையின் ஆலோசனைகளின் பலனாக 2025.02.06 ஆம் திகதி நடைபெற்ற 303 ஆவது பணிப்பாளர் சபை கூட்டத்தில் |

| | | |
|---|---|---|
| 2.2.4 (ஆ | 2017 ஆம் ஆண்டில் சபையினால் ஆரம்பிக்கப்பட்ட கலைஞர்களுக்கான ஓய்வூதியத் திட்டத்திற்காக, கலாசார அலுவல்கள் அமைச்சு ரூபா. 94 மில்லியன் நிதியை வழங்கியிருந்தது. இந்த நிதி வங்கிகளில் நிலையான வைப்புகளாக முதலீடு செய்யப்பட்டு, மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி அன்று நிதியிருப்பு ரூ. 186.64 மில்லியன் வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. இதன்படி, கலைஞர்களுக்காகப் பெறப்பட்ட நிதியை உரிய பணிக்காகச் சரியாகப் பயன்படுத்த முகாமைத்துவம் தவறியிருந்தது. | அரசாங்க ஓய்வூதியம் பெறாத சுயதொழில் புரிபவர்களுக்கு அரச ஓய்வூதியத்தை சமூக பாதுகாப்பு சபை வழங்குகிறது. இதன் கீழ், கலைஞர்களுக்கு இந்த சேவையை வழங்குவதற்காக கலாச்சார அலுவல்கள் திணைக்களம் 2017 ஆம் ஆண்டு சமூக பாதுகாப்பு சபையுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்வதற்கு இணங்கியுள்ளது.<br><br>இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் உறுப்புரை 2 இன் படி, கலைஞர்களுக்கான ஓய்வூதியத் திட்டத்தின் நோக்கங்களையும் எதிர்பார்ப்புகளையும் அடைவது இரு தரப்பினரின் பொறுப்பாகும். ஓய்வூதியத் திட்டத்தில் உறுப்பினராகச் சேர்க்கப்பட வேண்டிய கலைஞர்களை, ஒப்பந்தத்தின் உறுப்புரை 2 (அ) இன் படி கலாச்சார அலுவல்கள் திணைக்களம் தேர்ந்தெடுத்து சமர்ப்பிக்க வேண்டும்.<br>புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் உறுப்புரை 2 (அ):<br><br>"இலங்கை கலைத் துறைக்கு வெளிப்படையாகப் பங்களிக்கும் கலைஞர்களுக்காக சமூக பாதுகாப்பு சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் "சுரகும" ஓய்வூதியத் திட்டம் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்துப் பலன்களையும் கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தால் தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களுக்கு அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்த இரு தரப்பினரும் ஒப்புக்கொள்கிறார்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| | | இருப்பினும், இத்திட்டத்தை மேலும் கவர்ச்சிகரமாக்குவதற்காக, ஒரு முன்மொழிவு கலாச்சார அலுவல்கள் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தற்போது சமூக பாதுகாப்பு சபையின் ஆட்சேர்ப்பு அலுவலர்களின் வலைப்பின்னல் மூலம் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| 2.2.4 (இ) | கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில், மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் உறுப்பினர் ஆட்சேர்ப்பு குறைந்த மட்டத்தில் இருந்தது. 1999 ஆம் ஆண்டு இலக்கம் 33 இன் கீழ் திருத்தப்பட்ட 1996 ஆம் ஆண்டு இலக்கம் 17 இன் சமூக பாதுகாப்பு சபைச் சட்டம் மற்றும் 2006 செப்டம்பர் 25 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி இலக்கம் 1464/05 இல் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதி இலக்கம் 04 இன் படி, சமூக பாதுகாப்பு சபையின் பிரதான சட்டரீதியான நோக்கம் யாதெனில், ஓய்வூதிய உரிமை இல்லாத அல்லது ஓய்வூதியத்துடன் கூடிய பதவியை வகிக்காத அனைத்து அலுவலர்களுக்கும் சமூக பாதுகாப்பு மற்றும் ஓய்வூதியப் பயன் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதாகும். இதற்கமைய, சுயதொழில் புரிபவர்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றத் தவறியதால், பின்வருமாறு செயல்திறன் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தை விட குறைவாகவே இருந்தது. | |
| 2.2.4 (இ) (i) | மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதி நாளின் நிலவரப்படி, ஓய்வூதியத் திட்டத்தில் புதிய பங்களிப்பாளர்களிடமிருந்து பெறப்பட்ட முதல் தவணைத் தொகையின் மொத்த மதிப்பு ரூபா. 163.29 மில்லியனாகும், அதே நேரத்தில் வருடாந்திரத் திரட்டு ரூபா. 261.77 மில்லியனாக இருந்தது. மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் நிதியத்தின் வருமானம் ரூபா. 769.55 மில்லியனாகும். இது உறுப்பினர்களின் பங்களிப்பு மற்றும் முதலீட்டு வட்டி வருமானத்தை உள்ளடக்கியது. பிரதான வருமான ஆதாரமான உறுப்பினர்களின் | சட்டம் பிராகரம் செலுத்தப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பங்களிப்பிலிருந்து, மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் 539 உறுப்பினர்கள் ஓய்வூதியம் பெறத் தகுதிபெறும் நாளுக்கு முன்னரும், ஓய்வூதியம் பெறத் தகுதிபெறும் நாளுக்குப் பின்னரும் விலகியதால், ரூபா. 22.12 மில்லியன் திரும்பச் செலுத்தப்பட்டது. | |
| 2.2.4 (இ) (ii) | செயல்திறன் அறிக்கையின்படி, 2024 திசெம்பர் 31 வரை ஓய்வூதியத் திட்டத்தில் 55,964 பங்களிப்பாளர்கள் சேர்க்கப்பட்டிருந்தாலும், 25,510 பங்களிப்பாளர்களுக்கு மட்டுமே சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. அதாவது, 46% பேருக்கு மட்டுமே சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. | பங்களிப்புக்கான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், அதைச் சரிபார்த்து, சான்றிதழ், அதனுடன் தொடர்புடைய கையேடு மற்றும் பாஸ் புத்தகம் ஆகியவற்றை வழங்குவதற்கு பொதுவாக மூன்று மாதங்கள் ஆகலாம் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே, திட்டத்தில் உறுப்பினர் சேர்க்கையின் போது வழங்கப்படும் பற்றுச்சீட்டு, சான்றிதழ் வழங்கப்படும் வரை இது ஒரு தற்காலிக சான்றிதழாகக் கருதப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், சில சந்தர்ப்பங்களில் சான்றிதழ்கள் இரண்டு நாட்கள் அல்லது ஒரு வாரத்திற்குள் வழங்கப்பட்ட சந்தர்ப்பங்களும் உள்ளன.<br><br>2024 ஆம் ஆண்டில் சேர்க்கப்பட்ட 56,964 உறுப்பினர்களில், 22,430 பேர் நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கான சான்றிதழ்கள் அனைத்தும் ஏப்ரல் 2025க்குள் முழுமையாக வழங்கப்பட்டுள்ளன.<br><br>இருப்பினும், எதிர்காலத்தில் தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சான்றிதழ்களை வழங்குவதை விரைவுபடுத்துவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. |

| | | |
|---|---|---|
| 2.2.4 (iii) | ரூபா. 200,000 செலவில் தொழில் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் இளைஞர் குழுக்களைச் சேர்ந்த 400 மாணவர்களுக்கு சுயதொழில் / தொழில்முனைவோர் திறன்களை மேம்படுத்தும் திட்டங்களை நடத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், 298 மாணவர்களுக்கு மட்டுமே அத்திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. | நான்கு நிகழ்ச்சிகள் திட்டமிடப்பட்டு, அவை அனைத்தும் வெற்றிகரமாக முடிக்கப்பட்டன. ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் 100 மாணவர்கள் வீதம், நான்கு நிகழ்ச்சிகளுக்கும் மொத்தம் 400 மாணவர்கள் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. இருப்பினும், ஒட்டுமொத்த நிகழ்ச்சிகளிலும் 298 மாணவர்கள் மட்டுமே (அதாவது 74.5%) பங்கேற்றனர்.<br>ரூபா. 200,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தபோதிலும், பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை குறைந்ததாலும், சில செலவுகளைக் குறைக்க முடிந்ததாலும், இந்தத் திட்டங்களை ரூபா. 72,514 செலவில் மேற்கொள்ள முடிந்தது. |
| 2.2.4 (iv) | செயலிழந்த உறுப்பினர்களை மீண்டும் செயல்படுத்துதல் திட்டத்தின் மூலம் சுயதொழில் செய்பவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, 5 நடவடிக்கைகளின் கீழ் 2000 உறுப்பினர்களை மீண்டும் செயல்படுத்துவதற்கும் ரூபா. 10 மில்லியன் திரட்டுவதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது. இருப்பினும், 316 உறுப்பினர்கள் மட்டுமே மீண்டும் செயல்படுத்தப்பட்டுள்ளனர், மேலும் திரட்டப்பட்ட தொகை ரூபா. 5.47 மில்லியனாக இருந்தது. | செயலிழந்த உறுப்பினர்களை மீண்டும் செயல்படுத்துதல் திட்டம் மற்றும் நிலுவைத் தவணைகளை வசூலித்தல் திட்டம் என இரண்டு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தன. இந்த இரண்டு திட்டங்களைச் செயல்படுத்துவதில் ஏற்பட்ட நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக, மேலே குறிப்பிடப்பட்ட செயலிழந்த உறுப்பினர்களை மீண்டும் செயல்படுத்துதல் திட்டமும் நிலுவைத் தவணைகளை வசூலித்தல் திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது. |
| 2.2.4 (v) | முந்தைய ஆண்டில் மூலதன ஒதுக்கீடாக ரூப. 17.03 மில்லியன் செலவில் புதிய ஓய்வூதியத் தகவல் முகாமைத்துவக் கணினி அமைப்பை நிறுவுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், வழங்குநரைத் தெரிவுசெய்வதும், அதற்கான பணிப்பாளர் சபையின் ஒப்புதலைப் பெறுவதும் மட்டுமே மேற்கொள்ளப்பட்டிருந்தது. | கணினி தகவல் அமைப்பை நிறுவுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வழங்குநரின் ஒப்புதலுக்காக பணிப்பாளர் சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டபோது, அதற்கு பணிப்பாளர் சபையின் ஒப்புதல் கிடைக்கவில்லை. இருப்பினும், அஞ்சல் திணைக்களம் அந்த அமைப்பைப் பெறுவதற்கு அனுமதி வழங்கியுள்ளது. |

| | | |
|---|---|---|
| 2.2.4 (ஈ) | ஊழியர் கடன் நிலுவைகளில் உள்ள இடர் கடன் II இன் கீழ், ரூபா. 88,999 நிலுவைத் தொகை 2000 ஆம் ஆண்டிலிருந்து இருந்து வருகிறது. 16 ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும், இதை வசூலிக்கவோ பதிவழிக்கவோ எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல், தொடர்ந்து நிதி அறிக்கைகளில் காட்டப்பட்டு வருகிறது.<br>மேலும், 2022 ஆம் ஆண்டில் ஒரு அலுவலருக்கு வழங்கப்பட்ட ரூபா. 130,561 கடனுக்கும், ரூபா. 14,623 வட்டிக்கும் 2024 ஆம் ஆண்டில் எந்த தவணை தொகையும் வசூலிக்கப்படவில்லை. | இடர் கடன் II இன் கீழ் 2008 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட கடன் தொகை, 2024 பிப்ரவரி மாதம் முதல் ரூபா. 1625.00 மாதாந்திர தவணைகளாக 2025 மே மாதம் வரை 15 தவணைகளில் வசூலிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகையும் தவணைக்காலம் முடியும் வரை தொடர்ந்து வசூலிக்கப்படவுள்ளது. |
| **2.3** | **ஏனைய விடயங்கள்** | |
| 2.3 (அ) | அலுவலர்கள் நீண்டகாலமாக இடமாற்றக் கோரிக்கைகளை முன்வைக்காமை, நிர்வாகம் இடமாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்காதது, சபையின் உள்ளக இடமாற்றங்கள் மற்றும் பணிகளை மாற்றக்கூடிய அலுவலர்கள் நீண்டகாலமாக ஒரே பணியில் ஈடுபடுவது போன்ற காரணங்களால், அலுவலர்களை இடமாற்றம் செய்வதன் மூலம் அடைய எதிர்பார்க்கப்படும் அலுவலரின் தொழில்சார் அபிவிருத்தி, ஆற்றல் மேம்பாடு, அனுபவத்தை பெற்றுக்கொள்ளுதல், நிறுவனத்தின் வினைத்திறன், மற்றும் உற்பதர்தி திறனை விருத்தி செய்தல் அடங்கலாக நோக்கங்களை திணைக்களத்தால் நிறைவேற்றுவதற்கு முடியவில்லை: | இடமாற்றக் குழுவானது விண்ணப்பங்களைக் கோரி பதவியணியின் இடமாற்றங்களை மேற்கொள்கின்றது. சில சமயங்களில், அலுவலர்களின் பற்றாக்குறை மற்றும் ஒவ்வொரு துறைக்கும் தேவையான சிறப்பு அறிவு காரணமாக, நான்கு வருட சேவைக்காலத்தை பூர்த்தி செய்த அலுவலர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற முடியாமல் போன சந்தர்ப்பங்களும் உள்ளன.<br>எவ்வாறாயினும், சபையின் நடைமுறை நிலைமைகளைக் கருத்தில் கொண்டு இடமாற்றங்களைச் செய்ய எதிர்பார்க்கப்படுகிறது. |
| 2.3 (ஆ | சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் எண்ணிக்கை 198 ஆகவும், தற்போதைய பதவியணி எண்ணிக்கை 151 ஆகவும் இருந்தது. இதில், 9 பதவிகளில் 47 வெற்றிடங்கள் காணப்பட்டன. 3 பதவிகளுக்காக 9 அலுவலர்களை பதில் கடமைகளுக்கான நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு அனுமதி கோரப்பட்டபோதிலும், அனுமதி கிடைக்கவில்லை. எனவே, கடமையின் அடிப்படையில் நியமிக்கப்பட்ட அலுவலர்கள் மற்றும் இணைக்கப்பட்ட அபிவிருத்தி அலுவலர்களைக் கொண்டு அத்தியாவசிய குறைந்தபட்ச பணிகளைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |

.....................................

கே.ஏ.எஸ். பிரசன்ன களுஆரச்சி
பொதுமுகாமையாளர்

**SRI LANKA SOCIAL SECURITY BOARD**
**STATEMENT OF FINANCIAL POSITION**
**AS AT 31 ST DECEMBER 2024**

| | NOTE | 2024 Rs | 2023 Rs |
|---|---|---|---|
| **ASSETS** | | | |
| **CURRENT ASSETS** | | | |
| CASH IN HAND AND BANK | 9 | 74,498,741 | 66,268,525 |
| DEPOSITS | 10 | 201,000 | 201,000 |
| ADVANCES | 11 | 19,300 | 96,800 |
| STAFF LOAN | 12 | 11,790,242 | 9,203,900 |
| OTHER ASSETS | 13 | 188,831,905 | 129,542,587 |
